28°c
32 c
26 c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

பக்கம் 24

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 193 வள்ளுவர் ஆண்டு: 2045
வைகாசி 24, சனி 07.06.2014
stay connected with: uthayan.print uthayanprint
Uthayan - A lively National Tamil Daily

# மோடி அரசை ஏய்க்க முயன்றால் பாரதூரமான விளைவுகள் வரும்



ஜெஹான் பெரேரா

## எச்சரிக்கிறார் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா

கொழும்பு, ஜூன் 7
கடந்த காலங்களில் இந்தியாவில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசை ஏமாற்றியதைப் போல மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசையும் ஏமாற்றக் கொழும்பு முயன்றால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என எச்சரிக்கிறார் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா.

**பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறியிருப்பதற்கு இந்திய அரசு உடனடியாகப் பதில் எதனையும் வழங்காது. ஆனால் அதற்குப் பின் விளைவுகள் கண்டிப்பாக இருக்கும்.**

"காங்கிரஸ் அரசுக்குக் கொழும்பு பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. பின்னர் அவற்றை நிறைவேற்றவில்லை. அது போன்றே தற்போதைய மோடி அரசையும் ஏமாற்ற முயன்றால் விளைவுகள் நிச்சயம் பாரதூரமானதாக இருக்கும்" என்றார் அவர்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்க முடியாது என்று, நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அண்மையில் கூறியமை ஜெனீவாவில் எதிர்காலத்தில் மேலும் சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

21ஆம் பக்கம் பார்க்க

## போக்குவரத்து பொலிஸ் அதிகாரம் வழங்கலாம் என ஆலோசனையாம்

### '13'ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரம் இல்லை; அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 7
பொலிஸ் அதிகாரங்கள் இல்லாது, 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பொலிஸ் அதிகாரத்தில் நிர்வாக முகாமைத்துவத்துக்குத் தேவையான குறிப்பாகப் போக்குவரத்து பொலிஸ்துறை உள்ளிட்ட

21ஆம் பக்கம் பார்க்க



## ஜெனிவாக் கூட்டத் தொடரில் மீளவும் இலங்கை விவகாரம்

ஜெனிவா, ஜூன் 7
ஜெனிவாவில் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரிலும், இலங்கை நிலைமை குறித்து விவாதிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 26ஆவது கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் ஆரம்ப உரை நிகழ்த்தும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, தமது பணியகத்தின் செயற்பாடுகளின் நிலை குறித்து

21ஆம் பக்கம் பார்க்க

## 'ஜெ' யின் கருத்துக்கு இலங்கை கண்டனம்

கொழும்பு, ஜூன் 7
இலங்கையில் இனப் படுகொலை நடந்துள்ளது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு மிகவும் பார

21ஆம் பக்கம் பார்க்க

## காலாவதியான பொருள்களின் விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். மாவட்டத்தில் காலாவதியான மருந்துப் பொருள்கள், நிறை குறைவான பொருள் என்பவற்றின் விற்பனை கடந்த இரு மாதங்களில் அதிகரித்துள்ளன என்று தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

21ஆம் பக்கம் பார்க்க




## புலிகளே கடத்தினர் முஸ்லிம்கள் சாட்சி

### ஆணைக்குழு அமர்வுகள் காத்தான்குடியில் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூன் 07
தமிழீழ விடுதலைப் புலிகளே தமது உறவினர்களைக் கடத்திக் கொலை செய்தனர் என்று சாட்சியமளித்துள்ளனர் 49 முஸ்லிம் மக்கள். காத்தான்குடியில் நேற்று நடைபெற்ற காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாகவே அவர்கள் இவ்வாறு சாட்சியமளித்துள்ளனர்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் மட்டக்

21ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணைக்குழு பயங்கரமான அபாயம்

### அபாயச் சங்கு ஊதுகின்றார் தயான்

கொழும்பு, ஜூன் 7
ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தால் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால், அது இலங்கைக்குப் பயங்கரமான அபாயமாக இருக்கக் கூடும் என்று எச்சரித்துள்ளார்

21ஆம் பக்கம் பார்க்க



தயான் ஜயதிலக - கோப்புப் படம்

## கடத்திய முஸ்லிம்களை கொன்றோர் சுதந்திரமாக

### ஆணைக்குழு அமர்வில் சகோதரர் கதறல்

மட்டக்களப்பு ஜூன் 07
குருக்கள் மடத்தில் எனது சகோதரர்களைக் கொலை செய்த சம்பவத்துக்குத் தலைமை தாங்கிய கருணாவும், பிள்ளையானும் இன்றும் சுதந்திரமாக வெளியில் நடமாடித் திரிகின்றனர். கொல்லப்பட்ட எங்கள்

21ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண அமைச்சுகளுக்கு வாகனங்கள் வாங்க 84 மில். நிதி



யாழ்ப்பாணம், ஜூன் 07
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு புதிய சொகுசு பிக்கப்கள் வாங்குவதற்கான கட்டளை (ஓடர்கள்) வழங்கப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு அமைச்சுக்கும் இரண்டு பிக்கப்கள் வீதம் வாங்

21ஆம் பக்கம் பார்க்க

## போதையில் இடையூறு ரூபா 5,000 அபராதம்



யாழ்ப்பாணம், ஜூன் 7
பொது இடத்தில் மது அருந்தியமை மற்றும் போதையில் இடையூறு விளைவித்தமை ஆகியவற்றுக்காக 5 பேருக்கு யாழ். நீதிமன்று 5

21ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய தவிசாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு கீழுள்ள வலி. கிழக்கு பிரதேச சபைக்கு புதிய தவிசாளராக துரைசிங்கம் கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் முன்வைத்த 2014ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் இரண்டு தடவைகள் தோல்வியடைந்த பின்னர் அவர் தவிசாளர் பதவியிலிருந்து உள்ளூராட்சி சட்டத்திற்கமைவாக நீக்கப்பட்டார்.

இதனால் பிரதேச சபையின் இவ்வருட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல், நிதியும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. இந்தப் பிரதேச சபையில் 16 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும், 5 ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# அவதூறு மேற்கொண்டால் இணைய தளத்துக்கு தடை



கொழும்பு, ஜூன் 7

அவதூறு செய்யும் நோக்கில் செயற்பட்டு வரும் இணைய தளங்கள் தடை செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

தனிப்பட்ட நோக்கங்களுக்காக நபர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி அவதூறு செய்யும் இணைய தளங்களை தடை செய்ய வேண்டும் என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அரசு இணைய தளங்களை தடை செய்யுமா என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாகரீகமான சமூகத்திற்கு இடையூறாக அமைந்துள்ள இணைய தளங்களை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் குறித்து பேச்சு நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி உறுப்பினர்களது நற்பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடிய வகையிலும் சில வேளைகளில் இணைய தளங்களில் தகவல் வெளியிடப்படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இணைய தளங்கள் முடக்கப்படுவதற்கு ஊடக அமைச்சரை குற்றம் சுமத்த முடியாது எனவும் ஆளும் கட்சியின் பலம்பொருந்திய நபர்கள் இணைய தளத் தடையின் பின்னணியில் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஆயிரம் ஜெயலலிதா வந்தாலும் கச்சதீவை விட்டுக் கொடுக்கோம்

## அஸ்வர் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 7

"கச்சதீவு இலங்கையின் சொத்து. அதை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆயிரம் ஜெயலலிதாக்கள் உருவாகினாலும் அது நடக்காது" - இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் கூடியது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜனும் புலிகளின் அடிவருடிகளாகவே செயற்பட்டு வருகின்றனர். எங்கெல்லாம் அநியாயம் இடம் பெறுகிறதோ அங்கெல்லாம் குரல் கொடுப்பதற்குத் தயங்க மாட்டேன்.

கச்சதீவு இலங்கையின் சொத்து. அது எமது நாட்டின் முத்து. ஆகவே ஆயிரம் ஜெயலலிதாக்கள் வந்தாலும் கச்சதீவை கொடுக்க மாட்டோம். மீனவர்களின் பிரச்சினை குறித்து நான் குரல் கொடுத்து வருகின்றேன்.

இங்கு இந்த நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஆறுமுகன் இருக்கின்றார். திகாம்பரமும் இருக்கின்றார். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யோகராஜனும் புலிகளின் அடிவருடிகளாக இருக்கின்றனர். புலம் பெயர் சமூகத்தினருடன் இணைந்து நாட்டைத் துண்டாட முயற்சிக்கின்றனர்" - என்று தெரிவித்துள்ளார்.

(ற-10)

# கொன்சலிற்றாவின் கைபேசி தரவுகளைச் சமர்ப்பியுங்கள்

## யாழ்.நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 7

குருநகரைச் சேர்ந்த கொன்சலிற்றா எனும் இளம்பெண் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கில், அவர் பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்தின் 3 மாதங்களுக்கு முன்பிருந்தான அனைத்துத் தரவுகளையும் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம்.

கொன்சலிற்றா கடந்த ஏப்ரல் மாதம் புதுவருடத் தினத்தன்று குருநகர் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது சாவு தொடர்பில், அவரது உறவினர்கள் சந்தேகம் தெரிவித்திருந்ததுடன், கொன்சலிற்றாவின் சாவுக்கு இரு மதகுருக்களே காரணம் என்றும் குற்றஞ்சாட்டியிருந்தனர். அது தொடர்பில் யாழ்.நீதிமன்றில் நடைபெற்றுவருகின்றது. இந்த வழக்கு நேற்று தொடர்விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போதே நீதிமற்று மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பாதிக்கப்பட்டவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள், 'கொன்சலிற்றா சடலமாக மீட்கப்படுவதற்கு 40 நாள்களுக்கு முன்பிருந்து அவர் பயன்படுத்திய கைத்தொலைபேசியின் இலக்கம் பாவனையில் இருக்கவில்லை. அந்த காலப்பகுதியில் மாத்திரம் குறித்த இலக்கத்துக்கு எடுக்கப்பட்ட அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவல்கள் தொடர்பிலேயே பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அந்தக் காலப்பகுதியில் எந்த தரவும் கிடைக்கவில்லை என்று பொலிஸாரால் நீதிமன்றுக்குக் கூறப்பட்டுள்ளது. எனவே அவர் சடலமாக மீட்கப்படுவதற்கு 3 மாத காலத்துக்கு முன்பிருந்தான காலத்தில் குறித்த இலக்கத்துக்கு எடுக்கப்பட்ட அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவல்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்' - என்று கோரினர். அதனையடுத்து கொன்சலிற்றா உயிரிழப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முற்பட்ட தரவுகளைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டது.

அதேவேளை, வழக்கை கைவிடுமாறு கொன்சலிற்றாவின் குடும்பத்துக்கு பலரால் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது என்றும் மன்றில் கூறப்பட்டது. சந்தேகமான தன்மை உள்ளதனால் அது தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டது. விசாரணைகளின் பின்னர் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ற-4)



வற்றாப்பளை அம்மன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு, முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் கடல் விளக்கு ஏற்றப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விநாயகர் ஆலயத்தில் பொங்கல் நடைபெற்று மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு பொங்கல் பொருள்களுடன், கடல்நீரில் எரியும் விளக்கு என்பன வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அதேவேளை, வற்றாப்பளை ஆலய உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அங்கு கடைகள் திறக்கப்பட்டிருக்கும் என்று முல்லைத்தீவு வணிகர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ற)

## வலி. வடக்கு மீள்குடியேற்ற குழுவின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 07

வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் கூட்டம், வலி.வடக்குப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது என்று குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (5)

## முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு

கொழும்பு, ஜூன் 7

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தப் பேராளர் மாநாட்டில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 1,200 பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். மாநாட்டின்போது புதிய செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ற-10)

## மாகாணப் பணிப்பாளராக ராஜேந்திரன் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பலத்த இழுத்தடிப்பின் பின்னர் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக ஆர்.ராஜேந்திரன் நேற்று நியமிக்கப்பட்டார். இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இனைச் சேர்ந்தவர். இவருக்கான நியமனக் கடிதம் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனால் வழங்கப்பட்டது.

முன்னர் இந்தப் பதவியில் இருந்த செல்வராஜா ஓய்வு பெற்றுச் சென்றதையிட்டு பல நாள்களாக வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்தது. அதற்கு ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததோடு விரைவில் மாகாணப் பணிப்பாளரை நியமிக்குமாறும் கோரியிருந்தது. (ற-4)

# இலங்கை வரார் நரேந்திர மோடி; பூட்டானுக்கே முதல் பயணம்

புதுடில்லி, ஜூன் 7

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணத்தில் இலங்கைக்கு முதலிடமில்லை என்பது உறுதியாகியுள்ளது. அவர் இந்த மாதம் தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக பூட்டானுக்குச் செல்லவுள்ளார். அவரது பயணத்துக்கான ஏற்பாடுகள் மற்றும் தங்குமிட ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக, இந்திய அதிகாரிகளின் உயர்மட்டக் குழுவொன்று நேற்று பூட்டானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமது நாட்டுக்கு வருமாறு இலங்கை உட்பட சார்க் நாடுகள் பதவியேற்பு விழாவின் போது அழைப்பு விடுத்திருந்தன. இந்த நிலையில், மோடியின் முதல் வெளிநாட்டுப் பயணம் இலங்கையாக இருக்கலாம் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதுடன், இலங்கை அரசியல் வட்டாரங்களிலிருந்தும் அவ்வாறே கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

ஆயினும், கடந்த சில நாள்களாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணத் திட்டம் குறித்து நடத்தப்பட்ட ஆலோசனையில், இலங்கை, பாகிஸ்தானுக்கான பயணங்கள் குறித்து கவனத்திலேனும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஆப்கான் ஆகிய நாடுகளுக்கு செல்வது குறித்தே, கலந்துரையாடப்பட்டுள்ளது.

இறுதியில் முதல் பயணத்தை இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடான பூட்டானுக்கு மேற்கொள்வது என்று முடிவாகியுள்ளது. அதன்பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரேஸிலில் அடுத்த மாத நடுப்பகுதியில் நடக்கவுள்ள பிறிக்ஸ் அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, தமிழ் நாட்டில் எதிர்ப்புகள் எழும் என்ற காரணத்தாலேயே இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைப் பயணம் குறித்து கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாடுகள் வலுப்பெற்று வரும்நிலையில், அங்கு பயணம் மேற்கொள்வதால் தேவையற்ற விமர்சனங்களும், ஆர்ப்பாட்டங்களும் எழும்.

அதனைக் கருத்தில் கொண்டே அவர் இலங்கைக்கான பயணம் குறித்துச் சிந்திக்கவில்லை என்று அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# வீதித் தடைகள் அகற்றப்பட்டன

தென்மராட்சி, ஜூன் 7
கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் முன்னர் வரணி படைத் தலைமையகம் அமைந்திருந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் நேற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் அகற்றப்பட்டுச் செப்பனிடப்பட்டது.
வரணி பொதுச்சந்தையிலிருந்து வரணி மருத்துவமனைக்கு இடைப்பட்ட வீதியில் அமைக்கப்பட்டிருந்த எட்டு வீதித் தடைத் திட்டிகளே இவ்விதம் அகற்றப்பட்டன.
அங்கு இயங்கிய படை முகாம் எழுதுமட்டுவாழ் பகுதிக்கு மாற்றப்பட்டு அண்மையில் முகாம் அமைந்திருந்த காணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.
அதனையடுத்து வீதித் தடை மேடுகள் அகற்றப்பட்டுள்ளன. இதேவேளை சேதமடைந்து காணப்பட்ட குறித்த வீதியில் கனரக வாகனங்களின் பாவனை அதிகம் காணப்படுவதாலும், காலத்துக்குக் காலம் குறித்த வீதி சீர் செய்யப்படாததாலும் வாகனங்கள் வீதியில் பயணிக்கும்போது சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# அச்சுவேலி கைத்தொழில்பேட்டை வருட இறுதியில் செயற்படலாம்

**24 மணி நேரமும் செயற்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாகச் சேதமடைந்து காணப்பட்டது. அது தற்போது இந்திய அரசின் நிதி உதவியு டன் மீள்கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றது.**

அச்சுவேலி, ஜூன் 7
அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உற்பத்திகளுக்கான தொழிற்சாலைகளின் கட்டுமானப் பணிகள் இந்த வருட இறுதியில் உற்பத்திகள் ஆரம்பிக்கப்படுவதை இலக்காகக் கொண்டு மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கைத்தொழில் பேட்டையில் தொழிற்சாலைகளை நிறுவி செயற்பட வைப்பதற்கான காணித் துண்டங்கள் தொழில் அதிபர்களுக்கு நீண்ட கால குத்தகை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டதை அடுத்து நான்கு தொழிற்சாலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
கடந்த ஞாயிற்றுக்கிழமையும் மற்றொரு தொழிற்சாலைக்கான அடிக்கல் நடப்பட்டது.
கட்டட நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்தும் ஆணிகள், கம்பிகள், பிணைச்சல்கள் உள்ளிட்ட கட்டட உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதற்கானதொரு தொழிற்சாலைக்கே இவ்விதம் அடிக்கல் நடப்பட்டது.
தொழிற்சாலைகளுக்கான கட்டுமானப் பணிகள் விரைவாக நடைபெற்று வருவதால் இந்த வருட இறுதிக்குள் உற்பத்திகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் அதன்போது பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும் என்றும் கூறப்படுகின்றது.
முப்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் பல்வேறு வகையான உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் பணியில் 24 மணி நேரமும் முன்னர் செயற்பட்ட நிலையில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாகச் சேதமடைந்தது. அது தற்போது இந்திய அரசின் நிதி உதவியுடன் மீள்கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றது.
தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான காணித்துண்டங்களுக்கான நீர் விநியோகம், மின் இணைப்பு, உள்ளக போக்குவரத்து, வீதிக் கட்டமைப்பு உள்ளிட்ட வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. முதலாம் கட்ட தொழிற்சாலை நிர்மாணத்துக்கான காணித் துண்டங்களும் குத்தகைக்கு தொழில் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
காணித் துண்டங்களை பொறுப்பேற்றுக் கொண்ட தொழில் அதிபர்கள் தொழிற்சாலைகளுக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பல்வேறுபட்ட தொழிற்சாலைகள் செயற்பட விருப்பதால் பல நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவுள்ளது. தொழிற்சாலைகள் இந்த வருடம் முடிவதற்கு முன்னர் செயற்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தேச இலக்குடன் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (வ-11)

# வெளிமாவட்ட மீனவர் 18 பேர் நாயாறு கடற்பரப்பில் கைது;

## ஒளியைப் பயன்படுத்தி மீன்பிடித்த வேளையில்

**தொழிலுக்குப் பயன்படுத்திய நான்கு வள்ளங்களையும், நான்கு ஜெனரேற்றர்களையும், இயந்திரங்களையும், வலைகளையும் கைப்பற்றினர்.**

முல்லைத்தீவு, ஜூன் 7
நாயாறு கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் ஒளியைப் பயன்படுத்தி மீன்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 18 மீனவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டனர்.
இவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்திய நான்கு வள்ளங்களையும், நான்கு ஜெனரேற்றர்களையும், இயந்திரங்களையும், வலைகளையும் கைப்பற்றிய அதிகாரிகள் மீனவர்களைக் கைதுசெய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.
இவர்களில் எண்மர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் அடுத்து அவர்களுக்குத் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட வள்ளங்கள், வலைகள், ஜெனரேற்றர் அனைத்தையும் அரச உடைமையாக்கும்படி உத்தரவிட்டார்.
குற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த 10 மீனவர் களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டதுடன் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு வள்ளங்களையும் தலா 3 லட்சம் ரூபா காசுப் பிணையில் விடுவித்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு கடற்பரப்பில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஒளியைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து பிரதிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தலைமையில் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற அதிகாரிகள் கடற்படையினரின் உதவியுடன் நான்கு வள்ளங்களில் சட்ட விரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 18 மீனவர்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்தனர். (ஒ-115)

# மாடுகளைப் பதிவு செய்யவும் தவறுவோர் மீது நடவடிக்கை

அச்சுவேலி, ஜூன் 7
யாழ்.மாவட்டத்தில் கால் நடைகள் வளர்ப்பாளர்கள் தத்தமது மாடுகளை பதிவுசெய்து அவற்றின் செவிகளில் இலக்க குறிகள் பொறிக்கும் பணிகள் பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
பண்ணையாளர்கள் மற்றும் மாடு வளர்ப்போர் உரிய படிவத்தில் தமது சுயவிவரங்கள் மற்றும் தமக்குச் சொந்தமான மாடுகள் தொடர்பான விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவேண்டும்.
ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் சகல மாடுகளுக்கும் இலக்கக் குறி பொறிக்கப்படவுள்ளது:
ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு பின்னர் இலக்கக் குறி பொறிக்கப்படாமல் பேணப்படும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு இலக்கக்குறி இல்லாத மாடுகளைக் காணாமற் போகுமிடத்து பொலிஸ் முறைப்பாடுகள் மற்றும் ஏனைய எந்த முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியாது.
18 மாதங்கள் வயதை நிறைவு செய்த மாடுகளுக்கு மாவட்ட இலக்கம், பிரதேச செயலக பிரிவு இலக்கம், பண்ணையாளர்களுக்கான இலக்கம், மாடுகளின் இலக்கம் என்பன மாட்டின் காதில் துளையிட்டுப் பொருத்தப்படவுள்ளன. இதற்கான சேவைக் கட்டணமாக ஒரு மாட்டுக்கு 20 ரூபா வீதம் மாட்டின் உரிமையாளர் கட்டணம் செலுத்தவேண்டும். வேறு எந்தக் கட்டணமும் மாடுகளுக்கு இலக்கம் சூட்டுவது தொடர்பாக செலுத்த வேண்டியதில்லை. என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
குறியீட்டு இலக்கம் காதில் பொருத்தப்படும் மாடுகளின் விவரங்கள் மற்றும் தகவல்கள் பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக முறையான ஆவணங்களில் பதிவு செய்யப்படுவதோடு கணினி மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படவுள்ளன.
பதிவு செய்யப்பட்ட மாடுகள் இறந்துபோதல், காணாமற் போதல், விற்பனை செய்யப்படாமல் கைமாறல், களவு போனமை போன்ற சம்பவங்கள் நடைபெறும்போது அது தொடர்பான தகவல்களைப் பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.
எதிர்காலத்தில் மாடு வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும் உதவிகள், நிவாரணங்கள் பதிவு செய்யப்பட்ட மாடுகளின் இலக்கங்கள் மற்றும் தகவலோடு சம்பந்தப்பட்ட வகையிலேயே மேற்கொள்ளப்படவுள்ளன. (வ-11)

# மேல் மாகாண கல்வி அதிகாரிகள் தென்மராட்சிக்கு

தென்மராட்சி, ஜூன் 7
மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் நேற்று முன்தினம் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு வருகை தந்து பார்வையிட்டனர்.
வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாகப் பார்வையிட வருகை தந்த மேல் மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளே சாவகச்சேரிக்குப் பயணம் செய்தனர்.
அவர்கள் தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகம், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றையும் பார்வையிட்டுச் சென்றனர். (வ-9)

# சாவகச்சேரியில் நேற்று புகைத்தலுக்கு எதிரான பேரணி

தென்மராட்சி, ஜூன் 7
புகைத்தல் மற்றும் மது பாவனை எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி நேற்றுச் சாவகச்சேரியில் இடம்பெற்றது.
சாவகச்சேரி மதுவரி நிலையம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, தென்மராட்சிக் கல்வி வலயம், தென்மராட்சி சமுர்த்தி மகாசங்கம், வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்திப் பிரிவு, பாடசாலை மாணவர்கள், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகிய தரப்பினர் இணைந்து இந்த விழிப்புணர்வுப் பேரணியை நடத்தினர்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 9 மணிக்கு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டதை அடுத்து ஏ-9 வீதியூடாக புறப்பட்ட பேரணி சாவகச்சேரி பஸ் நிலையத்தில் முடிவடைந்தது.



விழிப்புணர்வுப் பேரணியில் கலந்துகொண்டோர்

பேரணியில் யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சித் திட்டப் பிரிவின் ஆணையாளர் க.மகேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், தென்மராட்சிப் பிரதேச முதியோர் பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ். எஸ்.அருளானந்தம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள உயர் அதிகாரிகள், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

# இறந்த பெண்ணின் உடலில் இருந்து தங்கச் சங்கிலி இரவுவேளை திருட்டு

## இறுதிச் சடங்குகளுக்காக வைத்திருந்த சமயம்

கொழும்புத்துறை, ஜூன் 7
யாழ்ப்பாணத்தில் தற்போது திருட்டுக்கள் சர்வசாதாரணம். எத்தனை, எத்தனையோ விதங்களில் திருட்டுக்கள் நடக்கின்றன. குடாநாட்டில் நாளாந்தம் சைக்கிள் களவுகள் இடம்பெற்றுவரும் நிலையில், மோட்டார் சைக்கிள்களும்கூட அபகரிக்கப்படுகின்றன.
ஆனால் ஓரிரு தினங்களுக்கு முன்னர் அரியாலைப் பகுதியில் புதுவிதமான திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.
அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் ஒரு வீட்டில் காலமாகிவிட்ட பெண்ணொருவரின் பூதவுடல் இறுதிச் சடங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்தது. உறவினர்களின் வருகையை எதிர்பார்த்தே அவரின் உடல் காத்துக்கிடந்தது.
இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட திருடன் கடந்த புதன்கிழமை இரவுவேளை திறந்திருந்த அந்த மரணவீட்டில் புகுந்து இறந்த பெண்ணின் பூதவுடலில் போடப்பட்டிருந்த ஐந்து பவுண் நிறையான தங்கச் சங்கிலியை அபகரித்துள்ளனர்.
வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருந்த சமயம் பார்த்து, திருடன் வீடு புகுந்து சங்கிலியைக் கழற்றிச் சென்றிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் நடந்த இடம் அண்மையில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதியாகும். அதனால் குறிப்பிட்ட வீடு பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டது. இது திருடனுக்கு நல்ல வாய்ப்பாகி விட்டதாக உறவினர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-135)

# எமது கைதுக்கு காரணம் இலங்கை மீனவர்களே

## விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 7

எங்களது கைதுக்கு இலங்கை மீனவர்களே காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளனர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு பின்னர் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ள தமிழக மீனவர்கள்.

கடந்த வாரம் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த 28 தமிழக மீனவர்களையும், படகு பழுதாகிக் கடலில் தத்தளித்த நான்கு தமிழக மீனவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது இலங்கைக் கடற்படை.

பின்னர், கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்படுவதாக இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ புதன் கிழமை அறிவித்திருந்தார்.

அதன்தொடர்ச்சியாக விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 33 பேரும்நேற்று முன்தினம் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். அங்கு மீனவர் சங்கத்தினர் அவர்களை வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் மத்தியில் விடுதலையாகி வந்த மீனவர்களில் சிலர் கூறியதாவது:

"நாங்கள் அனுராதபுரம் சிறையில் 2 நாள்கள் இருந்தோம். அதற்குப் பின்னர் விடுதலை செய்யப்படுவதாகக் கூறி மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். அப்போது நீதிபதி. மீனவர்களை மட்டும் விடுதலை செய் வதாகவும் 6 படகுகள், மீன் பிடிச் சாதனங்களை விடுவிப்பது தொடர்பான விசாரணை ஜூலை 4 ஆம் திகதி நடை பெறும் என்றும் தெரிவித்தார்.

எங்களைவிடுவித்தமை மகிழ்ச்சியே என்றாலும், எங்களையும், குடும்பத்தையும் காப்பாற்றும் படகுகளை விடுவிக்காதது ஏமாற்றம் அளிக்கிறது.

இலங்கை கடற் படையினர் எங்களை ஒப்படைக்க அழைத்து வந்தபோது. இலங்கை மீனவர்கள் தான். இந்திய மீனவர்களை இலங்கை கடல் பகுதிக்குள் அனுமதிக்கக்கூடாது என்று வலியுறுத்தி வருவதாகவும். அதனாலேயே இந்திய மீனவர்களைக் கைது செய்வதாகவும் எங்களிடம் கூறினர்.

இதன் மூலம் கடற்படையினரின் நடவடிக்கைகளுக்கு இலங்கை மீனவர்கள் தான் காரணம்என்பதுதெளிவாகிறது.

சிறையில் இருந்த போது இலங்கை மீனவ பிரதிநிதிகள் எங்களைச் சந்தித்தனர். அவர்கள் எங்களிடம் இலங்கைகடல் பகுதிக்குள் தடைசெய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்க வேண்டாம் என்றனர்." இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

(வ)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு அதிக உதவிகளை வழங்குக

## இந்தியாவிடம் கோருகின்றார் யாழ்.பேராயர்



டானியல் தியாகராஜா

சென்னை, ஜூன் 7

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு இந்திய அரசு கூடுதல் உதவிகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயர் டானியல் தியாக ராஜா. இரு நாள் பயணமாகச் சென்னைக்குச் சென்றுள்ள பேராயர் அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமானது. இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி மீள்குடியேற்ற நடவடிக்கைகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாது. அங்குள்ள மக்கள் பெருமளவில் துன்பங்களை எதிர் நோக்கி உள்ளனர். மீள் குடியேற்ற நடவடிக்கைகளின்

**இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி மீள் குடியேற்ற நடவடிக்கைகளைத் திருப்திகரமாக மேற்கொள்ள முடியாது.**

போது மிகவும் அவதானம் அவசியமாகின்றது.

இந்திய ரயில்வே [illegible]கான உதவித் திட்டம் வரவேற்கப்பட வேண்டியது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு பாக்கியநாதன்

(விநாயகர் மர அரிவுகாலை உரிமையாளர்)

தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பாக்கியநாதன் நேற்று (06.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2014) சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
(மடத்து பிள்ளையார் கோயிலடி)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகநாதன் மகாலஷ்மி (சின்னமணி)



யாழ். வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்.மின்சார நிலைய வீதியை வசிப்பிடமாகவும், லண்டன் Ilford ஐ வதிவிடமாகவும் கொண்ட சண்முக நாதன் மகாலஷ்மி கடந்த (02.06.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற சங்கரப் பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் அவர்களின் அருமை மனைவியும்,ரமேஷ் (பிரான்ஸ்), உமேஷ் (லண்டன்), சதீஷ் (Benja - லண்டன்), சுரேஷ் (குட்டி - லண்டன்), சுதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகராஜா மற்றும் கமலாதேவி (லண்டன்), துரைராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரஞ்சனி, மிதிலா, பகிர்தா, பிரசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு அண்ணியும், சோபிகா,கார்த்திகா,ஆர்த்திகா, சினேகா, சனோஜ் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(08.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 12.30 மணிவரை East Ham Town Hall, London Borough of Newham, Barking Rd, London E6 2RP, United Kingdom, +442033737751 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பி.ப. ஒரு மணி பி.ப. 1.30 மணிவரை City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, Greater London E12 5DQ, United Kingdom, +442085302151 இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்

4 Brockham Drive,
Ilford Essex,
IG 2 6QW,
UK.

ரமேஷ் - பிரான்ஸ் (+3361455141)
உமேஷ் -பிரித்தானியா (+447870219155)
சதீஸ் (Benja )-பிரித்தானியா(+447967994541)
சுதா - பிரித்தானியா (+442085544702), (+447816649185)
ராசகுமார் -பிரித்தானியா (+447533522474)

# மரண அறிவித்தல்



## அப்புத்துரை இரத்தினம்பிள்ளை

(இளைப்பாறிய இ.போ.ச. நேரக்கணிப்பாளர்)

ஜயனார்கோயிலடி,கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை இரத்தினம்பிள்ளை நேற்று(06.06.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - திரவியம் தம்பதியரின் மகனும் இராசலக்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரேமகுமாரி மற்றும் சறோஜி, வளர்மதி (U.K),.கருணாகரன் (சுவிஸ்), சுபாகரன் (ஆஸ்திரேலியா), ரூபதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் சுகுமார்,வசந்தகுமார், பேனார்ட் (U.K), சுகுணா (சுவீடன்), சுபத்திரா (ஆஸ்திரேலியா), கமலானந்தன்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற புனிதவதி அருமைத்துரை மற்றும் ஆயிலியம், இராமநாதன் (கிளி) ஆகியோரின் சகோதரனும் மகாராஜா (மகேந்திரம்), பவானி ஆகியோரின் மைத்துனரும் அபியா, விதுஷன், நிரு, ஜனா (ஜேர்மனி), ஸ்டெபி, துசானி, லியோன், மெலானி (U.K), விதுஷன், கிருஷன், பவேதினி (ஆஸ்திரேலியா), ஜனோஸ், சோனியா, ஜோனாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவடல் பிற்பகல் 2 மணியளவில் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
தொ.பே.: 021 205 2048

(48803)

தகவல்:
மருமகன் இ.வசந்தகுமார்.

# மோடியின் அழுத்தங்கள் மஹிந்தவுக்கு அதிருப்தி

## விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

கொழும்பு.ஜூன் 7

அரசமைப்பு சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை அரசுக்கு அழுத்தத்தை பிரயோகித்திருப்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது என்று நவசமசமாஜக்கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.



விக்கிரமபாகு கருணாரத்ன

கொம்பனித்தெருவில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசுக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் ஏமாற்று வாக்குறுதிகளை வழங்கி அவரை ஏமாற்றி வந்தது மோடியிடம் செல்லுபடியாகாது என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்துள்ளார். இலங்கையைப் பொறுத்த வரையில் சிறுபான்மையினர் தொடர்ந்தும் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

வடமாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டு அதில் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கின்ற போதிலும் மாகாணத்துக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படாது முட்டுக்கட்டை போடப்பட்ட நிலைமை காணப்படுகின்றது.

வடமாகாண சபை அரசின் பிடிக்குள்ளேயே இருந்து வருகின்றது. அதனால் நல்லிணக்கம் என்பது எட்டாக்கனியாக மாறியிருக்கின்றது. இது ஒரு புறம் இருக்க வடக்கில் நில அபகரிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

போர் நடைபெற்ற காலப்பகுதியில் அங்கு பல்லாயிரக் கணக்கான காணிகள் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டன. தற்போது புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தெற்கில் இருந்து சிங்கள மக்களும் வடக்கில் குடியேற்றப்பட்டு வருகின்றனர். நிலைமை இவ்வாறு இருக்கும்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு வெளிநாட்டு சக்திகளை எதிர்ப் பார்த்து கொண்டிருக்கின்றது.

ஆனால் கூட்டமைப்பு இதனை தவிர்த்து தமக்கு வாக்களித்த அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி போராட்டங்களை நடத்துவதன் மூலம் தமது எதிர்பார்ப்புக்களை எட்ட முடியும்-என்றார். (ச-10)

## இரகசிய உடன்படிக்கை இலங்கையுடன் இல்லை

கொழும்பு.ஜூன் 7

இலங்கை அரசுடன் இரகசிய உடன்படிக்கைகள் எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் கெரி ரைஸ் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போது இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள பல உப உடன்படிக்கைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்தநிலையில் இது குறித்து ஐக்கிய நாடுகளின் இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர் நேற்றுமுன்தினம் ரைஸிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது தாம் எழுதி வைத்திருந்த பதிலை ரைஸ் வாசித்தார். அதில் தம்முடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இலங்கை 2012 ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்து விட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## இணைப்புக் குழுவிலிருந்து விமலை நீக்கத் தீர்மானம்

கொழும்பு.ஜூன் 7

கொழும்பின் புறநகர், கடுவலை இணைப்புக்குழுத் தலைவர் பதவியில் இருந்து அமைச்சர் விமல் வீரவன்சவை விலக்கு வதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.



கடுவலை இணைப்புக்குழுவின் 16 ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அமைச்சர் விமல் வீரவன்ச, அரசை சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட்டு வருகிறார்.

எனவே அவரைக் குறித்த பதவியில் நீடிக்கச்செய்ய முடியாது என்ற அடிப்படையிலேயே அவரை நீக்குதவதற்கான யோசனைமுன்வைக்கப்பட்டது(ச)



சுற்றாடல் பாதுகாப்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளமைக்காக கொழும்பு றோயல் கல்லூரிக்கு விருது வழங்கப்பட்டது. இந்த விருதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் அதிபர் உபாலி குணசேகரவுக்கு வழங்கினார். அருகில் அமைச்சர்கள் சுசில் பிரேம ஜயந்த, பந்துல குணவர்த்தன உட்படப் பலர் காணப்படுகின்றனர்.

## குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பது அவசியம்

### சபாநாயகர் கூறுகிறார்

கொழும்பு.ஜூன் 7

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படவில்லை என்று இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



சமல் ராஜபக்ஷ

பிரிட்டன் நாடாளுமன்றிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ இலங்கைக்கு எதிராக சும்த்தப்பட்டு வரும் போலிக் குற்றச்சாட்டுக்கள் முறியடிக்கப் பட வேண்டும் என்று அவர் கூறினார்.

போர் காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாதநிலைமை நீடித்து வருகிறது. சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் இலங்கை தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை நாடாளுமன்றம் உரிய முறையில் பதிலளிக்கத் தவறியுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

## பான் கீ- மூனை சந்தித்தார் டலஸ்

கொழும்பு.ஜூன் 7

இலங்கையின் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, கடந்த செவ்வாய்க் கிழமை ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ-மூனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பை ஐ.நா. தலைமையகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து எந்தத் தகவலையும் ஐ.நா. தலைமையகம் வெளியிடவில்லை.

இதேவேளை, இந்தச் சந்திப்புக் குறித்த காரணத்தையோ, அதுபற்றிய எந்த விவரங்களையோ இலங்கை அரசும் வெளியிடவில்லை.



பான் கீ- மூனை டலஸ் சந்தித்தபோது....

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் குறித்த விசாரணைக் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிடவுள்ள சந்தர்ப்பத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சுற்றாடல் சுட்டியில் இலங்கை 69 ஆவது இடத்தில்

2014 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் செயற்பாட்டு சுட்டியில் இலங்கை 69 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்த மதிப்பீட்டு ஆய்வை ஆண்டுதோறும் அமெரிக்க யேல் பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது.

இந்தச் சுட்டியில் இந்தியா 155 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 169 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 148 ஆவது இடத்திலும் உள்ளன. சுற்றாடல் தரவுகள் நாடுகளின் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

வளி மாசடைதலால் 2012 ஆம் ஆண்டில் ஏழு மில்லியன் மக்கள் உலகில் உயிரிழந்துள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாத்தறை மைதானத்தின் பெயரை மாற்ற வேண்டும்

### மங்கள சமரவீர வேண்டுகோள்

கொழும்பு.ஜூன் 7

மாத்தறை சனத் ஜெயசூரியா மைதானம் என்ற பெயரை நீக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

றுகுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சனத் ஜெயசூரிய தாக்க முற்பட்டமையை கருத்தில் கொண்டு மாத்தறை சனத் ஜெயசூரியா மைதானம் என்ற பெயரை நீக்க வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்களை முன்னாள் கிரிக் கெட் வீரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய தாக்க முற்பட்டமையானது மிகவும் மிலேச்சத் தனமான செயலாகும்.



மங்கள சமரவீர

எனவே குறித்த மைதானத்துக்கு வைக்கப்பட்டுள்ள சனத் ஜெயசூரிய மைதானம் என்ற பெயரை நீக்கி அதற்கு பதிலாக புனித செவரல்ஸ் கல்லூரியின் பெயரை சூட்ட வேண்டும் -என்றார். (ச-10)

## பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதியில் மோசடி

திருகோணமலை.ஜூன் 7
திருகோணமலை மாவட்டத்தில் பின் தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்தி பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.
மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்தி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து லட்சம் ரூபாவில் பெருமளவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று அவர்கள் கூறினர்.
அரசு, வளர்ச்சிக்காக எதிர்கால நடவடிக்கைக்காக மாணவர்களை மேம்படுத்தும் விதத்தில் பல திட்டங்களை ஆரம்பித்து வருகின்றது .
அதில் பாடசாலை அதிபர்களை நம்பியே பல திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.
எனினும் தற்போது சில பாடசாலை அதிபர்கள் பாடசாலையை அபிவிருத்தி அடையச் செய்யும் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என்று பெற்றோர் சுட்டிக்காட்டினர். (ச)



சர்வதேச புகைத்தல், மது ஒழிப்பு தின முதலாவது கொடியை திருகோணமலை மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டீ.சில்வாவுக்கு மாவட்ட உதவி அரச அதிபர் பாத்திய விஜேயந்த அணிவித்தார். (ச)

## பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு.ஜூன் 7
மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதியில் தூக்கில் தொங் கிய நிலையில் சடலமாக பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை மீட் கப்பட்டுள்ளார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தப் பெண் இரண்டு பிள்ளைகளின் தாயார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
காத்தான்குடி .6 ஆம் குறிச்சியில் வசித்து வந்த பெண் ஒரு வரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
உயிரிழந்த நிலையில் இந்தப் பெண்ணின் சடலம் காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
இந்தப் பெண் எப்படி உயிரிழந்தார் என்பது குறித்து இதுவரை எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை என்று பொலிஸார் கூறினர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## 9 மாதங்களாக மூடப்பட்ட ரயில் கடவையால் சிரமம்

### பாதையை திறக்குமாறு திரண்டனர் மக்கள்



மூடப்பட்ட ரயில் கடவை முன் மக்கள்

மட்டக்களப்பு.ஜூன் 7
கடந்த ஒன்பது மாதங்களாக தொடர்ச்சியாக ரயில் கடவை மூடப்பட்டிருப்பதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மட்டக்களப்பு. திராய்மடு மக்கள் தெரிவித்தனர்.
இந்த நிலையில் மூடப்பட்ட கடவைக்கு முன்னால் ஒன்று திரண்ட மக்களும், பாடசாலை மாணவர்களும் ரயில் கடவையைத் திறந்து பாதையால் பயணிக்க வழி ஏற்படுத்துமாறு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த விடயம் குறித்து ஏற்கெனவே பல தடவைகள் பல அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகளிடம் முறையிட்டும், இது வரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
இந்தப் பாதை மூடப்பட்டுள்ளதால் மாற்றுப் பாதையூடாகப் பயணித்து பாடசாலைகளுக்கு மாணவர்கள் 20 நிமிடங்கள் தாமதித்தே வருகை தருகின்றனர் என்று பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர். (ச)

# மாற்றிடத்தில் குடியமர சம்பூர் மக்கள் விருப்பம்

### காணிகள் வழங்க அரசு நடவடிக்கை

திருகோணமலை.ஜூன் 7
திருகோணமலை.சம்பூர் பிரதேசத்திலிருந்து கடந்த 2006 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள 162 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள், வள்ளிக் கேணியில் மீள்குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர்.
தங்களது பூர்வீகக் கிராமமான சம்பூரை விடுத்து, வள்ளிக் கேணியில் குடியேற அந்த மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று மூதூர் பிரதேச செயலர் நடராசா பிரதீபன் தெரிவித்தார்.
சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த 825 குடும்பங்களைச் சேர்ந்த பொது மக்கள் இன்னமும் மீள் குடியேற்றப்படாத நிலையில் உள்ளனர்.
இந்த மக்கள் வாழ்ந்த பகுதி, அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இடம் பெயர்ந்தவர்களை பல சந்தர்ப்பங்களில் மீளக்குடியமர்த்த முனைந்த போதும் அந்த முயற்சி கைகூடவில்லை என்று அவர் கூறினார்.

> “ இடம் பெயர்ந்தவர்களை பல சந்தர்ப்பங்களில் மீளக்குடிய மர்த்த முனைந்த போதும் அந்த முயற்சி கைகூடவில்லை.

இந்த மக்கள் தற்போது, வேறு இடங்களில் மீளக்குடியமர விரும்புகின்றார்கள். இந்த நிலையில், அவர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களுக்கு பொருத்தமான மாற்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.
மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளக்கந்தை, வீரமாநகர் வடக்கு, வேம்படித் தோட்டம், குறவன்வெட்டுவான், தங்கபுரம், சீதனவெளி ஆகிய இடங்கள் மீள்குடியேற்றத்துக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.
சீதனவெளியில் ஏற்கெனவே 84 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

## வர்த்தக நிலையத்தில் கொள்ளை

மட்டக்களப்பு.ஜூன் 7
மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலையில் புதன்கிழமை மாலை வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த துணிகரச் சம்பவம் வந்தாறுமூலை, அம்பலத்தடி சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.
காரொன்றில் வந்த இருவர், வர்த்தக நிலையத்தின் உரிமையாளரை மிரட்டி சுமார் 70 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17.04.1933
மறைவு 09.05.2014

அமரர் Dr.சோதிலிங்கம் பொன்னுச்சாமிப்பிள்ளை



கடந்த 09.05.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் மரணச்செய்தி கேட்டு துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

குடும்பத்தினர்.
பொ.சுரேஸ்குமார் (ஆங்கில ஆசிரியர்),
021 226 5506/077 280 3159
Dr.S.P.Vijayakumar - 0061263684578,
Mrs.S.Nandini (uma) - 006492624123,
Mrs.T.Priyatharsini (Priya) - 0061469304651.

தங்கேஸ்வரி வாசா,
கே.கே.எஸ்.வீதி,
வல்வெட்டித்துறை.

(48583) (12..3.6)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



நிகழும் ஜய வருடம்
சித்திரை மாதம் 25 ஆம் நாள்
(08.05.2014)
வியாழக்கிழமை இறைவனடி
சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவி
திருமதி
கண்மணி முருகையா
அவர்களின் வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் இன்று (07.06.2014)
சனிக்கிழமை முற்பகல் 11.00
மணியளவில் அன்னாரது இல்லத்தில்
நடைபெறும். அத்தருணம் தாங்கள்
தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் வீதி,
ஊரெழு கிழக்கு, ஊரெழு.
(48641)(4.3.6)
குடும்பத்தினர்.

## நல்லூரான் கலைத்தாய் மன்றம்

நம்நாட்டுக் கலைஞரான விமல்ராஜின் பூம்புகார் குறும் பட அறிமுக விழாவும் இசைப் பிரியனின் பனைமரக்காற்று பாடல் வெளியீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நல்லூரான் கலைத்தாய் மன்ற உபதலைவர் சாயியன் தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

## பரிசளிப்பு விழா

கரணவாய், ஜூன் 7


பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். திருமதி கிருபாகரி இளங் கோவன் பரிசில்களை வழங்குவார். (ஒ-108)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பதிவேடுகளைப் பராமரித்தல், ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்துதல், அதனை மீளப் பெறுதல் தொடர்பான கலந்துரையாடல் மானிப் பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள வணிகர் கழகக் கட்டடத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (க)



பாஷையூரில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் வரவேற்பு சொரூப வழிபாட்டிடம் திங்கட்கிழமை பங்குத்தந்தை அருட்திரு.றோய்பேடினன் அடிகளினால் திறந்து வைக்கப்பட்டது. (வ-135)

## மின் தடை குறித்த அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

உயர் அழுத்த, தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பற்பன்னை, முட்டமாவடி, திருநெல்வேலி, மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில், பொற்பதி வீதி, ஆடியபாதம் வீதி, ஜிபிஎஸ் வீதி, நவிண்டில், பொலிகண்டி, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, இமையாணன், உடுப்பிட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, கம்பர்மலை, உடுப்பிட்டி, சனசமூக நிலையத்தடி, பொக்கணை, கெருடாவில், தொண்டமானாறு, மயிலிய தனை, சிதம்பரா கல்லூரியடி, நவிண்டில், வல்லை ஆகிய இடங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மிருசுவில், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பேலி, ஆசைப்பிள்ளை ஏற்றத்தடி, படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், சுன்னாகம், கந்தரோடை, சுப்பிரமணியம் வீதி, மயிலங்காடு, ஐயனார்கோயிலடி, மலப்பை, அளவெட்டி, தெல்லிப்பழை, குப்பிளான், ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, வித்தகபுரம், கீரிமலை, தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ)

## திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் 2014 ஆம் ஆண்டுக்கான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு கலந்துகொள்வார். சைவப் புலவர் க.வைலைநாதன் சிறப்புரையாற்றுவார். அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-7)

## பிரதேச சபையிலிருந்து வசீந்திரன் நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வலி.கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் ஆசைப்பிள்ளை வசீந்திரன் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டிருந்த வசீந்திரன், எதிர்கட்சி உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்டிருந்தாலும் அவர் ஈ.பி.டி.பி. கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தார்.

கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு பரப்புரைக்காக வந்திருந்தபோது மேற்படி உறுப்பினர், ஜனாதிபதி முன்னிலையில் ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து விலகி, ஆளுங்கட்சியில் இணைந்து கொள்வதாக தேர்தல் மேடையில் வைத்து பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரினால், வசீந்திரன் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய உள்ளூராட்சி மன்ற சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டமையினால் அவரது பிரதேச சபை உறுப்பினர் பதவியும் வெற்றிடமாக்கப்பட்டுள்ளது.

இவரது வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினரை நியமிக்குமாறு கட்சியின் செயலாளரிடம் தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார் என்று தெரிய வருகின்றது. (ற-5)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வீடமைக்கும் பணி



தென்மராட்சி, ஜூன் 7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் நாடளாவிய ரீதியில் பிரதேசத்துக்கு ஒரு வீடு என்னும் திட்டத்தில் இவ்வருடத்தில் வீடுகள் அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் மந்துவில் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீடமைக்கும்பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் ச.மதியுகன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட தேசியப் பிரதிநிதி எஸ்.மயூரன், சாவகச்சேரி பிரதேச சம்மேளனப் பொருளாளர் வி.யசோதரன், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.விமலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் துரித கதியில் வீடமைத்து வழங்கியமைக்காக இந்தச் சம்மேளனம் இரண்டாமிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## சத்தியசாயி பாபா கல்வி நிறுவன ஏற்பாட்டில் பயிற்சிப்பட்டறை



கரணவாய், ஜூன் 7

சத்திய சாயி பாபா கல்வி நிறுவனத்தினால் பாடசாலை மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

வித்தியாலயமுதல்வர் என்.ஸ்ரீநடராசா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சத்திய சாயி பாபா நிலையத் தலைவர் எஸ்.ஆர்.சரவணபவன், நிலையத்தின் கல்விக்கான இணைப்பாளர் பி.சிவனேசன் மற்றும் சேவையாளர் எஸ்.ஸ்ரீஸ்காந்தராசா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினர். இதில் பாடசாலையின் தரம்-10, 11 மற்றும் உயர்தரங்களைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (வ-08)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12.04.1952 — மறைவு 08.05.2014



**இராமநாதபிள்ளை நாகேஸ்வரன்** (கிறிஸ்ரி)

(பெற்றோல் செற் (மாக்பெட்) யாழ்ப்பாணம்)

அப்பா உங்களைப் பிரிந்து போனதுவோ
எம் விழிகள் நிரந்தரமாய் ஆனதுவோ
அதிகாலை எழுந்தவுடன்
அப்பா உங்கள் நினைவு
நித்திரைக்குப் போகும் வரை
நித்தம் உங்கள் நினைவு

நீங்கள் இல்லாமல் போனதனால் நெஞ்சம் எல்லாம் எம் திகைப்பு
இருக்கும் வரை எம்மைப் பற்றி எப்போதும் யோசித்தீர்கள் - அப்பா
உங்கள் துன்பமெல்லாம் பொறுத்து எம் உயர்வை பிரார்த்தித்தீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி [illegible]
நீர்வேலி.

உங்கள் பிரிவால் துயருறும் அப்பா:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், [illegible]

(48768)(12.3.6)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சிறீரங்கநாதன்

(இளைப்பாறிய ஊழியர், இ.போ.ச.)



மகாதனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிறீரங்கநாதன் நேற்று (06.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், ரஜனி(கனடா), சாமினி (பிரான்ஸ்), சர்மிளா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராஜா(கனடா), சிவகுமார்(பிரான்ஸ்-), சிவபரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சீதாலட்சுமி, காலஞ்சென்ற ராசலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவகணேசமூர்த்தி(ஜேர்மனி) மற்றும் விமலாதேவி, சரஸ்வதிதேவி(கனடா), காலஞ்சென்ற ரவீந்திரன் (ஜேர்மனி) மற்றும் நடராஜா, கமலேஸ்வரி(பிரான்ஸ்), பாலமுரளி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், புவனதேவி(ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகணேசநாதன் மற்றும் ஞானேஸ்வரன்(கனடா) ஆகியோரின் சகலனும், ஆர்சன்(கனடா), நிவித்தா(கனடா), ஆஞ்சலினா(பிரான்ஸ்), வேதிகா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள். நேற்று (06.06.2014) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டுப்பட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மகாதனை, துர்க்காபுரம், தெல்லிப்பழை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## வேதனம் வழங்கப்படும்

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் ஆனி மாதத்துக்கான வேதனம் உரிய திகதியில் வழங்கப்படுமென யாழ்ப்பாண சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (க)

## பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மாவட்டத்தில் உள்ளடங்கும் சில பிரதேசங்களுக்கான தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் எழுவை தீவுப் பிரிவுக்கும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் புங்குடுதீவு மற்றும் அல்லைப்பிட்டி பிரிவுகளுக்கும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவு, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வட்டுக்கோட்டை பிரிவுக்கும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர் பிரிவுக்கும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கட்டைவேலி பிரிவு ஆகியனவற்றுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் வெற்றிடம் நிலவும் குறிப்பிட்ட பிரிவில் நிரந்தர முகவரியைக் கொண்டவர்களாகவும், 30-60 வருடங்கள் வயதுப் பிரிவுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். உரிய விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலாளர் அலுவலகத்திலும், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலாளருக்கு அல்லது மாவட்ட மேலதிக பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட வேண்டும். மேலதிக விவரங்களை 2014 ஜூன் 6 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (ஒ)



கொழும்புத்துறை, சுவாமியார் வீதி, மற்றும் கொழும்புத்துறை வீதியில் உள்ள வெள்ளவாய்க்கால்களின் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. சுவாமியார் வீதியில் சேதமடைந்திருந்த வெள்ளவாய்க்கால் கனரக வாகனத்தினால் புதிதாக தோண்டப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது. (ஒ-135)

## இளம் தம்பதியினர் மீது இருவர் தாக்குதல்

தென்மராட்சி, ஜூன் 7

கடைக்குள்ளிருந்து கதைத்துக் கொண்டிருந்த இளம் தம்பதியை அயல் கிராமத்தைச் சேர்ந்த இருவர் தாக்கிய சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் கச்சாய் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

கொட்டன்கள் மற்றும் போத்தல்கள் ஆகியவற்றால் தாக்குதல் நடத்தியதில் கடைக்குள்ளிருந்த இளம் தம்பதியும் தாக்க வந்த இருவரும் காயங்களுக்கு உள்ளானார்கள்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இருவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இளம் தம்பதியினர் தாக்கப்பட்டதன் காரணம் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தில் கடையுடன் இணைந்த வீட்டில் உள்ளோரும் தலையிட்டதால் மேலும் இருவர் தாக்குதல்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடையில் இருந்த இளம் தம்பதியினராக கந்தையா விஜயகுமார் (வயது-25), விஜயகுமார் ஜெயப்பிரியா (வயது-21) மற்றும் பாலாவியைச் சேர்ந்த கனகரத்தினம் சத்தியராஜ் (வயது-25) கனகரத்தினம் சஜிந்தன் (வயது-28) ஆகியோர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு க.விஜயகுமார் க.சஜிந்தன் ஆகியோர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். (வ)

## பொதுக் கூட்டம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டுவிழாக் கொண்டாட்டங்கள் தொடர்பான விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் அரங்கில் நடைபெறும்.

ஸ்கந்தாவில் கல்வி பயின்ற அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது கூட்டத்தில் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு பழைய மாணவர் தாய்ச் சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன் அறிவித்துள்ளார். (க)

◆◆◆

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இடம்பெறும். (க)

## அரச ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை

வவுனியா, ஜூன் 7

வவுனியா, ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் காணிகளைப் பெற்றுக் கொண்ட அரச ஊழியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு அரச ஊழியர் வீட்டுத்திட்ட கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் வே. இந்திரன் தெரிவித்துள்ளார். (ச-402)

## உணவகத்துக்கு 'சீல்'

சாவகச்சேரி நகரப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்பட்ட உணவகம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மறு அறிவித்தல் வரை 'சீல்' வைத்து மூடப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர்கள் குழு நடத்திய திடீர்ப் பரிசோதனையில் உணவகத்தில் பல சுகாதாரக் குறைபாடுகள் காணப்பட்டதையடுத்து குறைபாடுகள் சீர் செய்யும்வரை 'சீல்' வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

## நிர்வாக மொழி தமிழ்

வடக்கு மாகாண சபையின் நிர்வாக மொழி தமிழ் என்பது அரசமைப்பு சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே எமது நிர்வாக மொழியாகத் தமிழைப் பயன்படுத்துவது எங்கள் உரிமையாகும். எனவே நாம் ஒருபோதும் எங்கள் உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது. - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம். தமிழ் மொழியில் தமக்கு கடிதம் அனுப்பியதன் மூலம் வடக்கு மாகாண சபை மொழிக் கொள்கையை மீறிவிட்டது என்ற ஜாதிக ஹெல உறுமயவின் குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இப்படிக் கூறினார். அத்துடன் வடக்கு மாகாண சபையை சிங்கள மொழி பேசுபவர்கள் அணுகும்போது அவர்களுக்கு அந்த மொழியிலேயே பதில் அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தவிர ஜாதிக ஹெல உறுமய போன்ற கடும்போக்கு அணுகுமுறையுடைய கட்சிகளுக்கு தமிழில் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படின் எம்மை அணுக முடியும். - என்றார்.

## மகா கும்பாபிஷேகம்

வேலணை மேற்கு ஆலடி ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணி முதல் 8 மணிவரை இடம்பெறும். இன்று சனிக்கிழமை காலை முதல் பிற்பகல்வரை பால்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## சங்காபிஷேகம்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். சிவஸ்ரீ பிரம்மஸ்ரீ செ.இரத்தின சபாபதிக் குருக்கள் சங்காபிஷேக பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்தி வைப்பார். (க)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 318 8016

**கார் விற்பனைக்கு**

Pugeot 305, 14 Sri இலக்கம் கொண்ட கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 860 9232

**மணமகள் தேவை**

* 80 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 23¼ பாவமுடைய BSc, MSc Phd (கெமிஸ்ரி) முடித்து Research ஆக பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 104 பாவமுடைய B.BA முடித்து லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய சைவபோசனமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு டாக்டர், இஞ்சினியர், விரிவுரையாளர் சைவபோசன மணமகள் தேவை.
* 84 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 40 பாவமுடைய NDT Moratuwa வில் முடித்துQuatity Surveyer ஆக ஓமானில் பணிபுரியும் மணமகனுக்கு சேவையர், ராஸ்மன் மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 21 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற MBBS டாக்டர் மணமகனுக்கு டாக்டர் பட்டதாரி மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய BSc Civil Engineer இற்கு பட்டதாரி மணமகள் தேவை.

(48776) (4.6.3) தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62 இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி. 077 607 0862

**காணி விற்பனைக்கு**

பன்னகட்டை ஒழுங்கை தும்பளை வீதி, பருத்தித்துறையில் (யாழ்-பருத்தித்துறை வீதியில் இருந்து 300m) ஒரு பரப்பு 7 குழி விஸ்தீரணம் உள்ள சுற்றுமதில், கிணறு வசதியுள்ள வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 194 0537 (48713) (7.6.3)

**COMPUTER COURSES**

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling
Advanced Diploma in **Hardware & Networking**
**Java** (for Developers) | DMI COMPUTER EDUCATION

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

**DMI COMPUTER EDUCATION**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, [illegible] வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V வீதி [illegible] Tel. : 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, [illegible] வீதி HNB [illegible] Tel. :021-227 0775 |
| சுன்னாகம் | KKS வீதி NSB [illegible] Tel. :021-224 1970 |

**YOGIS**

(Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)

**EXHIBITION**

CAKES and SUGAR CRAFT 11.06.2014

**கேக் கண்காட்சி**

திருமண அலங்கார கேக் வகைகள், பிறந்தநாள் கேக் வகைகள்,
ஐசிங் பூக்களின் அலங்காரங்கள் இன்னும் வித்தியாசமான
கேக்குகளின் அலங்கார கண்காட்சி 3 நாள்கள் மட்டும்.
11.06.2014 முதல் ஆரம்பமாகிறது.
கண்காட்சி 11ஆம் திகதி 11 மணிக்கும்
12ஆம்,13ஆம் திகதிகளில் காலை 9 மணியில் இருந்து
இரவு 8 மணிவரை நடைபெறும்.
நடைபெறும் இடம்: 75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக)
(C/14702)(10.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

செல்வன்
**றோக்.சாள்ஸ் ஜெறோம் றாஜ்**
அவர்கள் கடந்த
29.05.2014 அன்று BMICH இல்
நடைபெற்ற இலங்கை திறந்த
பல்கலைக்கழகத்தின்
பொதுப்பட்டமளிப்பு விழாவில்
பொறியியல் தொழில்நுட்ப இளமாணி
(B.Tec.Eng)
பட்டம் பெற்றதையிட்டு, பாராட்டி
வாழ்த்துவதோடு, மேலும் பல
விருதுகளைப் பெற்று சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.




மகிழ்வுடன்:
குடும்பத்தினர், உறவினர்கள்,
ஆசிரியர்கள், நண்பர்கள்.
மணற்காடு, குடத்தனை
071 716 3675
(45567)(12.3.6)

## யாழ். மாவட்டத்தில் தமிழ் பயின்ற படையினருக்கு சான்றிதழ் வழங்கல்



ஐ.நா.சபையின் இலங்கைக்கான மனித உரிமைகள் அமைப்பின் இணைப்பாளர் படையினர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகிறார்.

வலி. வடக்கு. ஜூன் 7

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் இராணுவத்தினரில் தமிழ் மொழியைக் கற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு காங் கேசன்துறை 'தல் செவண'விடுதியில்இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரில் ஆயிரத்து 600 பேர் இரண்டு கட்டங்களாக பயிற்றுவிக்கப்பட்டுஅதில்தமிழை எழுத, வாசிக்க மற்றும் கதைக்கத் தெரிந்தவர்களில் ஆயிரத்து 85 இராணுவத்தினரும் பன்னிரண்டு படை அதிகாரிகளுமாக ஆயிரத்து 497 பேர் இச்சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதயபெரேரா கலந்து கொண்டதுடன், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மனித உரிமைகள் அமைப்பின் இணைப்பாளர் அக்னஸ் அக்ரொகனியஸ், யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மாவை ஆதினகர்த்தா மகாராஜ ஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள், யாழ் மாவட்ட அரச அதிபா சுந்தரம் அருமைநாயகம் உட்பட மற்றும் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களின் பிர தேச செயலாளர்கள், உதவித் திட்டப் பணிப்பாளர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர், மருத்துவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-86)



தீவகக் கல்வி வலய மாணவர்களுக்கு உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் வடமாகாணச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகளில் ஒன்றாக மண்டைதீவுக் கண்டற்காட்டில் வெளிக்களப்பயிற்சி வழங்கப்பட்ட போது... (வ)

# யாழ். மாவட்டத்துக்கு ஒரு நாளைக்கு 108 ஆயிரம் லீற்றர் பசுப்பால் தேவை

### 26 ஆயிரம் லீற்றர் வரையிலேயே உற்பத்தி என்கிறார் யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். மாவட்டத்துக்கு ஒரு நாளைக்கு 108 ஆயிரம் லீற்றர் பசுப்பால் தேவையாக உள்ள போதும் 26 ஆயிரம் லீற்றர் வரையான பாலே உற்பத்தி செய்யப்படுவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ். மாவட்டத்தில் முன்பள்ளிச் சிறார்களுக்கு பசும்பால் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சினால் ஒரு லீற்றர் பாலுக்கு 60 ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆனால் யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பால் உற்பத்தியாளர்கள் ஒரு லீற்றர் பாலுக்கு 70 ரூபா ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.



சுந்தரம் அருமைநாயகம்

இங்கு பாலுக்கான உற்பத்திச் செலவு அதிகம் என்பதாலேயே தமக்கான கொடுப்பனவை அதிகரித்து வழங்குமாறும் இல்லாவிட்டால் முன்பள்ளிகளுக்கான பால் விநியோகத்தை நிறுத்தப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதனையடுத்து பால் உற்பத்தியாளர்களை அழைத்து மாவட்ட்ச்'செயலகத்தில் கலந் துரையாடல் நடத்தியிருந்தேன்.

இதன்போது அவர்களின் கோரிக்கையை எழுத்து மூலமாகப் பெற்று அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளேன். அமைச்சு முடிவு எடுத்து பதில் தரும் வரையில் பால் விநியோகத்தை தொடர்ந்து வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன். முன்பள்ளிச் சிறுவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு அதனைச் செயற்படுத்துமாறு கோரியதற்கு அமைவாக தொடர்ந்தும் விநியோகம் மேற்கொள்ள பால் உற்பத்தி யாளர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இதேவேளை, முன்பள்ளிச் சிறுவர்களுக்கு நாளொன்றுக்கு 150 மில்லி லீற்றர் பால் தேவைப்படுகின்றது. சராசரி மனிதனுக்கு 180 மில்லி லீற்றர் பால் தேவைப்படுகின்றது. ஒட்டுமொத்த யாழ்ப்பாணத்துக்கும் 108 ஆயிரம் லீற்றர் பால் தேவைப்படுகின்றது. ஆனால் இங்கு உற்பத்தி செய்யப்படுவதோ 26 ஆயிரம் லீற்றர் மட்டுமே.

எனவே பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நல்லின மாடுகளை இறக்குமதி செய்வதற்கும், மேய்ச்சல் தரவைகளை உருவாக்குவதற்கும், பால் சேகரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது"-என்றார். (வ-5)

## 'பச்சைப் புரட்சித்' திட்டம் இளவாலையில் ஆரம்பம்

### வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால்



யாழ்ப்பாணம், ஜீன் 7

உலக சுற்று சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டுஇளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் கிராமத்தில் 1001 மரக் கன்றுகளை நடுகை செய்யும் பச்சைப்புரட்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் தினத்தில் இந்த வாரம் முழுவதும் மர நடுகை வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. 1001 மரக்கன்றுகள் நடுகை என்ற இலக்கோடு நேற்று முன்தினம் தொடக்கம் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இளவாலைபிரதேசத்தில் உள்ள பொது இடங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆங்காங்கே இலவசமாக 2 மரக் கன்றுகள் வழங்கப்பட்டு நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் வீடுகளில் மர நடுகை செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு வாகனத்தில் நேரடியாகக் கொண்டு சென்று இன்று பிரதேச மக்களுக்கு வழங்கப் படவுள்ளன. (வ-14)

## வயது முதிர்ந்த மாமரங்களை கத்தரிக்கும் திட்டம் முன்னெடுப்பு

### மாம்பழ உற்பத்தியை அதிகரிப்பதற்காக

யாழ்ப்பாணம், ஜீன் 7

மாம்பழ உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாவட்ட ரீதியாக வயது முதிர்ந்தமாமரங்களைக் கத்தரிக்கும் செயற்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வட மாகாணத்தில் தற்போது 4 ஆயிரத்து 700 ஏக்கரில் மாமரங்கள் பேணப்பட்டு வருவதுடன் வருடாந்த உற்பத்தியாக 12 ஆயிரத்து 593 மெற்றிக் தொன் நிறையுள்ள மாம் பழங்கள் கிடைக்கப் பெறுகின்றன என்று வட மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாம்பழத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பொருத்தமான நவீன விவசாய முறைமைகளைப் பயன்படுத்த வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக வயது முதிர்ந்த மா மரங்களை கத்தரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெவ்வேறு செயன்முறைகளில் முன்னெடுக்கப்படும் இந்த செயற்றிட்டத்தில் யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரத்து 580 மரங்களும், வவுனியா மாவட்டத்தில் 503 மரங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 640 மரங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 221 மரங்களும், மன்னார் மாவட்டத்தில் 110 மரங்களும் இது வரை கத்தரிக்கப்பட்டுள்ளன.

மாமரங்களை கத்தரிப்பதற்கு பழ உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கப்பட் டுள்ளன. அத்துடன் மாமரங்களை கத்தரிக்க விரும்புவோர் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளருடன்தொடர்புகொண்டுஅதனை மேற்கொள்ள முடியும்.




இதேவேளை பழ ஈயின் தாக்கத்தால் மாம்பழங்கள் சேதமடைகின்றன. இதன் காரணமாக பழச் செய்கையாளர்களுக்கு உற்பத்தி இழப்பு ஏற்படுவதுடன், நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் தரமான பழங்களை விற்பனை செய்ய முடியாத நிலையும் ஏற்படும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு பழ ஈக்களை முகாமைத்துவம் செய்யும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மத்திய விவசாயத் திணைக்களத்தின் பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனமும் மாகாண விவசாயத் திணைக்களமும் இணைந்து பழ ஈக்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இந்தத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஆரம்பக் கட்டமாக விவசாயத்திணைக்களங்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பழ ஈயின் இனங்கள், அவை பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம், அவற்றின் வாழ்க்கை வட்டம், முகாமைத்துவம் செய்வதற்கான ஒருங்கிணைந்த பாரம்பரிய நவீன தொழில் நுட்பங்கள், நீடித்து நிற்கக் கூடிய தொழில் நுட்பங்கள் தொடர்பாக மாகாண விவசாயத் திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கும்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (வ-14)

## கொலைச் சந்தேக நபர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன்.7

தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணின் கழுத்தைத் துணியால் நெரித்துக் கொலை செய்த சந்தேகத்தில் மூவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலை இளையதம்பி வீதியைச் சேர்ந்த சோம சுந்தரம் இராசம்மா (வயது 72) என்ற 4 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

கடந்த 21ஆம்திகதிபட்டப்பகலில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. கொட்டடிமற்றும்அரியாலைப் பகுதி யைச் சேர்ந்த இளைஞர்கள் மூவரே இக் கொலைதொடர்பாகச்சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரிடமும் விசாரணை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்றுயாழ்.பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-106)



அக்கராயன் ஆசிரிய வள நிலையம் பயன்படுத்தப்படாமல் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதைக் காணலாம். (ச-18)

# குடிதண்ணீர் வசதியின்றி பயணிகள் பெரும் சிரமம்

## வவுனியா பஸ் நிலையத்தில்

வவுனியா பஸ் நிலையத்திலும், அதனை அண்மித்த கடைத் தொகுதிகளுக்கும் குடிதண்ணீர் வசதி சீராக ஏற்படுத்திக் கொடுக்கப்படாததால் பயணிகள் உட்பட வர்த்தகர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா பஸ் நிலையத்துக்கு வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பயணிகள் மற்றும் உள்ளூர் பயணிகள் எனப் பலரும் வருகை தருகின்றனர்.

அதனால் அவர்களுக்காக குடிதண்ணீர்த் தாங்கி ஒன்றை அமைத்து குடி தண்ணீரை சீராக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

> பஸ்களில் இருந்து வரும் பயணிகள் உட்பட பலரும் தண்ணீர்த் தாகத்தினால் அவதிப்படுகின்றனர்.

பஸ்களில் பயணிப்போர் உட்பட அங்கு வரும் பலரும் தண்ணீர்த் தாகத்தினால் அவதிப்படுகின்றனர். எனவே தண்ணீர்த் தாங்கி மற்றும் குழாய் மூலம் உரிய வகையில் தண்ணீர் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# கதவுகள், ஜன்னல்கள் திருட்டு

பூநகரி, ஜூன் 7

கிளிநொச்சி, பூநகரி சின்னப் பல்லவராயன்கட்டு கிராமத்தில் நிரந்த வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடு ஒன்றின் கதவுகள், ஜன்னல்கள் என்பன கடந்த வியாழன் இரவு திருடப்பட்டுள்ளன.

சின்னப் பல்லவராயன் கிராமத்தில் வாழ்கின்ற 48 குடும்பங்களில் 28 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அவ்விதம் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளின் ஜன்னல்கள், கதவுகள் என்பனவே இவ்விதம் திருடப்பட்டுள்ளன என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

இந்த வீட்டின் புதிய கதவுகள், ஜன்னல்கள் வீட்டு உரிமையாளரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரிய இடத்தில் பொருத்தப்பட்ட நிலையிலேயே அன்றைய தினம் இரவே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-18)

# மின்சாரம் வழங்கப்படாமல் சில பகுதிகள் புறக்கணிப்பு

## அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை இல்லை

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி, ஏ-35 வீதியின் கோரக்கன்கட்டு கிராமத்தின் ஒரு பகுதிக்கும் முல்லைத்தீவு, நெத்தலியாறு கிராமத்தின் ஒரு பகுதிக்கும், மின்சாரம் வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதிகளின் கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு ஏ-35 வீதியின் உண்டியல் சந்தியல் இருந்து வை.எம்.சி.ஏ. சந்தி வரைக்குமான பகுதிகளுக்கு இது வரை மின்சாரம் வழங்கப் படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

> இரண்டு கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மின்சாரம் வழங்கப்படாதமை குறித்து மக்கள் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்திய போதும் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறினர்.

எனவே கோரக்கன்கட்டு, நெத்தலியாறு கிராமங்களின் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரத்தை வழங்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தந்தப் பகுதிகளின் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# தொடரும் மண் அகழ்வை கட்டுப்படுத்த வேண்டும்

## பயிர்ச் செய்கை நிலங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி, ஊரியான் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக தொடர்ந்து மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது. இதனைக் கட்டுப்படுத்தி பயிர்ச் செய்கை நிலங்களைப் பாதுகாக்குமாறு அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி மற்றும் ஊரியான் வயல் காணிகளில் தினமும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று மக்கள் கூறினர்.

பிற இடங்களைச் சேர்ந்தவர்கள் இந்தப் பகுதிகளில் உள்ள சிலரின் துணையுடன் தொடர்ந்தும் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வுகளில் ஈடுபட்டு வருகின் றனர்.

காலபோக செய்கைகளை மேற்கொள்ளும் விவசாய நிலங்களில் இருந்து மணல் அகழ்வு இடம்பெற்று வருவதால் பயிர் செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் சுட்டிக் காட்டினர்.

இந்தப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இது வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறினர். எனவே சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# தூதரக அதிகாரிகள் குழு கிளிநொச்சி வருகை

## அரச அதிபருடன் சந்திப்பு

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சிக்கு வருகை தந்த அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவினர், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரனை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அமெரிக்காவின் இராஜாங்க செயலர் தோமஸ் பறக்கே மற்றும் நேபாளம், இலங்கை போன்ற நாடுகளுக்கான இணைப்பாளர் ஜெசிக்கா மன்சூர் ஆகியோர் அடங்கிய குழு வினரே இவ்வாறு அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் மற்றும் மீள்குடியேறிய மக்களுக்காக முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் சயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டன. (ச-55)

# சாரணியர் வார ஆரம்பம்

வவுனியா, ஜூன் 7

2014 ஆம் ஆண்டுக்கான சாரணிய சேவை மற்றும் பொதுத் தொடர்புகள் வாரம் நேற்றுமுன்தினம் நாடளாவிய ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இலங்கை சாரணர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இலங்கை சாரணர் சேவை மற்றும் பொது தொடர்பு வாரம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

# கலைஞருக்கான ஒன்றுகூடல் திங்களன்று

வவுனியா, ஜூன் 7

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் அனைத்து கலைஞர்களுடனான ஒன்றுகூடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.15 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தெரிவித்தார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலரின் உத்தரவுக்கு அமைய இந்தக் கலைஞர் ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில் கருத்து பகிர்வு, எதிர்காலத் திட்டங்கள் உட்பட முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன.

எனவே இதில் கலைஞர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (ச-402)



வற்றி வரும் குளம்

# கொடும் வறட்சியால் வற்றுகிறது குளம்

## விவசாயம் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி பிரதேசத்தில் நிலவும் வறட்சி நிலை காரணமாக புதுமுறிப்புக் குளம் வற்றி வருகிறது. அதனால் இந்தக் குள நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தக் குளத்தின் நீர் மட்டம் குறைந்து வருவதால் புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் ஆகிய கிராமங்களில் உள்ள கிணறுகளில் உள்ள தண்ணீரும் வற்றி வருகிறது.

அதனால் குடிதண்ணீரைப் பெறுவதில் தமக்குச் சிரமம் ஏற்பட் டுள்ளது என்று மக்கள் கூறினர். (ச-18)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா விளக்கு வைத்த குளம் கிராம மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா புதிய வேலர் சின்னக்குளம், ஆனந்தகுமாரசாமி வித்தியாலயம், இறம்பைக் குளம், நடராஜா வித்தியாலயம், விளாத்திக்குளம், அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த காலப் போரால் இடம்பெயர்ந்து தற்காலிக வீடுகளில் வசித்து வரும் வறிய நிலையில் உள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச-402)

# சந்தைப்படுத்துகின்ற வசதியில்லாத விவசாயிகள் தொடர்பு கொள்ளவும்

## வவுனியா விவசாயத் திணைக்களம் வேண்டுகோள்

வவுனியா, ஜூன் 7


வவுனியா மாவட்டத்தில் பப்பாசி, தோடம் பழங்களை உற்பத்தி செய்தும் அவற்றைச் சந்தைப்படுத்தும் வசதியில்லாத விவசாயிகளை மாவட்டத்தின் விவசாயத்திணைக்கள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு கேட்டுக் கொண்டுள்ளார்.

> பயிர்ச் செய்கை குறித்து ஆலோசனை வழங்கப்படும்.

வவுனியா மாவட்டத்தில் பப்பாசி, தோடம்பழ செய்கையாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வேண்டிய மானிய வசதி மற்றும் பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனைகளை வழங்க வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தயாராகவுள்ளனர்.

எனவே விவசாயிகள் அலுவலக நேரத்தில் தமது விவரங்களை பதிவு செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-402)

# உடல் எடையை அதிகரிக்கும் பழங்கள்



### வாழைப்பழம்

வாழைப்பழத்தில் கலோரிகள் அதிக அளவில் இருப்பதால், இவற்றை உடல் எடையை குறைக்க நினைப்போர் சாப்பிடக் கூடாது. ஆனால் உடல் எடையை அதிகரிக்க நினைப்போருக்கு இது ஒரு அருமையான பழம்.



### உலர் பழங்கள்

உலர் பழங்களான உலர் திராட்சை, முந்திரி, பாதாம் போன்றவற்றில் கொழுப்புக் கள் மற்றும் கலோரிகள் அதி கம் இருக்கின்றன. எனவே எடையை அதிகரிக்க நினைப் போர் தினமும் உலர் பழங்களை அதிகம் சாப்பிட்டு வாருங்கள். ஆனால் இவற்றை எடையைக் குறைப்போர் சேர்க்கக்கூடாது.

### மாம்பழம்

உடல் எடையை அதிகரிக்க நினைப் போருக்கு கோடைகாலம் தான் சிறந்தது. மாம்பழமானது கோடை யில் மலிவு விலையில் கிடைக்கும். இந்த மாம்பழத்திலும் கலோரிகள் எண்ணற்ற அளவில் உள்ளன. எனவே எடையை அதிகரிக்க நினைப்போர் கோடை காலத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.





### அத்திப்பழம்

அத்திப்பழத்திலும் கலோரிகள் அதி கம் உள்ளன. அதிலும் ஒரு பழத் தில் 111 கலோ ரிகள் இருக்கும். எனவே எடையைக் குறைக்க நினைப்போர் இதனைச் சேர்க் கவே கூடாது.

### பேரீச்சம் பழம்

பேரீச்சம் பழத்தை தினமும் சாப் பிட்டு வந்தால், உடல் எடை அதி கரிக்கும்.
மேலும் 5 பேரீச்சம் பழத்தில் 114 கலோரிகள் நிறைந்துள்ளன.




# மீன் சாப்பிட்டால் நோய்கள் ஏற்படா

கடல் வகை உணவுகளிலேயே அதிகம் பேர் விரும்பிச் சாப்பிடுவது மீன்தான். மீனில் எண்ணற்ற அளவில் விற்றமின் கள் மற்றும் கனிமச் சத்துக்கள் இருக்கின் றன.

ஆஸ்துமாவினால் பாதிக்கப்படுவோர், மீனை உணவில் அதிகம் சேர்த்து வந் தால், ஆஸ்துமாவின் தாக்கத் தைக் குறைக்கலாம்.

அதிலும் குழந்தைகளுக்கு மீன் கொடுத்து வந்தால், ஆஸ்துமா வராமல் தடுக்கலாம். மீன் சாப் பிடுவது கண்களுக்கு நல்லது என்று சொல்கின்றனர்.



வயதாகஆக, வாரம் ஒரு முறை மீனை உட்கொண்டு வந்தால், முதுமையில் ஏற்படும் ஞாபக மறதியைத் தடுக்கலாம். மீன் சாப்பிட்டால், இரத்தத்தில் உள்ள அதிகப்படியான கொலஸ்ட்ரா லின் அளவைக் குறைக்கலாம்.

நீரிழிவு உள்ளவர்கள், மீனை உணவில் சேர்த்து வந்தால், இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவைச் சீராக வைத் துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வாரமும் மீனைத் தவறாமல் உட்கொண்டு வந்தால், இதயம் சீராக இயங்கி, இதய நோய் மற்றும் பக்கவாதம் போன்றவை வராமல் தடுக்கும்.

மீன் சாப்பிட்டால் உடலில் உள்ள பிரச் னைகள் குறைவது மட்டுமின்றி, அந்தப் பிரச்சினைகளால் பொலிவிழந்து காணப் படும் சருமமும் பொலிவோடு காணப் படும்.

> உணவில் பாகற் காயைச் சேர்த்து வந்தால், இரத்தத் தில் உள்ள குளுக்கோஸின் அளவு கட்டுப்பாட் டுக்குள் இருக்கும்.



# நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் பாகற்காய்



நீரிழிவு நோய் உள்ளவர் கள் உணவில் பாகற்காயை சேர்த்து வந்தால், இரத்தத் தில் உள்ள குளுக்கோஸின் அளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

அதிலும் அந்தப் பாகற்காயை வேக வைத்துச் சாப்பிடுவ தற்குப் பதிலாக, அதனை ஜூஸ் போன்று செய்து தின மும் ஒரு குவளை குடித்து வந்தால், நீரிழிவை கட்டுப் பாட்டுடன் வைத்துக் கொள்ள முடியும்.

# அளவுக்கு அதிகமாக குறுந்தகவல் அனுப்பினால் குருடாகும் கண்கள்





> குறுந்தகவல் அனுப்பு வர்களுக்கு கண் அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு நோய் அறிகுறிகள் தென்படும். கரும்புள்ளிகள் அதிகரிக்கும். இந்த நோய்க்கு உடனடி யாக சிகிச்சை அளிக்கா விட்டால் பார்வை முற்றிலும் பறிபோய் விடும்.

அளவுக்கு அதிகமாக கையடக்கத் தொலை பேசியில் குறுஞ்செய்திகள் அனுப்பினால் கண்கள் குருடாகும் என்று தெரிய வந்துள்ளது. சீனாவைச் சேர்ந்த 26 வயது வாலிபர் ஒருவர் தனது காதலிக்கு இரவில் அளவுக்கு அதிக மான செய்தி அனுப்பி கண்பார்வையை இழக்கும் அபாயக் கட்டத்தில் இருக்கிறார்.

இருட்டில் அவர் தொடர்ந்து குறுந்தகவல் அனுப்பியதால் விழித்திரை கிழிந்து விலகி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விழித்திரை விலகினால் உள்வரும் ஒளிக் கதிர்களிலிருந்து தெளிவான காட்சியைப் பெற முடியாது.

இவ்வாறு விழித்திரை விலகல் பெரும்பாலும் கிட்டப்பார்வை உடையவர்களுக்கே ஏற்படு கிறது.

இவர்களுக்கு கண் அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு அறிகுறிகள் தென்படும். கரும்புள்ளி கள் அதிகரிக்கும். இந்த நோய்க்கு உடனடி யாக சிகிச்சை அளிக்காவிட்டால் பார்வை முற்றிலும் பறிபோகும்.

கையடக்கத் தொலைபேசியில் அளவுக்கு அதிகமாக குறுந்தகவல் அனுப்பியதால் இப் போது விழித்திரை விலகல் நோயால் பாதிக் கப்பட்டுள்ள சீன நபருக்கு அறுவைச் சிகிச்சை செய்தால்தான் கண்பார்வை நீடிக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெயா - சம்பந்தன் சந்திப்பு மிக அவசியம்; அவசரம்

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரும் வெற்றியைப் பெற்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.இ.அ.தி.மு.க.) தலைவி ஜெயலலிதாவை வாழ்த்தியும் பாராட்டியும் தான் எழுதிய கடிதத்தில் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கான பதில் வழங்கப்பட்டு விட்டதாகவோ, தன்னைச் சந்திப்பதற்கு சம்பந்தனுக்கு ஜெயலலிதா நாள் ஒதுக்கிவிட்டார் என்றோ இதுவரையில் செய்தி இல்லை.

ஆனால், அத்தகைய ஒரு சந்திப்பு மிக விரைவில் மிகக் காத்திரமாக - செம்மையான முற்கூட்டிய தயார்ரிப்புகளுடன் - நடக்க வேண்டியதன் அவசியத்தை, அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசியபோது ஜெயலலிதா கொடுத்த மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்த கருத்து ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனெனில் தமிழக முதலமைச்சர் வலியுறுத்தியிருக்கும் விடயத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்திருக்கும் விடயத்துக்கும் இடையில் அடிப்படையிலான முரண்பாடு உள்ளது.

"இலங்கையில் நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடரவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் நாம் கோரியுள்ளோம். இதனை எட்டுவதற்கு உங்களின் முழு ஆதரவு தொடர்வது அவசியம்" என்று ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதத்தில் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

மோடிக்கு ஜெயலலிதா அனுப்பிய கடிதத்திலோ, இலங்கையில் இனஅழிப்பு நடந்தது என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தமிழீழம் அமைவது தொடர்பில் ஈழத் தமிழர்களிடமும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமும் கருத்துக் கணிப்பு நடத்துவதற்கான தீர்மானம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா முன்மொழிய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இல்ங்கையில் நீதி, சமத்துவமான தீர்வை சம்பந்தன் கேட்க, தனித் தமிழீழம் வேண்டும் என்கிறார் ஜெயலலிதா. இரு தலைவர்களில் எவர் சொல்வது சரி என்பதை விவாதிப்பதல்ல எமது நோக்கம். பதிலாக ஒரே பிரச்சினை விடயத்தில் இரு தலைவர்களுக்கும் இடையில் காணப்படும் கொள்கைத் தூரத்தைச் சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது. இத்தகைய இடைவெளி ஈழத் தமிழர்களுக்குப் பயனுள்ளதாக எதிர்காலத்தில் அமையாது.

ஈழத் தமிழர்களே வலியுறுத்தாத - கேட்காத - விரும்பாத ஒன்றைத் தமிழகம் தன்னுடைய சுயநலனுக்காக - வாக்குச் சேகரிப்புக்காக - கேட்கிறது என்று சிங்கள ஆட்சியாளர்களும் இந்திய மத்திய அரசும் இந்த விடயத்தைத் தூக்கி வீசிவிட வழியேற்படுத்திவிடும் இந்த இடைவெளி.

இரு தலைவர்களுமே தமிழர் நலன்களுக்காகத்தான் செயற்படுகிறார்கள். அக்கறை கொள்கிறார்கள். அரசியல் ரீதியில் செயற்படுகிறார்கள். அதேநேரத்தில் அவர்கள் இடையே புரிந்துணர்வின்மை ஒன்று நிலவுவது தெரிகிறது. இது விரைவில் களையப்படவேண்டும்.

கள யதார்த்தத்துக்கு ஏற்ற வகையில் செயற்படுதல் அல்லது இலக்கை நோக்கி முன்னேறுவதற்கு ஏற்ற வகையில் களத்தைத் தயார்ப்படுத்தி மாற்றியமைத்தல் என்பதில் இரு தலைவர்களும் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்கு அவர்களுக்கு இடையிலான சந்திப்பு விரைவில் ஒழுங்கு செய்யப்படவேண்டும். ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பும், அதில் தமிழகத்தின் வகிபாகமும் ஒரே நேர்கோட்டில் பயணிக்க வேண்டிய தருணம் இது. அதை நோக்கி நகர ஜெயலலிதா - சம்பந்தன் சந்திப்பு மிக மிக அவசியம்; அவசரம்.



# இந்திய மீனவர் எல்லை தாண்டும்வரை

# நல்லதொரு தீர்வு கிட்டுவது கடினம்

சேரலாதன்

புதிய இந்தியப் பிரதமர் மோடியின் பதவியேற்பின்போது, சற்று ஓய்ந்திருந்த இந்திய மீனவர் பிரச்சினை மீண்டும் மெல்ல மெல்ல விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்து விட்டது. இந்திய மீனவர் இலங்கைக் கடற்படையால் கைது. இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கடுமையான தாக்குதல், வள்ளங்களுக்கும் சேதம் போன்ற செய்திகள் மீண்டும் பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்துள்ளன. இவை புதிதாகப் பதவியேற்றுள்ள இந்திய அரசுக்கு நிச்சயமாக மகிழ்ச்சியைக் கொடுக்காது. ஏனென்றால் இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக தமிழ் நாட்டின் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் ஆளும் பா.ஜ.கட்சி கால் ஊன்ற வேண்டுமானால் இந்த மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரமாகவே தீர்வொன்றைக் காண வேண்டியதொரு நிர்ப்பந்தம் மோடியின் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர் என்று பொதுவாக அழைக்கப்பட்டாலும் தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களான மீனவர்களே பிரச்சினைகளுக்குள் சிக்கித் தவிக்கின்றனர். இந்த மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழையும்போது தான் பிரச்சினையே ஆரம்பிப்பதாக இலங்கைத் தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ள கச்சதீவு என்று அழைக்கப்படும் சிறிய தீவே பிரச்சினைகளின் மையக் களமாக அமைந்துள்ளது.



கச்சதீவு இலங்கையின் யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்தின் இராமேஸ்வரத்துக்கும் இடையில் அமைந்துள்ளது. மனித நடமாட்டமே இல்லாத இந்தத் தீவு 285 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இதனை சேதுபதி மரபில் வந்த அரசர்கள் தமது ஆளுகைக்குள் வைத்திருந்தனர். பின்னர் இராமநாதபுரம் மன்னரின் ஆட்சிப் பொறுப்பினுள் இந்தத் தீவு கொண்டுவரப்பட்டது. அவர் இந்தத் தீவை தனி நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டுக் கொண்டிருந்தாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் கச்சதீவுக் கடல் பகுதியில் மீன்பிடிப்பதுடன் தமது வலைகளை கச்சதீவின் நிலப்பரப்பில் காய வைக்கும் செயற்பாட்டிலும் தடையின்றி ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அப்போதைய இந்தியப் பிரதமரான இந்திராகாந்தி அம்மையார் முன்னாள் இலங்கைப் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் செய்து கொண்ட நல்லெண்ண ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1974 ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கைக்கு உரித்தானது. ஒப்பந்தத் திகதியிலிருந்து 10 வருடங்களுக்கு இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கவும், வலைகளைக் காயவைக்கவும், வழிபாடு நடத்துவதற்குச் சென்று வரவும் அனுமதி வழங்கப்பட்டது. இதனால் இந்திய மீனவர்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் இந்த 10 வருடங்களின் பின்னரும் அனுமதி இல்லாத நிலையில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதால் பிரச்சினைகள் உருவாகின்றன. கச்சதீவு இலங்கையிடம் கைமாறும் போது தமிழ் நாட்டிலிருந்து பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பின. ஆனால் இந்திய மத்திய அரசு அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. ஏனென்றால் பாதிக்கப்படப் போகின்றவர்கள் தமிழ்நாட்டு மீனவர்களே என்ற அலட்சிய மனோபாவம் அதனிடம் இருந்திருக்கலாம். வடநாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இதில் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தால் கச்சதீவு ஒப்பந்தமே ஏற்பட்டிருக்கமாட்டாது என்பதுடன் தீவின் உரிமையும் இலங்கையிடம் போய்ச் சேர்ந்திருக்காது.

தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும் போது இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபடுவது தெளிவாகத் தெரிகின்றது. அவர்கள் தினமும் ஆயிரக் கணக்கான படகுகளில் வந்து மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். இதில் கணிசமானவை இலங்கைக் கடற் பரப்பினுள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. பல படகுகள் இலங்கைக் கடற் பரப்பில் மட்டுமன்றி கரையோரங்களிலும் தொழிலில் ஈடுபடுகின்றன. இதனால் இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மீன்வளத்தை அள்ளிச் செல்வதுடன் மட்டுமல்லாது அதனை அழிப்பதுடன் இங்குள்ள மீனவர்களின் வலைகளை நாசம் செய்யும் செயற்பாட்டிலும் இந்திய மீனவர்கள் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. பாதிப்பை ஏற்படுத்துபவர்களும், பாதிக்கப்படுபவர்களும் தமிழர்கள் என்பதுதான் வேதனையைத் தருகின்றது. இலங்கைக் கடற்பிரதேசத்தில் தான் மீன் வளம் அதிகம் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே எல்லை தாண்டுகின்றோம். மேலும் கச்சதீவின் உரிமையை எம்மால் விட்டுக் கொடுக்க முடியாது என இந்திய மீனவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

கச்சதீவு இலங்கைக்கு என்றாகிவிட்ட பிறகு அதில் உரிமை கோருவதற்கு வேறு எவருக்கும் அருகதை இல்லை யென்பது தான் உண்மை நிலையாகும். இதனை அறிந்திருந்தும் விதண்டாவாதம் பேசுவதில் பயனொன்றும் ஏற்படப் போவதில்லை. மேலும் வட பகுதிக் கடற்பரப்பினுள் அதிகளவு தென் பகுதி மீனவர்களும் ஊடுருவியுள்ளதுடன் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். இவர்களுக்குப் படையினரின் ஆசீர்வாதம் நிறையவே கிடைக்கின்றது. ஆனால் பாதிக்கப்படுவது வடபகுதித் தமிழ் மீனவர்கள்தான். இந்திய மீனவர்களாலும் இவர்கள்தான் பாதிக்கப்படுகின்றனர்.

நரேந்திரமோடி அரசு பதவியேற்ற பின்னர் தமக்குப் பாதுகாப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கை இந்திய மீனவர்களிடம் நிறையவே காணப்பட்டது. இதன் காரணமாகவே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மோடியின் பதவியேற்பு விழாவுக்குச் செல்வதற்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதை அவர்கள் விரும்பவில்லை. இன ரீதியான உணர்வை விட தொழில் ரீதியான உணர்வே அவர்களிடம் மேலோங்கிக் காணப்பட்டது. மோடியை அவர்கள் மிகவும் நம்பியிருந்தனர். அவர் இலங்கையைத் தமது விடயத்தைப் பொறுத்தவரை ஒரு வழிக்குக் கொண்டு வந்து விடுவாரென்ற எதிர்பார்ப்பும் நிறையவே காணப்பட்டது. ஆனால் மோடியால் பெரிதாக எதனையும் சாதிக்க முடியாது என்பதை அவர்கள் அறிந்திராதமை பரிதாபகரமானது சர்வதேச கடல் விதிகளின் பிரகாரம் ஒரு நாட்டின் கடற்பரப்பினுள் அனுமதி பெறாது நுழைவது ஒரு குற்றச் செயலாகும். இதனை மீறுபவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்க முடியும். இதுதான் இலங்கைத் தரப்பினரால் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. எமது மீனவர்கள் உங்களது கடல் எல்லைக்குள் வருவார்கள். போவார்கள். அதனையெல்லாம் கண்டு கொள்ளாதீர்களென மோடியால் இலங்கை அரசிடம் கூற முடியுமா? அவ்வாறெனில் இலங்கை மீனவர்கள் சும்மா பார்த்துக் கொண்டு இருப்பார்களா? ஆகவே எல்லை தாண்டுவதும், கைதுசெய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர் கதையாகத் தொடரத்தான் போகின்றது. இதற்கு மோடியால் என்ன செய்ய முடியும் என்பது புரியாத புதிராகவே காணப்படு கின்றது.

ஆகவே அரசியல்வாதிகள் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மீனவர் பிரச்சினையைத் தமது கரங்களில் எடுத்து வைத்துக் கொண்டு என்னதான் கூறினாலும் இந்திய மீனவர் எல்லை தாண்டும் வரை பிரச்சினை இருக்கத்தான் போகின்றது. இதற்கு எதிராக இந்தியாவின் புதிய அரசினாலும் அதன் பிரதமரான மோடியாலும் எதனையுமே சாதிக்க முடியாது என்பதுதான் யதார்த்தமாகும்.

# பாழாக்கப்படும் யாழ்.மாவட்டம்

■ வி.காயத்திரி

யாழ்.மாவட்டம் பாழ் மாவட்டமாக மாறிவருகின்றது. குறைந்தளவிலான மழை வீழ்ச்சியும், சுற்றுச்சூழலில் பொதுமக்களின் அக்கறையின்மையும் இந்தப் போக்கை மேலும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன. போரும் தன்னாலான இயற்கை அழிவை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திவிட்டுப் போயிருக்கின்றது.

கடந்த 7 வருடங்களில் புவி வெப்பமடைதல் பாதிப்புக்கள் உலகளவில் இரட்டை மடங்காகியுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை இரவு மற்றும் பகல்நேர வெப்பநிலை படிப்படியாக அதிகரித்து வருவதாக வானிலைமையத் தரவுகள் தெரிவிக்கின்றன. தற்போது யாழ். குடாநாட்டிலும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது. மழைவீழ்ச்சியும் 50 வருடங்களுக்கு முன்னர் கிடைத்த அளவிலும் பார்க்க வெகுவாகக் குறைந்து வருகின்றது. யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் தட்ப வெப்பம் மழைவீழ்ச்சியின் அளவை வெகுவாகக் குறைத்து விட்டது. பின்வரும் தரவுகள் யாழ்.குடாநாட்டின் அண்மைக்கால மழைவீழ்ச்சி நிலையைக் காட்டுகின்றன.

பருவ மழைவீழ்ச்சி குறைவடைவதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள குளங்கள் உள்ளிட்ட சிறு நீர்நிலைகள் வற்றியிருக்கின்றன. வறட்சியினால் பெரும்பாலான கால்நடைகள் குடி தண்ணீருக்கே சிரமப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் பெரியளவில் மேற்கொள்ளப்பட்ட வழுக்கையாற்றுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட பல குளங்களில் கூட நீர் வற்றியநிலை காணப்படுகின்றது. அத்துடன் மழைநீரை நம்பியிருக்கும் பயிர்கள் கூட உரிய பயனைத் தர முடியாமல் உள்ளதுடன், அத்தகைய செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளிடையேயும் வறட்சி நிலையேற்பட்டுள்ளது. 2013, 2014 கால மழைவீழ்ச்சித் தரவை நோக்கும்போது 2013இல் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மழை வீழ்ச்சி குறை வாகவும் 2014இல் மார்ச் மாதத்தில் மழைவீழ்ச்சியே இல்லாத நிலை நிலவியமையையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் நெல் அறுவடையின் பின்னர் மேற்கொள்ளப்படும் இடைக்காலப் பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. செய்கை பண்ணப்பட்ட சில பயிர்களைக் கூட வறட்சியிலிருந்து பாதுகாக்க வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இவ்வாறான நிலை ஏற்பட தனியே இயற்கையை மட்டும் குற்றம் சுமத்துதல் தவறு. மனித நடவடிக்கைகளும் காரணமாக அமைகின்றன. நீரின் அதீத பாவனை கூட வறட்சிக்கு வழி சமைக்கின்றது. அதாவது சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப வகைதொகையின்றி அளவுக்கதிகமான நீர் நுகரப்படுறது. வீட்டுக்கு வீடு வாசல்படி என்பதுபோல் ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறோ அல்லது குழாய்க் கிணறோ கட்டாயம் இருக்கும். அதேபோல் தோட்ட நிலங்களிலும் கூட குறைந்தது ஒரு கிணறாவது இருக்கும். யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை 66,000 முதல் 70,000 வரைக்கு மேற்பட்ட கிணறுகள் வீட்டுத் தேவைக்காகவும், 18,000 முதல் 20,000 வரையான கிணறுகள் விவசாயத் தேவைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. அதிகமான நீர் நுகர்வு ஒரு விதத்தில் வறட்சிக்கு காரண மாக அமைவதுடன் சூழலியல்சார் பிரச்சினைகளுக்கும் அடிகோலுகின்றது. அதிகமான நீரிறைப்பு ஒரு விதத்தில் உவர்நீர் அதிகரிக்கவும் வழியேற்படுத்துகின்றது. அதிகமான நீரிறைப்புக் காரணமாக வறண்ட மாதங்களில் உவர்த் தன்மையை யாழ்.குடாநாட்டின் 23 வீத கிணறுகள் கொண்டிருக்கும். மார்கழியில் இந்தநிலை 10 வீதமாகக் குறைவடையினும் 23வீத பரப்பு உப்புநீரைக் கொண்டுள்ளதனால் எப்படியும் நீர் மாசடைதல் நிகழ்ந்தே தீரும். யாழ்.குடா நாட்டின் தீவுப் பகுதிக் கிணறுகள், கரை யோரக் கிணறுகள் பலவும் ஏற்கெனவே உவராகி விட்டன. தற்போதும் கூட ஏனைய கிணறுகள் உவராகி வருகின்றன.

அத்துடன் நைதரசன் செறிவு அதிகரிப்பது கூட இன்று பாரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. யாழ். மாவட்டத்தில் ஒரு சதுர கிலோமீற்றருக்கு 430 பேருக்கு அதிகமானோர் வாழ்கின்றனர். இதில் அனேகமானோர் விவசாயத்தில் ஈடுபடுவதனால் அதிகளவான செயற்கை உரங்களையும் கிருமிநாசினிகளையும் பயன்படுத்துகின்றனர். இதனால் நீர் நஞ்சாவதுடன் நைத்திரேற் செறிவும் அதிகரிக்கின்றது. வழமையாக ஒரு லீற்றரில் 100 வீதம் முதல் 150 வீதம் வரை நைத்திரேற்றுக் காணப்பட வேண்டும். ஆனால் இங்குள்ள விவசாயக் கிணறுகளில் 50 வீதமானவைஒரு லீற்றருக்கு 45 - 150 வீத நைத்திரேற்றைக் கொண்டுள்ளன. உதாரணமாகக் கூறின், பருத்தித்துறையின் சில பகுதிகளில் ஒரு லீற்றருக்கு 122 - 174 வீதம் வரை செறிவு வேறுபடுகின்றது.



2013, 2014 கால மழை வீழ்ச்சித் தரவை நோக்கும் போது 2013இல் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மழைவீழ்ச்சி குறைவாகவும் 2014இல் மார்ச் மாதத்தில் மழை வீழ்ச்சியே இல்லாத நிலை உள்ளமை அவ தானிக்கப்பட்டுள்ளது. இதனால் நெல் அறுவடையின் பின் மேற்கொள்ளப்படும் இடைக் காலப் பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை சுற்றுச் சூழல் விழிப்புணர்வு வாரம் வடமாகாணத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனைப் போலவே கிணற்றுக்கும் மலசல கூடத்துக்குமான தூரத்தைப் பொறுத்தும் நைத்திரேற்றின் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. யாழ்.மாநகரசபையை அண்டிய பகுதிகளில் சனத்தொகை அதிகமாக உள்ளமையால் நிலப்பரப்புக் குறுக்கமடைவதுடன் கிணற்றுக் கும் மலசலகூடத்துக்குமான தூரம் குறுக்கமடைகின்றது. இதனால் இந்தப்பகுதி நீர் மஞ்சள் நிறமாக மாறும் தன்மை அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பிரிவு, போருக்குப் பிந்திய இன்றைய காலம் வரை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசமாக உள்ளதுடன் இந்தப் பகுதியிலிருந்தே சத்தம் சந்தடியில்லாமல் அதிகளவான சுண்ணக்கற்கள் அகழப்பட்டு தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

குறிப்பாக கீரிமலை தொடக்கம் மாவிட்டபுரம் வீதியின் இருமருங்கிலும் அகலமாகவும், ஆழமாகவும் சுண்ணக்கல் அகழப்படுவதால் நீர் வெளித் தோன்றுவதுடன் கோடைகாலங்களில் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்படுகின்றது. இந்தச்சுண்ணாம்புக் கற்பாறையைப் பொறுத்தவரை 100 கன அடி அளவுள்ள பாறை 10 கன அடி நீரை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மையுடையதால், ஒரு கியுப் கல் உடைத்து எடுக்கப்படும் போது 10 கன அடி நீர் (62.4 கலன்கள்) வெளியேற்றப்படும். இந்நிலை தொடருமாயின் நீண்டகாலப் போக்கில் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக் குவதுடன் உவர் நீர் பரவவும் வழிசமைக்கும். இதனைப் போலவே புனரமைப்புத் தேவைகள், புதிய கட்டடத் தேவைகளுக்காக வகை தொகையின்றிமணல் அகழ்வுஇடம்பெற்றுவருகின்றது. குறிப்பாக நாகர்கோவில், குடத்தனை, அம்பன், அரியாலைப்பகுதி, சாட்டி பிரதேசங்களில் இவை அதிகமாக இடம் பெறுகின்றன.

இதனால் நிலங்கள் ஆழமாக்கப்படுவதால் கடல்நீர் உட்புகுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு அகழப்படும் மணல் சில வெளி நாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் இந்த வளங்கள் இல்லாமல் போவதுடன் சுற்றாடலும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. உதாரணமாகக்கூறின் ஜப்பானுக்கு ஆண்டு தோறும் 44 மில்லியன் இல் மணற் ஏற்றுமதியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுச்சூழல் வாரம்
ஜூன்5 - ஜூன் 11

"இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்"

சுற்றுச்சூழல் என்றுமில்லாத அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருக்கிறதுபோலும்.
மனிதக் கழிவுகளும் தமிழர் வாழ் பகுதிகளை சின்னா பின்னப்படுத்தியிருக்கிறது.
தொடர்ந்தும் சீரழித்துக்கொண்டிருக்கிறது.
எதிர்கால சந்ததியின் வாழ்க்கைத்தேவைகளை சுற்றுச்சூழல்மீது அக்கறைகொள்வது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.



வடமாகாணத்தில் மன்னர் காலத்திலிருந்து உருவாக்கப்பட்ட குளங்கள் பல காணப்படுகின்ற போதிலும் அவை முறையான பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாமையால் மாசடைந்து வருகின்றன. யாழ்.மாவட்டத்தில் 650குளங் களும், 440 கேணிகளும் எந்த வித புனரமைப்புக்கும் உட்படுத்தப்படாமல் மாநகரக் கழிவுகளாலும், நச்சுக்கழிவுகளாலும் நிரம்பி வழிகின்றன. இதில் புல் லுக்குளம், தாராக்குளம் என்பன அதிகமாகப் பாதிக்கப்பட்ட குளங்களாகும். குடிநீர் கிணறுகளுக்கும் இதே நிலையே ஏற்பட்டு வருகின்றது. அண்மையில் ஏற்பட்ட பிரச்சினைகளில் ஒன்று சுன்னாகம் பிரதேசத்திலுள்ள மின்நிலையத்திலுள்ள ஜெனரேற்றர்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒயில் அந்தப் பகுதியின் அயலிலுள்ள கிணற்றுநீருடன் கலப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக மின்சார சபையிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள மலப்பைக் கிராமத்திலுள்ள கிணறுகளில் எண்ணைப் படிவு மிதப்பதாக அந்தக் கிராம வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் நீரின் நிறம் மாற்ற மடைவதுடன் தற்காலத்தில் இதன் தாக்கம் பெருமளவு உணரப்படாதுபோயினும், நீண்ட காலத்தில் பாரிய விளைவை மக்கள் சந்திக்க நேரிடும். தற்போது மாறிவரும் நாகரிக உலகில் மக்கள் அதிகம் நுகரும் பொருள்களில் விதம் விதமான சவர்க்கார வகைகள், ஷம்போ வகைகள், சலவைத்தூள் என்பவற்றின் அதிகரித்த பாவனை காரணமாக நீர் சவர்த்தன்மையாக மாறுவதை அவதானிக்க முடிகின்றது.

மிக முக்கியமான சூழலியல் பிரச்சினைகளில் ஒன்று நாம் பாவித்து எஞ்சிய குப்பைகூளக் கழிவுகளாகும். சனத் தொகை அதிகரிப்பு, இடநெருக்கடி, மக்களின் ஆடம்பர வாழ்வு என்பவற்றின் காரணமாக அதிகரிக்கும் சனத் தொகைக்கு இரட்டிப்பு மடங்கு கழிவுகளும் பெருகுகின்றன. அண்ணளவாக 82293 மக்கள் தொகை கொண்ட யாழ். மாநகரப் பகுதியை எடுத்து நோக்கினால், நாளாந்தம் 56.25 மெற்றிக் தொன் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன.

மக்கள் தமது சுற்றுப்புறச் சுழலை பேணுவது தொடர்பான அக்கறையின்மை, அல்லது விழிப்புணர்வின்மையால் கழிவுகளைக் கைவிடப்பட்ட குளங்களிலும், வீதியோரங்களி லும், கைவிடப்பட்டு இருக் கும் காணிகளிலும் கொட்டுவதால் சூழல் சமநிலை மாற்றமடைகின்றது. அத்துடன் மாநகர சபைப் பணியாளர்கள் குறிப்பிட்ட தினத்தில் கழிவுகளைச் சேகரிக்க வரத்தவறும் பட்சத்தில் மக்கள் தமது வீடுகளுக்கு முன்பான கழிவுப் பொருள்களைப் பைகளில் போட்டு வைத்து ஏமாற்றமடைவதுடன் அந்தக் கழிவுகள் நாளாந்தம் பெருக்கமடையும் நிலை ஏற்படுகின்றது. மேலும் காய் கனிகள், உணவு உட்பட பண்டங்களின் கழிவுகள்வீதிகளில் போடப்படும் போது, அவற்றை நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகள் காவிச் சென்று சந்தை, பஸ்நிலையம் உட்பட வீதிகள் எங்கும் போட்டு விடுகின்ற நிலையுள்ளதுடன், சிலவேளைகளில் அந்தப்பகுதி வீடுகளுக்குள்ளும் கால் நடைகள் மூலம் கழிவுகள் வந்தடைகின்றன. இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு வருவதுடன் நகரின் அழகு கெட்டு நகர்ப்பகுதி அசுத்தமடைகின்றது.


தினமும் நகரின் உணவகங்கள், மற்றும் சுற்றுப்புறங்களிலிருந்து சேகரிக்கப்படும் அனைத்துக் கழிவுகளும் காலை வேளையில் உழவு இயந்திரங்களில் அளவுக்கதிகமாக ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்படுவதால், வீதியில் செல்வோரும், வீதியோரங்களில் குடியிருப்போரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக மாநகர சபையால் நாளாந்தம் காலை 6 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை கழிவுகள் அகற்றப்பட்டு கொண்டுசெல்லப்படுவதுடன், அவை கொண்டு செல்லப்படும் வாகனங்கள் மூடப்படாத நிலையில் இருப்பதாலும், சிலநேரங்களில் இந்த வாகனங்கள் வீதியோரங்களில் நீண்டநேரம் தரித்து நிற்கும் சந்தர்ப்பங்களிலும் கழிவுகளை காகங்கள் வெளியே எடுத்து வீசுவதாலும் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இதனால் காலையில் வீதிகளைப் பயன்படுத்துவோரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற காரணங்களாலும், நடவடிக்கைகளாலும், யாழ். மாவட்ட நீர்வளமும், சுற்றுச்சூழலும் மிகமோசமான பாதிப்பை அடைந்திருக்கின்றது. மக்களும், துறை சார்ந்தவர்களும் இதுகுறித்து அக்கறையெடுக்காவிட்டால் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது.



# டில்லி சென்ற ஜெயலலிதா மீது மோடி அரசு சிறப்புக் கவனம்

## தேடிச் சென்று சந்தித்தனர் அமைச்சர்கள்



ஜெயலலிதா - நரேந்திர மோடி

புதுடில்லி, ஜூன் 07

கடந்த செவ்வாய்க்கிழமை டில்லி சென்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது பிரதமர் நரேந்திர மோடி அரசு சிறப்புக் கவனம் செலுத்தியதாகக் கருதப்படுகிறது.

அவர் சென்ற நாளில் டில்லியில் நேரிட்ட விபத்தில் மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டே உயிரிழந்ததால் முதல்வர் ஜெயலலிதாவின் சந்திப்புகளில் மாற்றம் இருந்ததே தவிர பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை.

சென்னையில் இருந்து தனி விமானத்தில் காலை 8.30 மணிக்குப் புறப்பட்டு டில்லி சென்ற ஜெயலலிதாவுக்கு முண்டேவின் மரணம் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. சாணக்கிய புரியின் புதிய தமிழக இல்லத்துக்கு நண்பகல் 12 மணிக்கு அவர் வந்தார்.

இதனிடையே கோபிநாத் முண்டேவின் மறைவையொட்டி டில்லியில் அரசு சார்பில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் தமிழக முதல்வரின் நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்படும் நிலை ஏற்பட்டது. பிற்பகல் சுமார் இரண்டு மணிவரை முதல்வரின் நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடக்குமா என்பது சந்தேகமாகவே இருந் தது.

அரசு அலுவலகங்களில் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்ட நிலையில் தமிழக முதல்வர் பிரதமரையும் குடியரசுத் தலைவரையும் சந்திக்கும் நிகழ்ச்சிகள் கேள்விக்குறியானது.

இது குறித்து பிரதமர் அலுவலக வட்டாரங்கள் கூறியபோது: இதுபோன்ற சமயங்களில் பிரதமரின் அரசு விழாக்கள், அரசு நிகழ்ச்சிகள் நடைபெறாது. அரசு தரப்புச் சந்திப்புக்களையும் தவிர்க்கவேண்டும் என்பது விதி. இதைப் பிரதமரிடம் தெரிவித்தபோது வெகுதூரத்தில் இருந்து வந்திருப்பதால் தமிழக முதல்வர், ஓமன் நாட்டு அதிபரின் சந்திப்புக்களை மட்டும் இரத்து செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார் என்று தெரிவித்தனர்.

முண்டேவின் உடல் மகாராஷ்டிராவுக்கு அனுப்பப்பட்ட பிறகு இந்தச் சந்திப்பை வைக்கும்படி பிரதமர் அறிவுறுத்தியதாகவும் அதற்கேற்ப நேரத்தை மட்டும் மாற்றி அமைத்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

குடியரசுத் தலைவர் மாளிகையிலும் இதேமுறை கடைப்பிடிக்கப்பட்டு அவருடனும் தமிழக முதல்வரின் சந்திப்பு நடந்ததாகக் கருதப்படுகிறது.

கடந்த ஆட்சியில் மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இணக்கமான உறவு இல்லை. பிரதமர் மோடி மற்றும் தமிழக முதல்வருக்கு இடையில் நல்லுறவு நிலவுகிறது. அதேபோல் பிரபல வழக்கறிஞரான ரவி சங்கர் பிரசாத், ஜெயலலிதாவின் வழக்குகளில் அவருக்காக முன்னிலையானவர். இப்போது மத்திய சட்டத்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றுவிட்ட பிரசாத், தமிழக முதல்வரை அவர் தங்கி இருந்த தமிழ்நாடு இல்லத்திலேயே வந்து மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

இவரைபோல் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் தனிப்பொறுப்பு அமைச்சரான நிர்மலா சீதாராமனும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இவர், தமிழக முதல்வரின் சொந்த ஊரான ரங்கத்தைச் சேர்ந்தவர். எனவே நிர்மலாவுடனான சந்திப்பில் தமிழக முதல்வர் மிகுந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நாளில் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லியை அவருடைய அலுவலகத்திலேயே தமிழக முதல்வர் சந்தித்தது டில்லி அதிகாரிகள் வட்டாரத்தை ஆச்சரியப்படுத்தி உள்ளது. ஏனெனில் கடந்த முறை ஆட்சி செய்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தை ஒருமுறைகூடத் தமிழக முதல்வர் சந்தித்தது இல்லை. இருவரிடையே நிலவிய அரசியல் கருத்து வேறுபாடுகளே இதற்கு முக்கிய காரணமாகக் கருதப்பட்டது. தற்போது ஜேட்லியுடனான முதல்வரின் சந்திப்பால் தமிழகத்துக்கு பல்வேறு பயன்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து நிதி அமைச்சக வட்டாரங்கள் கூறிய போது, மோடியுடனான நட்பின் காரணமாக ஜேட்லியின் சந்திப்பு முதல்வருக்கு பல நன்மைகளைக் கொடுத்துள்ளது. தமிழகத்துக்கு நிலுவையில் இருக்கும் பல்வேறு திட்டங்கள் குறித்து விவாதிக்க மாநில நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தை அனுப்பும்படியும் அவருடன் கலந்து ஆலோசித்து அவைகளை நடைமுறைப்படுத்த வழி செய்வதாகவும் முதல்வரிடம் ஜேட்லி உறுதி அளித்துள்ளார் எனத் தெரிவித்தன. (கு)



ரஜனிகாந்த்

## சந்திரபாபு நாயுடுவின் பதவியேற்பில் ரஜனி?

புதுடில்லி, ஜூன் 07

சீமாந்திரா முதலமைச்சராக சந்திரபாபு நாயுடு பதவியேற்கவுள்ள நிகழ்ச்சியில் நடிகர் ரஜனிகாந்த் கலந்துகொள்ள உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

சீமாந்திரா முதலமைச்சர் தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு நாளை விஜயவாடா குண்டூர் இடையே உள்ள ஆச்சார்யா நாகார்ஜுனா பல்கலைக்கழக வளாகத்தில் பதவி ஏற்கவுள்ளார்.

விழாவில் கலந்து கொள்ளும்படி பிரதமர் நரேந்திரமோடி மற்றும் 11 மாநில முதலமைச்ச[ர்], அமைச்சர்களுக்கு சந்திரபாபு நாயுடு அழைப்பு விடுத்து உள்ளார்.

இதுதவிர நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள், திரையுலக பிரமுகர்கள் உட்பட 5 ஆயிரம் பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பதவி ஏற்பு நிகழ்ச்சியில் பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத்சிங், அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோரும் வருகின்றனர்.

சிவசேனா தலைவர் உத்தவ் தாக்ரே, அகாலி தள தலைவர் பிரகாஷ் சிங் பாதல், அவரது மகனும் பஞ்சாப் துணை முதலமைச்சர் சுக்பீர்சிங் ஆகியோரும் பங்கேற்பது உறுதியாகி விட்டதாக தெலுங்கு தேச கட்சி செயலாளர் சுப்பாராவ் தெரிவி[த்]துள்ளார்.

மேலும், பதவி ஏற்பு விழாவில் நடிகர் ரஜனிகாந்த் மற்றும் ஜனசேனா கட்சி தலைவரும், சிரஞ்சீவி தம்பியுமான நடிகர் பவன்கல்யாண் கலந்து கொள்ள உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. (கு)

# அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் சீக்கியக் குழுக்களிடையே மோதல்

## பலர் காயங்களுடன் மருத்துவமனையில்



மோதலில் ஈடுபடுவோர்

பஞ்சாப், ஜூன் 07

இந்தியாவின் வடக்கு மாநிலமான பஞ்சாபில் உள்ள அமிர்தசரஸ் நகரில் உள்ள சீக்கியர்களின் புனித ஆலயமான பொற்கோவிலில் சீக்கியர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களில் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தியாவில் 1984ஆம் ஆண்டு இந்த பொற்கோவிலில் பதுங்கியிருந்த சீக்கிய ஆயுதக்குழுவினர் மீது இந்திய அரசு நடத்தியத் ஒப்பரேஷன் புளூஸ்டார் எனப்படும் தாக்குதலின் முப்பதாவது ஆண்டு நிறைவு நாளான நேற்று அந்த கோவிலில் சிறப்புப் பிரார்தனைகள் நடத்தப்பட்ட சமயத்தில் இந்த மோதல்கள் நடந்துள்ளன.

சடங்குகளுக்குப் வைக்கப்பட்டிருந்த வாள்களைப் பயன்படுத்தி அவர்கள் சண்டையிட்டது அந்தச் சண்டையின் காணொலியில் காணப்படுகிறது.

3 பேர் படுகாயத்துடன் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் அமிர்தசரஸ் நகரிலுள்ள சீக்கியர்களின் மிகவும் புனிதத் தலமான பொற்கோவிலில் பதுங்கியிருந்த சீக்கியத் தீவிரவாதிகளை உயிரிடுடன் பிடிக்கவோ அல்லது உடலாக மீட்கவோ, இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு முன்னெடுத்த நடவடிக்கையில் குறைந்தது 400 பொதுமக்களும் 87 படைவீரர்களும் கொல்லப்பட்டதாக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை கிட்டதட்ட 1000 என்று சீக்கியர்கள் தெரிவிக்கின்றனர்.

30 வருடங்களுக்கு முன்னர் அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களை நினைவுகொள்ள ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியிக்கு நேற்று வெள்ளிகிழமை இந்தப் புனித கோவிலில் நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் கூடியிருந்தர்.

ஆனால் அந்த விழா ஆரம்பமாகிய உடனே வன்முறை வெடித்தது.

1984ஆம் ஆண்டில் இறந்த தியாகிகளை நினைவுகூர ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் இது நடந்தது மிகவும் வருத்தமான ஒன்று என்று பஞ்சாப் மாநிலத்தின் ஆளுங்கட்சியான அகாலி தளம் கட்சியின் சார்பில் பேசிய பிரேம் சிங் சந்துமஜ்ரா தெரிவித்துள்ளார். கோவிலுக்கு இன்றும் அவமரியாதை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் இந்த வன்முறை செயலில் ஈடுப்பட்டிருந்தவர்கள் மீது அந்த கோவில் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் எனவும் பிரேம் சிங் சந்துமஜ்ரா தெரிவித்தார். (கு)

# அறையை இழந்த அத்வானி

புதுடில்லி, ஜூன் 07

பா.ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானிக்கு நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டிருந்த அறை மாற்றப்பட்டுள்ளதால் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் பாரதீய ஜனதா அமோக வெற்றி பெற்று நரேந்திர மோடி தலை மையில் புதிய அரசு பதவி யேற்றது.


புதிய அரசில் அத்வானிக்குச் சபாநாயகர் பதவி அல்லது தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் இந்தப் பதவிகளை அவர் ஏற்க மறுத்ததாகத் தகவல்கள் வெளியானது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் முடித்த அத்வானி, நண்பகல் உணவு இடைவேளையின்போது தனது அறைக்கு சென்றபோது அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த அவரது பெயர்ப்பலகையைக் காணவில்லை.

அத்வானி தேசிய ஜனநாயக கூட்டணியின் செயல் தலைவர் பதவியில் தொடர்ந்து நீடிக்க மாட்டார் என்பதையே இந்தச் சம்பவம் காட்டுவதாகப் பாரதீய ஜனதா வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்ட அவர், நாடாளுமன்ற பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்துக்குச் சென்று ஓய்வு எடுத்தார். இது சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தும் அறையாகும். (கு)

# காலில் விழுந்து வணங்கும் கலாசாரம் ஏதும் வேண்டாம்

## எம்.பிக்களுக்கு மோடி அறிவுரை



எம்.பிக்களுடன் மோடி

புதுடில்லி, ஜூன் 07

காலில் விழுந்து வணங்கும் கலாசாரத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்பற்றக் கூடாது எனப் பிரதமர் நரேந்திர மோடி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று மக்களவைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன், நாடாளுமன்றத்தின் மத்திய அரங்கில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

அப்போது பேசிய பிரதமர் நரேந்திர மோடி: பா.ஜ.க தற்போது எதிர்க்கட்சி என்ற நிலையில் இல்லை. உங்களுக்கான கடமைகள் பல, நாட்டில் காத்திருக்கின்றன. அதற்காக உழைத்து, இந்த நாடாளுமன்றத்தின் புனிதத்தை நீங்கள் காத்திட வேண்டும். எப்போதும் அடித்தட்டு மக்களிடம் தொடர்பில் இருங்கள். கட்சியின் கடைநிலை பொறுப்பில் இருப்பவர்கள் கூட மக்களுக்காக பாடுபட வேண்டும். அவை சுமுகமாக நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும். அவையின் எல்லா கூட்டங்களிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். காலில் விழுந்து வணங்கும் கலாசாரத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்பற்றக் கூடாது. புதிதாக பதவியேற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், என் காலில் விழுந்து வணங்கினர். எனது காலில் மட்டும் அல்ல, வேறு எந்த தலைவர்கள் காலிலும் விழுந்து வணங்கக்கூடாது. தேவையற்ற துதிபாடுதல்கள் தேவையில்லை. மாறாக மக்கள் நலப் பணிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். (கு)

# ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 2,500 பேர் ஒரே நாளில் சிக்கினர்

ரோம். ஜூன் 07

புகலிடம் தேடி சட்டவிரோதமாக ஐரோபாவுக்குள் நுழைய முயன்ற 2.500 பேர் கடந்த 24 மணி நேரத்தில் மீட்கப்பட்டதாக இத்தாலியக் கடற்படை அறிவித்தது.

கடந்த 24 மணி நேரத்தில் 17 படகுகளில் மத்திய தரைக் கடல் பகுதி வழியே புகலிடம் தேடி சுமார் 2.500 பேர் ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்றனராம். இது குறித்து இத்தாலியக் கடற்படை அதிகாரிகள் கூறிய போது:

சான் ஜியார்ஜியோ என்ற கப்பல் அதிக பட்சமாக 998 பேருடன் வந்தது. இதில் 214 பேர் பெண்கள். 157 பேர் சிறுவர் சிறுமியர்.

இந்த மீட்பு நடவடிக்கையில், நான்கு வர்த்தகக் கப்பல்களும் ஈடுபட்டன. ஆபிரிக்க நாடுகள், எரித்திரியா, சிரியா, லிபியாவிலிருந்து இந்தக் கப்பல்கள் வந்ததாக இத்தாலியக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இவ்வாறு அகதி மக்களை ஏற்றி வரும் கப்பல்கள் கடலில் விபத்துக்கு உள்ளாகி ஆயிரக்கணக்கில் உயிரிழந்துள்ளதாகவும், மீன்பிடிப் படகுகளில் கூட ஆள்களை அளவுக்கு அதிகமாக சிலர் ஏற்றி வருவதாகவும், இந்த மனிதக் கடத்தலைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர். (கு)

## மனிதனின் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளும் ரோபோ



மனித உணர்ச்சிகளை அறிந்து கொள்ளும் பெப்பர்

டோக்கியோ. ஜூன் 07

மனித உணர்ச்சிகளை அறிந்து கொள்ளும் பெப்பர் என்ற புதிய ரோபோவை ஜப்பானின் சொப்ட்பாங்க் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

உலகில் உள்ள மிகப்பெரிய ரோபோ சந்தையான ஜப்பானில், செயற்கை நுண்ணறிவு அமைப்பும், உணர்ச்சிகளை அறியும் ஒரு புதிய தொழில் நுட்பமும் இந்த புதிய ரோபோவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், இந்த ரோபோவினால் ஒருவரின் சைகைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், குரல் தொனிகள் போன்றவற்றை அறிந்துகொள்ள இயலும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனால் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் தொடர்பு கொள்வதுபோல் இந்த ரோபோக்களிடமும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும் என்றும், அது பல்வேறு பணிகளையும் செய்யும் திறமை கொண்டது என்றும் சொப்ட்பாங்க் குறிப்பிட்டுள்ளது.

மேலும், 1,98,000 யென் விலை கொண்ட இந்த ரோபோ அடுத்த வருடம் பொதுமக்களிடம் விற்பனைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

இது பற்றி இந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான மசயோஷி சோன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் இருப்பவர்களை இதயமற்ற ரோபோக்கள் என்று மக்கள் குறிப்பிடுவதுண்டு.

ஆனால் முதன்முறையாக உணர்ச்சிகளையும், இதயத்தையும் கொண்ட ரோபோ தங்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார். (கு)


## ஆபிரிக்க குடியரசில் எஸ்.எம்.எஸ் தடை

மத்திய ஆபிரிக்க குடியரசில் குறுஞ்செய்திகளை அனுப்புவதற்கு அரசு தடை விதித்துள்ளது.

1960ஆம் ஆண்டில் இந்த நாடு சுதந்திரமடைந்த போதிலும் அவ்வப்போது வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நாட்டின் தலைநகரான பங்குய்யில் இடம்பெற்ற வன்முறை ஒன்றின்போது அது பரவுவதற்குக் குறுஞ்செய்திகளே காரணமாக இருந்தமையினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போது தொலைபேசிவலையமைப்புசேவையை வழங்கிவரும் 4 நிறுவனங்களின் வலையமைப்பினூடாக குறுஞ்செய்திகளை அனுப்புவதற்கு அதிரடித் தடை விதிக்கப்பட்டுள்ளது. (கு)



ஜேர்மனியின் நூரம்பெர்க் நகரில் அமைந்துள்ள 650 வருட பழைமையான சென். மார்தாஸ் தேவாலயம் தீ விபத்தில் சேதம் அடைந்துள்ளது. தீயணைப்பு வீரர்கள் மிக வேகமாகச் செயல்பட்டு தீயை அணைத்துள்ளனர். தேவாலயத்தின் கூரை தீப்பிடித்து எரிந்து கட்டடத்தின் உள் பகுதியில் சேதம் அடைந்தது. இந்தத் தேவாலயத்தில், கட்டட வேலைகள் நடந்துகொண்டிருந்த போது இந்தச் சம்பவம் நடந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## சடலங்களால் நிரம்பி வழிகிறது நைஜீரியா

கிவி. ஜூன் 07

வட கிழக்கு நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தீவிரவாதத் தாக்குதலில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

நைஜீரியாவில் உள்ள கோஷே, அட்டகரா, அகபல்வா மற்றும் அகஞ்சாரா ஆகிய கிராமங்களை சேர்ந்த 300 பேர் வரை உயிரிழந்திருப்பார்கள் என அஞ்சப்படுகிறது.

அப்பகுதி தீவிரவாதிகளின் முழு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை எவ்வளவு எனக் கண்டுபிடிக்க இயலவில்லை. மேலும் அப்பகுதி முழுவதும் சடலங்கள் மிகுந்து கிடக்கின்றன என்றும் மக்கள் பலரும் தங்கள் இருப்பிடத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர் எனவும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான பீற்றர் பியே தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளின் தொடர் தாக்குதலால் வடகிழக்குப் பகுதியில் மட்டும் நாளொன்றுக்கு 800 பேர் தங்கள் குடும்பங்களையும், மக்களையும் விட்டு வெளியேறி வருகின்றனர். (கு)

## உலகப் பாடகர் போட்டி கன்னியாஸ்திரி வெற்றி



உலகத் தொலைக்காட்சி போட்டி நிகழ்ச்சியான 'த வாய்ஸ்' பாடகர் போட்டியின் இத்தாலிய வடிவ நிகழ்ச்சியின் இறுதிப் போட்டியில் கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஒருவர் வெற்றிபெற்றுள்ளார்.

இந்தப் போட்டியில் பங்கு கொண்டது முதல் அருட்சகோதரி ஸோர் கிறிஸ்தீனா இணையதளம் மூலம் புகழின் உச்சத்துக்குச் சென்றிருந்தார்.

கன்னியாஸ்திரி உடையுடன் கழுத்தில் சிலுவையுடன் ஸோர் கிறிஸ்தீனா தனது வெற்றிக்காக கடவுளுக்கு நன்றி கூறினார்.

இவர் முதன்முதலாக இந்தப் போட்டிக்குத் தெரிவாவதற்காகப் பாடிய பாடல் யூடியூப் இணையதளத்தில் ஏற்கனவே 50 மில்லியன் தடவைகளுக்கு மேல் பார்க்கப்பட்டுள்ளது.

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சாதாரண மக்களிடம் மேலும் நெருக்கமாகக் கொண்டுசெல்லவேண்டும் என்ற பாப்பரசர் பிரான்சிஸின் வேண்டுகோளைப் பின்பற்றியே தான் இந்தப் போட்டியில் பங்குபற்றியதாக 25 வயதான அருட்சகோதரி கிறிஸ்தீனா கூறினார். (கு)

## மோடியின் வரவுக்காக காத்திருக்கிறது அமெ.

வொஷிங்ரன், ஜூன் 07

பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை ஆவலுடன் எதிர்ப்பார்த்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இருப்பினும், செப்ரெம்பார் மாதம் மோடி அமெரிக்கா வருவார் என்பது குறித்து உறுதியான தகவல் ஏதையும் தெரிவிக்கவில்லை.

இது குறித்து வெள்ளை மாளிகை துணைச் செய்தித் தொடர்பாளர் மேரி ஹார்ப் கூறுகையில்:

பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்காவுக்கு வரவேற்க காத்திருக்கிறோம். இருப்பினும், மோடி வருகை எப்போது என்பது குறித்து இப்போதைக்கு தெரிவிக்க முடியாது என்றார்.

> “ பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்காவுக்கு வரவேற்க காத்திருக்கிறோம். மோடி வருகை எப்போது என்பது குறித்து இப்போதைக்கு தெரிவிக்க முடி யாது என்றார் மேரி ஹார்ப்.

செய்தியாளர்கள் மீண்டும் மோடி எப்போது வருவார் என வலியுறுத்திக் கேட்டபோதும் அதே பதிலையே திரும்பவும் அளித்தார்.

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் அழைப்பை ஏற்றுக் கொண்ட பிரதமர் மோடி, செப்ரெம்பர் மாத இறுதியில் அமெரிக்கா செல்வதற்கான சாத்தியக் கூறுகளை அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (கு)

## மோனிகா விவகாரத்தை நான் மறந்தேவிட்டேன்

### ஹிலாரி கிளின்டன் பேட்டி

வொஷிங்ரன், ஜூன் 07

பில் கிளின்டன்- மோனிகா லெவின்ஸ்கி விவகாரத்தை மறந்துவிட்டேன் என்று ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டனின் மனைவி ஹிலாரி கிளின்டன் 2016 இல் நடைபெற உள்ள் அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடக்கூடும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

66 வயதாகும் அவர் பீப்பிள் மகசின் என்ற இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:-



பில் கிளின்டன்- மோனிகா லூவின்ஸ்கி விவகாரத்தைமறக்க விரும்புகிறேன். அந்த விவகாரம் குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்க விரும்ப வில்லை. வேனிட்டி பேர் இதழில் அண்மையில் வெளியான லூவின்ஸ்கியின் பேட்டியை படிக்கவில்லை. எப்போதுமே நாம் எதிர்காலத்தைக் குறித்து மட்டுமே சிந்திக்க வேண்டும். கடந்த கா[illegible]தை மறந்துவிடவேண்டும்.

நான் அதிபர் தேர்தலில் போட்டியிடுவேனா என்பதை இப்போதே கூறமுடியாது. இன்றைய வாழ்க்கையை அனுபவிக்கிறேன். எனது மகள் செல்ஷியா தாயாகப் போகிறார். நான் பாட்டியாகப் போகிறேன். அதனால் வழக்கத்தைவிடக் கூடுதல் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அமெரிக்காவில் என்ன நடக்கிறது. உலக நாடுகளில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். எனது எதிர்காலப் பணி என்ன என்பது குறித்தும் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்-என்றார். (கு)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: மருத்துவச் செலவு ஏற்படக்கூடும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும்.

**இடபம்**: வியாபாரப் போட்டிகள் குறையும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். வெளியூர்ப் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக் காகப் பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**மிதுனம்**: வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. வீண் அலைச்சலைக் குறைத்துக்கொண்டு வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது. பெரியோர்களின் உதவியும் கிடைக்கும்.

**கடகம்**: மனதில் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும். துணிச் சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர் க்கள். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வியாபார விரி வாக்கம் கைகூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வருமானம் அதிகம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிங்கம்**: வாழ்க்கைத் துணையினால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். சகோதர வழியில் வேண்டிய உதவி கிடைக்கும். பிள்ளைகள் மகிழ்ச்சி யுடன் காணப்படுவார்கள். மனோ தைரியம் கூடும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**: சமூகத்தில் மரியாதை உயரும். பணவரத்து பலவழிகளில் இருந்து கிடைக்கும் அதே நேரத்தில் செலவும் வரும். வாக்கு வன்மை யால் புகழ் கூடும். புதிய நபர்களை நம்பி எதையும் செய்யும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

**துலாம்**: எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். வெளியூர், வெளி நாட்டுப் பயணம் திட்டமிட்டபடி அமையும். அரசாங்கம் தொடர்பான வேலைகள் தடையின்றி நடக்கும். உறவினர்களுடன் சுமூகமான போக்கு காணப்படும். அவர்களால் நன்மையும் உண்டாகும்.

**விருச்சிகம்**: உங்களது செயல்களை மற்றவர்கள் பாராட்டுவார் கள். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். புதிய நபர்களிடம் கவனம் தேவை. உத்தியோகத்தில் முன்னேற்றம் காணப்படும். வெளிநாடு செல்ல ஆர்வம் உண்டாகும். மனதில் தைரியமும் புதிய உற்சாகமும் உண்டாகும்.

**தனுசு**: தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் இருப்பது நன்மை தரும். எதிர்காலம் பற்றிய சிந்தனையும் மனக்கவலையும் ஏற்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். அரச தொடர்புடைய முக்கிய நபர்களின் அறிமுகம், அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மகரம்**: உங்கள் பேச்சை சரியாகப் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆன்மிக பணி களில் கவனம் செல்லும். புதிய காரியங்களில் ஈடுபடுவதைத் தள்ளி போடு வது நல்லது. எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நல்லது.

**கும்பம்**: எதையும் ஒரு முறைக்கு இருமுறை நன்கு யோசித்துச் செய்வது வெற்றியை தரும். வீண் செலவைக் குறைப்பது நல்லது. அடுத்த வருக்கு உதவி செய்யப் போய் அதனால் அவச்சொல் உண்டாகலாம் கவனம் தேவை. பயன்தராத முயற்சிகளைக் கைவிடுவது நன்மை தரும்.

**மீனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த பணியை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். அடுத்தவர் செய்கை கோபத் தைத் தூண்டுவதாக இருக்கும். கவனம் தேவை. அடுத்தவரை நம்பி எந்த விடயத்தையும் விடாமல் நேரடியாகச் செய்வது நன்மை தரும். வேகம் காட்டாமல் விவேகமாக செயற்படுவது வெற்றிக்கு உதவும்.

## நாளை

**வைகாசி-25 ஞாயிற்றுக்கிழமை | 08.06.2014**

திதி: தசமி பி.ப.02.21 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.ப.02.21 வரை
சுபநேரம்: 08.52-10.22 வரை
இராகுகாலம்: 04.22-05.52 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## கீதை - 2

எம் அனைவருக்கும் வாழ்க்கை ஒரு தொடர்ந்த போர். எமது பலவீனத்தையும் கோழைத்தனத்தையும் பொறுமை என்றும், தியாகம் என்றும் கூறிக்கொள்ள விரும்பும் சந்தர்ப்பங்கள் எத்தனையோ வருகின்றன. பிச்சைக்காரனின் தியாகத்தில் சிறப்பு எதுவுமில்லை. எதிர்க்கும் வலிமையுள்ள ஒருவன் பொறுத்தால் அது சிறப்பு. நமது வாழ்க்கையில் எத்தனை தடவை சோம்பலாலும் கோழைத்தனத்தாலும் நாம் போரிலிருந்து விலகிக்கொண்டு, நாம் தைரியசாலிகள் என்று நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம்? இது நமக்குத் தெரியாதா?

கருத்து நிறைந்த இந்தச் சுலோகத்தில் கீதை தொடங்குகிறது. "அரசே, எழுந்திரு! இந்த மனத் தளர்ச்சியை, இந்தப் பலவீனத்தை ஒழி. எழுந்து நின்று போர் புரி (2–3)" பிறகு அர்ஜுனன் கண்ணனிடம் இதைப்பற்றி வாதிட முயல்கிறான். எதிர்ப்பை விட எதிர்க்காமலிருப்பதே சிறந்தது என்றும், இது போன்ற பல நீதிகளையும் கூறுகிறான். எனினும் கண்ணனை ஏமாற்ற முடியாது. அவர் பரமாத்மாவான இறைவன். அர்ஜுனனின் வாதத்திலுள்ள தவறை அவர் உடனே கண்டு கொள்கிறார். அர்ஜுனனின் விடயத்தில் இது கோழைத்தனம். அவன் தனது உறவினர்களைக் காண்கிறான்; அவர்களைக் கொல்ல மனம் வரவில்லை.

# சருமப் பற்றுநோய் சிகிச்சையில் ஊக்கம் தரும் முன்னேற்றம்



மெலனோமா சருமப் புற்றுநோய் சம்பந்தமாக சர்வதேச அளவில் நடத்தப்பட்டுள்ள இரண்டு ஆய்வுகளில் ஊக்கம் தரும் முடிவுகள் வந்துள்ளதாக புற்றுநோய் சிகிச்சை நிபுணர்கள் கூறுகின்றனர்.

சருமத்தில் ஆரம்பித்து மற்ற உடலுறுப்புகளுக்கு பரவிவிட்ட மெலனோமா புற்றுநோயாளிகளின் ஆயுளை அதிகரிப்பதில் இந்த புதிய மருந்துகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

ஒருவருடைய நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டே புற்றுநோய் உயிரணுக்களை இலக்கு வைத்து தாக்கும் வகையில் Pembrolizumab, Nivolumab ஆகிய இந்த மருந்துகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

நோய் எதிர்ப்பு சக்தியால் அடையாளம் காணப்படாமல் இருப்பதற்காக, புற்றுநோய் உயிரணுக்கள் பயன்படுத்திக் கொள்ளும் இரசாயன மாறுவேடத்தைத் தடுத்து செயலிழக்கச் செய்து, இந்த மருந்துகள் செயலாற்றுகின்றன.

மெலனோமா வகை சரும புற்று நோய் முற்றிவிட்டால், அதற்கு சிகிச்சை அளிப்பதென்பது மிகவும் சிரமம்.

அப்படி பரவியவர்கள் சராசரியாக ஆறு மாதங்கள் மட்டும் உயிர்வாழ முடியும் என்ற நிலை, அண்மைக்காலம் வரையில் இருந்துவந்தது.

Pembrolizumab மருந்தை 411 நோயாளிகளிடம் பரிசோதித்துப் பார்த்ததில், அவர்களில் சுமார் 70 வீதமானோர் குறைந்தது ஒரு வருடத்துக்காவது உயிர் பிழைத்திருந்தனர்.

Ipilimumab எனப்படும் நோய் எதிர்ப்புச் சக்தி வலுவூட்ட சிகிச்சை முறையுடன் Nivolumab மருந்தைச் சேர்த்துக் கொடுத்து 53 நோயாளிகளிடம் பரிசோதித்த போது, அதில் 85 வீதத்தினர் ஓர் ஆண்டைத் தாண்டியும் 79 வீதத்தினர் இரண்டு ஆண்டுகளைத் தாண்டியும் உயிர் பிழைத்திருந்தனர்.

பெரிய அளவில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இந்த மருந்துகள் பரவலான பயன்பாட்டுக்கு வரும்.

ஆனாலும் இம்மியூனோதெரபி எனப்படும் நோய் எதிர்ப்பு வழியான சிகிச்சை முறை புற்று நோய் சிகிச்சையில் பெரிய ஊக்கம் தருவதாக இருக்கிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | | 8 | | |
| | | | 2 | | | 5 | 3 | 4 |
| | 4 | 5 | 8 | 3 | 6 | 7 | | 1 |
| | | | | 5 | 9 | | | 8 |
| | | 4 | | | | 2 | | |
| 5 | | | 4 | 1 | | | | |
| 4 | | 2 | 9 | 8 | 5 | 6 | 1 | |
| 8 | 9 | 6 | | | 7 | | | |
| | | 7 | | 4 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 6 | 8 | 9 | 1 | 2 | 4 | 5 |
| 9 | 4 | 5 | 7 | 6 | 2 | 3 | 8 | 1 |
| 1 | 8 | 2 | 3 | 5 | 4 | 6 | 9 | 7 |
| 2 | 5 | 8 | 9 | 7 | 6 | 4 | 1 | 3 |
| 6 | 9 | 4 | 1 | 2 | 3 | 5 | 7 | 8 |
| 7 | 3 | 1 | 5 | 4 | 8 | 9 | 2 | 6 |
| 4 | 2 | 3 | 6 | 8 | 7 | 1 | 5 | 9 |
| 8 | 6 | 9 | 4 | 1 | 5 | 7 | 3 | 2 |
| 5 | 1 | 7 | 2 | 3 | 9 | 8 | 6 | 4 |

# இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழுங்குங்கள்

## ஜனாதிபதி மஹிந்த வேண்டுகோள்

கொழும்பு. ஜூன்7

இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் சிறந்த முறையில் கையளிக்க வேண்டும் என்ற மஹிந்த சிந்தனை கோட்பாட்டுக்கு இணங்க அனைத்து திட்டங்களும் தங்கு தடையின்றி செயன்முறைப் படுத்தப்படும் என்று ஜனாதி பதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் தின தேசிய நிகழ்வுகள் கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது என்னுடைய தேசம். இங்குள்ள அனைத்தும் நம்முடையது. நமக்கானது என்று ஒவ்வொரு குடிமகனும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அப்போதுதான் எமது தேசத்தை எம்மால் பாதுகாக்க முடியும். இயற்கை அழிவுகளுக்கு காரணமாக அமைகின்ற காபன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எமது நாட்டில் நாம் முன்னெடுப்போம். இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாத்து எம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் சிறந்த முறையில் கையளிக்க வேண்டும் என்ற மஹிந்த சிந்தனை கோட்பாட்டுக்கு இணங்க அனைத்துத் திட்டங்களும் தங்கு தடையின்றி செயன்முறைப்படுத்தப்படும். இயற்கையை நாம் இயற்கையான முறையில் பாதுகாப்பதன் மூலம் அழிவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதற்கிணங்க பூரண இயற்கை மூலமாக மின்சார உற்பத்தியை எமது நாட்டில் உருவாக்குவோம்.

ஆசியாவைப் பொறுத்த வரையில் எமது நாடு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் மிக முன்னேற்றம் அடைந்து வரும் நாடாக மாறியுள்ளது-என்றார். (ச-10)

# தென்மராட்சியில் கால்வாய் நோய்

## மாடுகளை இறைச்சிக்காக வெட்டத் தடை

தென்மராட்சி. ஜூன் 7

தென்மராட்சி பிரதேசத்தில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவி வருவது இனங் காணப்பட்டுள்ளதால் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி கால்நடை மருத்துவர் ஜீ.இரகுநாதன் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் மிருசுவில் வடக்குப் பகுதியில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டிருப்பது இனங் காணப்பட்டுள்ளது. எனவே மிருசுவில் வடக்கு, குடமியன், நாவற்காடு, எருவன், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், வரணி மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் இருந்து கால்நடைகளை மேய்ச்சலுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ வெளியில் கொண்டு செல்வதும் உள்ளே கொண்டு வருவதும், முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

குறித்த பகுதிகளில் பால் சேகரித்தல், களஞ்சியப் படுத்தல் மற்றும் கொண்டு செல்லல், கால்நடைகளை அறுத்தல், இறைச்சி விற்பனை, எரு விற்பனை அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை அடுத்து சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் நிர்வாகத்தின் கீழ் வரும் இறைச்சிக் கடைகளுக்காக கொல்களங்களில் மாடு வெட்டுவது மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# யாத்திரிகர்கள் பாதுகாப்புக்கு கடற்படை உயிர்காப்பு குழு

கொழும்பு.ஜூன் 7

அநுராதபுரத்துக்கு பொசன் போயா தினத்தில் வருகை தருகின்ற யாத்திரிகர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கடற்படையின் உயிர்காப்புக் குழுவை எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தயார் நிலையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படை ஊடகப்பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அநுராதபுரத்திலுள்ள நுவர, திஸ்ஸ மற்றும் பசவக்குளம் உள்ளிட்ட எட்டு குளங்களுக்கு அண்மையிலும் இந்த குழு தயார் நிலையில் இருக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ச)

# பல்கலை மாணவர்களுக்கு மட்டுமே பதிலளிப்பேன்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு.ஜூன் 7

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே என்னால் பதிலளிக்க முடியும். மாடுகளுக்கு, பைத்தியகாரர்களுக்கு, நரிகளுக்கு, பன்றிகளுக்கு என்னால் எழுத்து மூலமாக கையெழுத்திட்டு வாக்குறுதிகளை வழங்கப் போவதில்லை என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இணை சுகாதார மாணவர்களின் எழுத்து மூலமான கோரிக்கை தொடர்பில் கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக் கழகத்தில் பயிலும்மாணவர்களுக்கு மட்டுமே நான் பதிலளிப்பேன். நரிகள் கூறுவதற்கெல்லாம் என்னால் பதிலளிக்க முடியாது. உயர்நீதிமன்றம் வரை சென்ற இந்தப் பிரச்சினையில் ஜனாதிபதி தலையிட்டதால் அந்த பிரச்சினையின் 75 வீதம் தீர்க்கப்பட்டு விட்டது.

பட்டப்படிப்பு காலம் தொடர்பான தீர்மானத்துக்கு துணை வேந்தர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள், மருத்துவர் சங்கம் என்பன இணங்கியுள்ளன.

பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ள நிலையில், முன்னிலை சோஷலிசக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் தான் இந்த பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது.

பிரச்சினையை மேலும் இழுபறி நிலைக்கு கொண்டு சென்று தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதே அவர்களின் எதிர்பார்ப்பு - என்றார். (ச)

# மீனவர் விடுதலையை கண்டிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு.ஜூன் 7

இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய மீனவர்களை அரசு விடுதலை செய்துள்ளமை கண்டிக்கத்தக்கது என்று ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி கட்சித் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட உள்ளது.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசு கவலைகளை வெளிக்காட்டவில்லை என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன்நெத்தி குறிப்பிட்டார்.

இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதமில்லாது இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டமைக்கு ஜே.வி.பியின் மத்திய குழு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. (ச)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகர் - ஆனைக்கோட்டை . வட்டாரம் : 03

ஆதன இலக்கம் : 22 (புதிய பதிவு) - சுதுமலை வீதி

வட்டாரம் 03 சுதுமலை வீதி ஆதன இலக்கம் 22 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை "வேடுவன் கண்டிவளவு") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குழி 9.06 கொண்ட இவ்வாதனமானது சுதுமலையைச் சேர்ந்த தேவராஜ் பெண் அஜந்தா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சுதுமலையைச் சேர்ந்த ரஜித்காந் பெண் ராஜினி என்பவருக்குக் குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் க.சபாரத்தினம். முகதாவில் நிறைவேறிய 3125ஆம் இலக்க 2011.10.01ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "வேடுவன் கண்டிவளவு" நிலப்பரப்பு 01 குழி 9.06 உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ரஜித்காந் பெண் ராஜினி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினைப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.



## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன டோமன் நாய்க் குட்டிகள் (Peor breed) விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 482 1956



## வெதுப்பக பொருள்கள் விற்பனைக்கு

வெதுப்பக இலக்ரிசியன் உபகரணங்கள் அனைத்தும் (அவண், மா அரைக்கும் இயந்திரம், மேசை, தட்டு, தளபாடங்கள் உட்பட) அனைத்து பொருள்களும் விற்பனைக்குண்டு.

தொ.பே:071 490 5590



## பெயர் மாற்றம்

'சந்திரன் இல்லம்' பண்டத்தரிப்பைச் சேர்ந்த **செல்வராசா சுபாஜினி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **செல்வராசா சுதர்ணா** எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

செ.சுதர்ணா



## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினி துரைசிங்கம்

(ஓய்வுபெற்ற இரசாயனவியல், தாவரவியல் ஆசிரியர்- வேம்படி மற்றும் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்



யாழ். நாவலர் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி துரைசிங்கம் 04.06.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் கண் டாக்டர் இளையதம்பி மகள் பாக்கியம் தம்பதியினரின் அதி இளைய மகளும், துரைசிங்கம் (இளைப்பாறிய அஞ்சலதிபர், உத்தரவு பெற்ற மொழிபெயர்ப்பாளர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், பிரதீபன்(மின் பொறியியலாளர்), மலர்விழி (வைத்திய கலாநிதி), சிவதீபன்(மின்னணுவியல் தொலைத்தொடர்பு பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயும், லோகா (யாழ். பல்கலை விவசாயபீட விரிவுரையாளர்), தெய்வகுமார் (வைத்திய கலாநிதி), இலிகா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சபாநடேசன், பரமேஸ்வரி மற்றும் திலகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சதானந்தன், பாக்கியநாதன் ஆகியோரின் அருமைச்சகோதரியும், கனிகா, கார்த்திகன், பைரஜா, மிதுலன், கௌதம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப.10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

588/4, நாவலர் வீதி, அரியாலை
(கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், எதிர் நவியார் ஒழுங்கை யாழ்ப்பாணம்)

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 7010, 077 755 0863



## தொண்டமானாறு தனு வெளியீட்டகம் தரம்-5 புலமைப்பரிசில் பொது பயிற்சிப் பரீட்சை-2014 எமது நிறுவனத்தினால் 25.05.2014 இல் நடத்தப்பட்ட இரண்டாவது பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர் விவரம் வருமாறு

| மாணவர் பெயர் | பெற்ற புள்ளி | நிலை | பாடசாலை |
|---|---|---|---|
| வி.விதுசன் | 183 | 1 | தனு வெளியீட்டகம், தொண்டைமானாறு |
| யோ.அகல்யன் | 183 | 1 | சதாபோன்ஸ் க.நி, நெல்லியடி |
| ம.விஷ்ணுகன் | 181 | 3 | நிபு, எக்சலன்ட் க.நி, நெல்லியடி |
| ஜெ.தவேதன் | 180 | 4 | ஹிற்ஸ்மன் க.நி, மானிப்பாய் |
| பா.லக்சன் | 179 | 5 | நிபு, எக்சலன்ட் க.நி, நெல்லியடி |
| ஜெ.சஜிந்தன் | 179 | 5 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை |
| ம.சகானா | 175 | 7 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| சு.சுபாஜினி | 172 | 8 | தனுவெளியீட்டகம், தொண்டைமானாறு |
| ப.லினோஸ்ராம் | 172 | 8 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| த.தரங்கினி | 174 | 10 | உதயதாரகை க.நி, கொற்றாவத்தை |
| க.லக்சன் | 171 | 10 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| இ.பிரவினா | 169 | 12 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை |
| சு.நரேந்திரன் | 168 | 13 | நிபு, ஒக்ஸ்போர்ட் க.நி, திருநெல்வேலி |
| கோ.கம்சனா | 168 | 13 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| அ.ரிசிதரன் | 167 | 15 | ஸ்ரான்போர்ட் கல்லூரி, உடுப்பிட்டி |
| இ.விஷ்ணுகா | 167 | 15 | உதயதாரகை க.நி, கொற்றாவத்தை |
| சி.துளசிகன் | 167 | 15 | N.S.H.மாதிரிப்பிட்டி |
| யோ.பூமிகா | 166 | 18 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| அ.திவேதிகன் | 166 | 18 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| ஆ.அம்சிகா | 164 | 20 | நிபு, எக்சலன்ட் க.நி, நெல்லியடி |
| தி.சுபாங்கி | 164 | 20 | கம்பன் க.நி, சங்கத்தானை |
| த.தர்சயன் | 163 | 22 | தனுவெளியீட்டகம், தொண்டைமானாறு |
| ர.பிரணவர்த்தன் | 162 | 23 | நிபு, எக்சலன்ட் க.நி, நெல்லியடி |
| ப.சர்மினி | 162 | 23 | கதிர்கல்வி நிலையம், புத்தூர் |
| த.திவாகரன் | 162 | 23 | கலைவாணி க.நி, கோப்பாய் |
| அ.உமாகேசன் | 161 | 26 | தனுவெளியீட்டகம், தொண்டைமானாறு |
| சு.மாதங்கி | 161 | 26 | உமாதவா க.நி, மீசாலை |
| க.கிரானி | 160 | 28 | நிபு, எக்சலன்ட் க.நி, நெல்லியடி |
| ம.விசாகன் | 160 | 28 | A.T.C.இணுவில் |
| சு.விஷுஜா | 158 | 30 | ஸ்ரான்போர்ட் கல்லூரி, உடுப்பிட்டி |
| கே.சஞ்ஜை | 158 | 30 | கலைவாணி க.நி, கோப்பாய் |

இம் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொ.பே.இல. 021 205 5656 -தனு வெளியீட்டகத்தினர்-

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## மயில்வாகனம் பாலசிங்கம்
(வெற்றிலைக்கடை பாலு)

தோற்றம்
29
★
10
★
1929

மறைவு
14
★
05
★
1989

திதி:07.06.2014

ஆண்டுகள் இருபத்தைந்தாகி விட்டதாம்
மறையவில்லை நீங்கள்
எம் மனங்களிலே!
காலை உதிக்கும் சூரியனைப் போல
எம் மனதிலே
பிரகாசமாய் தோன்றுகிறீர்கள்
உங்கள் பிரிவின் பின்
திக்குத்திக்காய் பிரிந்து விட்டோம்

உங்கள் பயிர்கள் நீங்கள் ஊட்டிய பாசத்திலும்
கற்று கொடுத்த கல்வியிலும்
வாழக் கற்று கொடுத்த வாழ்க்கையிலும்
உங்கள் புகழைப் பரப்பி– நன்றாக
விருட்சமாக வளர்ந்து நிற்கின்றோம்–நாம்
உங்கள் பேரப்பிள்ளைகளின் முகத்திலே
உங்கள் சிரிப்பைக் கண்டு
மறைக்க முடியாத வலியை
மனதிலே மறைத்துக் கொண்டு
என்றும் உங்கள் அழியாத நினைவுகளை
சுமந்து கொண்டு வாழும்
உங்கள்...
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மஞ்சுளா பவனம்"
4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.
021 226 4930 (46222)(3.6.4)

## பண்பாட்டுப் பெருவிழா

அச்சுவேலி, ஜூன் 7
அச்சுவேலி பிரதேச பண்பாட்டு மன்றத்தால் நடத்தப்படும் பண்பாட்டு பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
அச்சுவேலி பிரதேசத்தில் உள்ள ஏழு கிராம அலுவலர் பிரிவுகளின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் தொன்மைகளை வெளிப்படுத்தும் வகையில் அச்சுவேலி பிரதேச பண்பாட்டுமன்றம் நடத்தும் இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவில் 'அச்சூர் அமுதம்' பண்பாட்டுமலர் மற்றும் பிரதேசத்தின் பண்பாட்டு பௌதிக இயல்புகளை உள்ளடக்கிய 'ஒரு ஊரும் சில வேரும்' இறுவட்டு வெளியீடு பாரம்பரிய கலை வடிவங்களின் காவலர்கள் என்ற வகையில் கலைஞர் கௌரவிப்பு பண்பாட்டு அம்சங்களை உள்ளடக்கிய அலங்கார ஊர்திகள் பவனி உள்ளிட்ட அம்சங்களை கொண்டதாக விழா நடைபெறவுள்ளது. (க-11)

## குருபூசை

சுழிபுரம், ஜூன் 7
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மு.ப 10 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (க-28)

## மரண அறிவித்தல்

### சவிரிமுத்து டோமினிக் (அருள்)
(கட்டட ஒப்பந்தக்காரர், சமாதான நீதிவான்JP)



குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து டோமினிக் நேற்று முன்தினம் (03.06.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து றோசலின் தம்பதியினரின் அன்பு மகனும், லூசியம்மாவின் பாசமிகு கணவரும், ஜெசிலி, சுகிர்தசீலி, ஜீவா (சுவிஸ்), லில்லிராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.06.2014) சனிக்கிழமை பி.ப.3.30 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, மத்திய மேற்கு
குருநகர், யாழ்ப்பாணம். (40734)(4.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.05.2014
வியாழக்கிழமை
இறைவனடி சேர்ந்த
எமது அன்புத் தெய்வம்
அமரர் **இரத்தினம் பொன்னுத்துரை**
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.06.2014) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.

442/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பொன்னுத்துரை,
குடும்பத்தினர்.

(18761)(12.3.6)

# நீங்காத நினைவில்

## ஓராண்டு நினைவஞ்சலி



### சின்னத்தம்பி பரமநாதன்

அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
உயர்விற்கு உறுதுணையாக நின்ற தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றதப்பா,
ஆறவில்லை எம் துயரம்
எங்களுடன் நீங்கள் வாழ்ந்த
ஒவ்வொரு கணமும்
எம் நெஞ்சைவிட்டு என்றும் அழியாது.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



### பரமநாதன் மகேந்திரன்

ஆண்டுகள் ஆறு ஆனதுவோ
ஆறவில்லை எம் மீளாத்துயரம்
அழகிய உந்தன் சிரித்த முகம்
காணத் துடிக்கின்றோம் கண்ணீருடன்
கலைந்து போனது எங்கள் கனவுகள் மட்டுமே
நிலைத்திருக்கும் உந்தன் நிஜமான
நினைவுகள் என்றென்றும் எங்கள் உள்ளத்தில்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

121, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
(C13979)(12.3.6)

குடும்பத்தினர்.

# உலக சூழல் தினத்தை முன்னிட்டு சைக்கிள் விழிப்புணர்வு பேரணி

வலி.வடக்கு, ஜூன் 7

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 6.45 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் அருகில் இருந்து சைக்கிள் விழிப்புணர்வு பேரணி ஆரம்பமாகி யாழ்ப்பாணம்துரையப்பாவிளையாட்டரங்கை சென்றடைந்தது. யாழ்.மாவட்ட படையினரும் பொலிஸாரும் மற்றும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களும் இணைந்து இந்த சைக்கிள் விழிப்புணர்வு பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர். காலையில் ஆரம்பமான சைக்கிள் பேரணி காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கைச் சென்றடைந்தது. (வ-86)



# துணுக்காய் பிரதேச அபிவிருத்தி குறித்து முதலமைச்சருக்கு மனு

பலதரப்பட்ட வளப்பற்றாக் குறையுடன் நீண்ட காலமாகப் பின்தங்கிய நிலையில் இருந்து வரும் துணுக்காய் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு கைகொடுத்து உதவுமாறு வடமாகாண முதலமைச்சரைக் கோரியுள்ள துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் வி.இராசரத்தினம் பிரதேசத்தின் அவசர தேவைகளைப் பட்டியலிட்டும் முதலமைச்சருக்கு மனுவொன்றை அனுப்பி வைத்துள்ளார். மக்கள் போக்குவரத்து செய்ய முடியாமலிருக்கும் 65 கிலோ மீற்றர் நீளமான 33 கிரவல் வீதிகளை அபிவிருத்தி செய்ய நிதி உதவி வழங்குமாறு முதலமைச்சருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள நீண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமலிருக்கும் சந்தைகள், ஆயுள்வேத மருத்துவமனைகள், பொது மலசலகூடங்கள், பொது நூலகங்கள், கலாசார மண்டபங்கள், சிறுவர் பூங்கா, மயானம், மணிக்கூட்டுக் கோபுரம், கடைத்தொகுதி உட்பட 16 விதமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு 81 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக அந்தப் பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு டிராக்டர், வீதிகளைப் பராமரிப்பதற்கு உருளை, அலுவலகத் தேவைகளுக்கான தளபாடங்கள் என்பவற்றின்தேவைகுறித்தும்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-115)

# சங்காபிஷேக தினத்தன்று பரிசுகள்

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மஹோற் சவத்தை யொட்டி கந்தரநுபூதி ஐம்பத் தொரு பாடல்களையும் மன னம் செய்பவர்களுக்கு பரிசுகள் வழங்க ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் சங்காபிஷேக தினத்தன்று நண்பகல் பரிசுகள் வழங்கப் படவுள்ளன. இந்த ஆலயத் தின் தேர்த் திருவிழா 12 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். (வ-28)

# சட்டவிரோதமாக மரம் ஏற்றியவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன்7

சட்டவிரோத மரம் ஏற்றிச் செல்ல முற்பட்டவரை யாழ். குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். யாழ்.பொலிஸ் நிலையத் தின் 7 பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் அரியாலைப் பகுதியில் வைத்து சந்தேகநபரை நேற்று கைது செய்தனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த நபர் டிப்பர் வாகனத்தில் 3 இலட்சம் பெறுமதியான மரத்தை ஏற்றிச் செல்ல முற் பட்டபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-106)


## கிராமிய மட்டத்திலான ஒருங்கிணைந்த மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம்

கீழ் குறிப்பிடப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் நல்லூர் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் மேற்படி திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் மக்கள் பங்கேற்று தங்களது எதிர்கால அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகளை வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| கிராம சேவையாளர் பிரிவும் இலக்கமும் | இடம் | காலம் |
|---|---|---|
| J/121 கொக்குவில் வடகிழக்கு | வளர்மதி சனசமூக நிலையம் | 07.06.2014 சனி காலை 9.00 |
| [illegible] கொக்குவில் தென் மேற்கு | காந்திஜி சனசமூக நிலையம் | 08.06.2014 ஞாயிறு காலை 9.00 |
| J/120 கோண்டாவில் தென் கிழக்கு | வளர்பிறை சனசமூக நிலையம் | 08.06.2014 ஞாயிறு பி.ப 3.00 |
| J/122 கொக்குவில் கிழக்கு | நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகம் | 07.06.2014 சனி காலை 9.00 |
| J/126 கொக்குவில் மத்தி கிழக்கு | பொற்பதி சனசமூக நிலையமும் அறிவாலயமும் | 07.06.2014 சனி பி.ப 3.00 |
| J/124 கொக்குவில் வட மேற்கு | கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் | 08.06.2014 ஞாயிறு காலை 9.00 |
| J/128 கொக்குவில் மத்தி மேற்கு | கொக்குவில் மஞ்சவனப்பதி கல்யாண மண்டபம் | 07.06.2014 சனி பி.ப 3.00 |
| J/118 கோண்டாவில் மத்தி கிழக்கு | வாகீஸ்வரி கல்யாண மண்டபம் | 07.06.2014 சனி மு.ப 11.30 |
| J/119 கோண்டாவில் வட கிழக்கு | நாராயணா சனசமூக நிலையம் | 07.06.2014 சனி காலை 9.00 |
| J/115 கோண்டாவில் வட மேற்கு | மஞ்சத்தடி சனசமூக நிலையம் | 07.06.2014 சனி பி.ப 3.00 |
| J/116 கோண்டாவில் தென்மேற்கு | வேதநாராயணா சனசமூக நிலையம் | 07.06.2014 சனி காலை 9.00 |
| J/117 கோண்டாவில் மத்தி மேற்கு | குமரகோட்டம் சனசமூக நிலையம் | 08.06.2014 ஞாயிறு காலை 9.00 |
| J/110 திருநெல்வேலி மேற்கு | பரமேஸ்வராக் கல்லூரி முன் மைதானம் | 07.06.2014 சனி காலை 9.00 |
| J/114 திருநெல்வேலி மத்தி வடக்கு | கம்பன் சனசமூக நிலையம் | 07.06.2014 சனி மாலை 4.00 |
| J/111 திருநெல்வேலி மத்தி மேற்கு | முடமாவடி ஞானவைரவர் கோவில் | 07.06.2014 சனி பி.ப 3.00 |
| J/112 திருநெல்வேலி தென்கிழக்கு | செங்குந்தா இந்துக்கல்லூரி | 08.06.2014 ஞாயிறு மாலை 4.30 |
| J/113 திருநெல்வேலி வடகிழக்கு | செங்குந்தா இந்துக்கல்லூரி | 08.06.2014 ஞாயிறு பி.ப 2.30 |
| J/89 அரியாலை தென் கிழக்கு | மணியந்தோட்டம் கிராம அலுவலர் அலுவலகம் | 07.06.2014 சனி காலை 9.00 |
| J/99 வண்ணார்பண்ணை வட மேற்கு | யாழ். கல்வி நிலையம் | 08.06.2014 ஞாயிறு மாலை 4.00 |
| J/123 கொக்குவில் தென் கிழக்கு | தலையாழி வைரவர் கோயில் மண்டபம் | 07.06.2014 சனி பி.ப 3.00 |
| J/125 கொக்குவில் மேற்கு | கொக்குவில் ஞானசி அம்மன் கோயில் | 08.06.2014 ஞாயிறு மாலை 4.00 |
| J/90 அரியாலை கிழக்கு | பூம்புகார் அ.த.க பாடசாலை | 07.06.2014 சனி காலை 9.00 |
| J/94 அரியாலை மத்தி வடக்கு | ஜெயபாரதி சனசமூக நிலையம் | 07.06.2014 சனி மு.ப 11.00 |
| J/96 அரியாலை மத்தி தெற்கு | யாழிசை சனசமூக நிலையம் -முள்ளி | 07.06.2014 சனி காலை 8.30 |

திரு.ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(C 14707)(10.6.3)






**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222





## வேலணை மேற்கு 6ஆம் வட்டாரம்

## ஆலடி ஸ்ரீ அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான

## ஆவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்

காலம் 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 06.25 மணி முதல் 08.26 மணி வரை

ஜய வருஷம் வைகாசி மாதம் 25ஆம் திகதி (08.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு விநாயக வழிபாடு, புண்ணியாகவாசனம், யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, கும்பம் வீதி வலம் வருதல், ஸ்தூபி அபிஷேகம், காலை 6.25 மணிமுதல் 8.26 வரையான சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் தொடர்ந்து தசதர்சனம், எஜமான் அபிஷேகம், ஆசியுரைகள் நடைபெற்றபின் மஹாபிஷேகம் நடைபெறும்.

**அடியார்களுக்கு மதியம் அன்னதானம் வழங்கப்படும்.**

குறிப்பு: தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். உபயம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**அறங்காவலர்கள்**

(48784)(12.3.8)

## தவறிவிட்டது

சி.யோகேஸ்வரி (577313296V) ஆ. சிவறஞ்சினி (856612643V) ஆகியவர்களின் அடையாள அட்டைகளும் மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும், IPhone, டயறி சிறு தொகை பணம் உள்ளடங்கிய கைபை (பேஸ்) இராசாவின் தோட்டம் வீதிக்கும் ஆரியகுளத்தடி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Tel: 021 222 7902,
077 376 8952.

தொடர்பு:
மைதிலி நகை மாடம்
இல. 89V. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(48802) (10)

# கடை உடைத்து பொருள்கள் திருட்டு

வடமராட்சி, ஜூன் 7

பொலிகண்டி மேற்கு. ஊறணி எல்லையில் உள்ள பல சரக்கு கடை ஒன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் பல களவாடப் பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை இரவு கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற உரிமை யாளர் மறுநாள் காலை கடையைத் திறந்தபோது கடையின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

அதையடுத்து கடை உரிமையாளரால் இது குறித்து வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான பொருள்களும் களவாடப்பட்டுள்ளன என்று கூறப் படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-173)

## வீடு வாடகைக்கு

கடையில் சுவாமி வீதி, நீராவியடியில் ஓரளவு வசதியுடைய 03 அறைகள், ஹோல், இணைந்த குளியலறை கொண்ட வீடு வாடகைக் குண்டு. (சைவர்கள் விரும்பத்தக்கது)


தொடர்பு: 077 424 8870

(48795) (10)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் தர்மராஜா
(பெற்றா அண்ணை)

சரவணையைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தர்மராஜா 04.06.2014 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், வாழைத் தோட்டம் நவாலி வடக்கைச் சேர்ந்த கந்தையா-இராசமுத்து தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவ றூபன் (றூபன்-ஸ்ரீராம் ஒயில் மாட்), மதுசூதனன் (மதன்- பிரான்ஸ்), மதுரா (தொழில் நுட்ப உத்தியோகத்தர் யாழ் மாநகரசபை), விஸ்ணுவர்த்தன் (Ram Builders) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா, கேதீஸ்வரன் (Commercial Credit Jaffna Branch) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிருந்தாபன், அஷ்விதா, கௌசிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: சிவறூபன் (றூபன்-மகன்)
(ஸ்ரீராம் ஒயில் மாட்)
077675 8760

நவாலி வடக்கு.

(48763) (10.6)

# இணுவில் இந்துவின் முத்தமிழ் விழா

இணுவில், ஜூன் 7

இணுவில் இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அரங்கில் செல்வி ம. மதுஷாலினி தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி. தர்மலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா வழங்குவார். பாடசாலை ஆசிரியர்களின் இசை நிகழ்வு, கவியரங்கம் ஆகியனவற்றுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகள் நாடகம் ஆகியனவும் இடம் பெறவுள்ளன. (ஓ)

# கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ இ.ரமணிதரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு தூபி மற்றும் கோபுரக் கலசங்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுவதுடன் தொடர்ந்துவரும் காலை 8.25 வரை யான சுப வேளை யில் விநாயகர் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபி ஷேகம் நடைபெறவுள்ளது. (இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24.08.1932

மறைவு
08.05.2014



கடந்த 08.05.2014 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### சின்னத்தம்பி துரைராசா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.06.2014) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம், நல்லூர்.

குடும்பத்தினர்.

(48797)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. குணாம் சிறிராம்

என்பவர் அலயன்ஸ் காப்புறுதி நிறுவனத்தில் எனக்கு காப்புறுதி நிறுவனம் சம்பந்தமான ஆலோசனைகளையும் நிதி சம்பந்தமான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். இவர் எனக்கு செய்த சேவையின் காரணமாகத் தற்போது ஏசியன் அலையன்ஸ் (ASIAN ALLIANCE) காப்புறுதி நிறுவனத்துக்கு பிராந்திய முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரின் சேவைகள் இன்னும் தொடரவும், இவர் இன்னும் வளரவும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Mr. S. Manirajah
Managing Director
Java
Civil Engineering Construction

(48791)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. குணாம் சிறிராம்

என்பவர் கடந்த நான்கு வருடங்களாக எனக்கு அலயன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் சார்பாக நல்லதோர் சேவையை மேற்கொண்டுள்ளார். தற்பொழுது இவரின் திறமையின் காரணத்தாலும் இவரின் நற்குணத்தின் காரணத்தாலும் ஏசியன் அலையன்ஸ் (ASIAN ALLIANCE) காப்புறுதி நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவரின் சேவைகள் மேன்மேலும் தொடர எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

ந. யோசப்
CLINTON FUNERAL SERVICE
கிளின்ரன் அந்தியகால சேவை

(48792)(10)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் செ.கலாநிதி அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி செல்லையா பாக்கியம்**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயரும் நெஞ்சங்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K.K.S. ரோட்,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர் கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(48786) (10)

## மரண அறிவித்தல்



### மருதப்பு நிர்மலாதேவி

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு நிர்மலாதேவி நேற்று (06.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.விஜிந்தன் (குகா)
சிறீதேவி கருமாரி நகை மாடம்
யாழ்ப்பாணம்.

(48703) (10)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை சிசிலியா



யாழ். ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை சிசிலியா 05.06.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அவுறாம்பிள்ளை-சவிராசி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரவியம், பர்னாந்து, அன்னம்மா, செபமாலை, கிறித்தின் மற்றும் திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சேவியர், பாலன், ஏசுதாசன், ராசு, றாணி, சூரி(சுவிஸ்), குமார்(சுவிஸ்), வேவி, அன்ரன் (லண்டன்), ரவி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றோஸ்மலர், சாந்தி, லதா, பிறேமா, காலஞ்சென்ற ராசு மற்றும் மரிஸ்ரெலா(சுவிஸ்), சாந்தா(சுவிஸ்), பொன்னம்பலம், செல்வி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 491 1234,
077 307 5146

(48785)(4.6.3)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஐ.நா.

முன்னாள் ராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"குறித்த சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவர் பதவியை சர்வதேசத்தில் நன்மதிப்பை பெற்ற ஒருவருக்கு வழங்க நவநீதம்பிள்ளை முயற்சித்து வருகிறார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானை அதற்காக தெரிவு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. கோபி அனான் அதனை நிராகரித்துள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

இராஜதந்திர ரீதியில் முன்னாள் செயலாளர் நாயகத்துக்கு இருக்கும் வரவேற்பு காரணமாக அவர் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது. இது அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் தந்திரம் என இராஜதந்திரிகள் கோடிட்டுக்காட்டியுள்ளனர்.

கோபி அனான் போன்ற நோபல் பரிசு பெற்ற ஒருவரை விசாரணைக்குழுவின் தலைவராக நியமித்தால், அவருக்கு நுழைவிசைவு வழங்குவதை இலங்கை அரசு நிராகரிக்க முடியாது. அத்துடன் அவர் இலங்கையில் பயணிக்கும் இடங்கள் மற்றும் சந்திக்கும் நபர்கள் தொடர்பில் வரையறைகளை விதிக்க முடியாது.

கோபி அனானுக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், இலங்கைக்கு சார்பான நாடுகளும் இலங்கையை விமர்சிக்கக் கூடும். 13 பேரைக்கொண்ட சர்வதேச விசாரணைக் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் சர்வதேச புகழ் பெற்ற தொழில்நுட்ப நிபுணர்கள். இந்த விசாரணைக்குழுவை நியமிப்பதன் மூலமாக நவநீதம்பிள்ளை இலங்கைக்கும் இலங்கை இராணுவத்துக்கும் பாரிய அழுத்தங்களைக் கொடுக்க முயற்சித்து வருகிறார்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் தயாரித்துள்ள மனித உரிமை தொடர்பான இறுதிய றிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமை சபையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் போது இலங்கைக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான தடைகள் விதிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன."- என்று தெரிவித்துள்ளார். (ற)

### புலிகளே

களப்பில் நேற்று ஆரம்பமாகியது. காத்தான்குடிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வில் சாட்சியம ளிக்க 59 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 48 பேரே சாட்சியமளிக்க வருகை தந்தது டன், புதிதாக 15 பேர் மாத்திரமே பதிவுகளை மேற் கொண்டனர்.

கடத்தியவர்கள்
பயங்கர வாதிகள்

சாட்சியமளித்த 49 முஸ்லிம் மக்களும் தமது உறவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளாலேயே கடத்திச் செல்லப்பட்டனர் என்று தெரிவித்தனர். 'எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளால்' கடத்தப்பட்டதாகவே தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் கடத்தியதை தாங்கள் நேரில் பார்க்க வில்லை என்றும், ஊர் மக்கள் சொல்வதைக் கேட்டும் அன்றைய காலப் பகுதியில் அவர்களே இவ்வாறான கடத்தல்களைச் செய்ததால், தமது உறவுகளையும் அவர்களே கடத்தியிருப்பார்கள் என்று கருதுவதாகவும் சாட்சியத்தில் குறிப்பிட்டனர்.

சாட்சியமளித்த 49 பேரில் 31 பேர் குருக்கள்மடம் படுகொலை தொடர்பிலேயே சாட்சியமளித்துள்ளனர். அது தொடர்பில் சாட்சியமளித்த 31 பேரினது சாட்சியங்களும் ஒரே மாதிரியானதாகவே காணப்பட்டன. காத்தான்குடியிலிருந்து தொழில் நிமித்தம் வான்களிலும், லொறிகளிலும் கல்முனைக்குச் சென்று விட்டு அங்கிருந்து திரும்பி வரும்போது குருக்கள் மடத்தடியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கடத்தினர் என்று அவர்கள் கூறினர்.

புலிகள் கடத்தினர்

இந்தச் சம்பவம் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்றதாக அவர்கள் சாட்சியங்களில் குறிப்பிட்டனர். தொடர்ச்சியாக வந்த வாகனங்களில் ஒரு வாகனத்தைச் செல்ல அனுமதித்து மறுவாகனத்திலுள்ளவர்களை வாகனங்களுடன் கடத்தினர் என்றும், இவ்வாறு தொடர்ச்சியாக ஒன்றைவிட்ட ஒரு வாகனங்களையும் தமது உறவுகளையும் கடத்தினர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதன்போது, ஆணைக்குழுவினர், "அதன் பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது?" என்று கேட்க, இவ்வாறு கடத்தியதாகச் சொல்லப்பட்டதைத் தொடர்ந்து தமது இஸ்லாமிய சம்மேளனம் ஊடாக நடந்தது என்ன என்பதை அறிய கிறிஸ்தவ பாதிரியாரை அனுப்பியதாகத் தெரிவித்தனர். அவர், கடத்தியவர்கள் எல்லோரையும் சுட்டுக் கொன்று கடற் கரைக்கு அருகில் புதைக்கப்பட்டனர் என்று தெரிவித்ததுடன், எம்மை மதக் கடமை களைச் செய்யுமாறு தெரிவித்தார் - என்று பதிலளித்தனர்.

அதன் பின்னர் ஆணைக்குழுவினர், உங்கள் உறவினர்கள் உயிருடன் இருப்பார்கள் என்று நம்புகின்றீர்களா? என்று கேள்வியெழுப்பிய போது, அதற்கு "அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டார்கள் என்று சொல்கின்றார்கள்" என்று மாத்திரம் சாட்சிகள் பதிலளித்தனர்.

புலிகள் கொலை செய்தனர்

மேலும் எஞ்சிய 11 சாட்சிகளும் 1985 ஆம் ஆண்டுக்கும் 1992 ஆம் ஆண்டுக்கும் இடையில் தொழில் நிமித்தம் சென்ற போது உறவினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டனர் என்று தெரிவித்தனர். அவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்களை விடுதலைப் புலிகள் சுட்டுக்கொன்று விட்டனர் என்று தாங்கள் அறிந்ததாகவும் அவர்கள் சாட்சியத்தில் குறிப்பிட்டனர்.

இதேவேளை குருக்கள்மடத்தில் காணாமற்போனதாக கூறப்படுபவர்களுக்கு 1992 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மரண[illegible]திதழில் துப்பாக்கிச் சு[illegible]யே மரணமாகினர் [illegible]று. மரணத்துக்கான காரண[illegible]த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் காணாமற்போனவர்களது சடலம் எதுவும் மீட்கப்படாமலேயே இவ்வாறு மரணத்துக்கான காரணம்குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

### வடக்கு

குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், புதிதாக 12 பிக்[illegible]ப்கள் கொள்வனவு செய்வதற்காக 84 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

வடக்கு மாகாணசபை தற்போது முதன்முதலாக இயங்கத் தொடங்கியுள்ளது. அதனால் அமைச்சுக்களுக்கான வாகனங்களோ அல்லது அமைச்சர்களுக்கான வாகனங்களோ புதிதாக எவையும் ஒதுக்கப்படவில்லை. ஏற்கனவே வடக்கு மாகாணசபையின் பயன்பாட்டின் கீழ் இருந்த வாகனங்களே அமைச்சர்களுக்கும், அமைச்சுக்களும் வழங்கப்பட்டிருந்தன. அவற்றையே இதுவரை காலமும் பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு 10 மில்லியன் ரூபா செலவில் அதி நவீன பிக்கப்பும், ஏனைய அமைச்சர்கள் 4 பேர் மற்றும் வடக்கு அவைத் தலைவர் ஆகியோருக்கு 7 மில்லியன் ரூபா செலவில் புதிய சொகுசு பிக்கப்புக்களும் கொள்வனவு செய்வதற்கு கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய புதிய வாகனங்களை முதலமைச்சர், அமைச்சர் மற்றும் அவைத் தலைவர் ஆகியோர் தாமே தேர்ந்தெடுத்து, ஜப்பானிலிருந்து அந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஓடர்களை கொடுத்துள்ளனர். அந்த வாகனங்கள் இன்னும் இரண்டு மாதத் தினுள் அவர்களுக்கு வந்து சேரும்.

அமைச்சர்களுக்கு புதிய வாகனங்கள் வரவுள்ள நிலையில் அமைச்சு அலுவலகங்களுக்கும் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலமைச்சரின் அமைச்சு அலுவலகம், விவசாய அமைச்சு அலுவலகம், கல்வி அமைச்சு அலுவலகம், போக்குவரத்து அமைச்சு அலுவலகம், சுகாதார அமைச்சு அலுவலகம், பேரவைச் செயலகம் என்பவற்றிற்கு ஒவ்வொரு அலுவலகத்துக்கும் 2 பிக்கப்கள் வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பிக்கப்புக்களும் 7 மில்லியன் ரூபா பெறுமதி என்பதுடன் கொள்வனவு செய்யப்படும் 12 பிக்கப்புகளுக்கும் 84 மில்லியன் ரூபா வடக்கு மாகாண சபையால் செலவிடப்படவுள்ளது. இந்த வாகனங்கள் லீசிங் முறையிலேயே பெறப்படவுள்ளன.

அதேவேளை, வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு போதாதுள்ளது என்று வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்னர் கவலை வெளியிட்டிருந்தார். (ற-5)

### கடத்திய

உறவுகளுக்கு நீதி வேண்டும் இவ்வாறுஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த ஒருவர் கோரிக்கை விடுத்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் மட்டக்களப்பில் இடம்பெற்று வருகின்றது. நேற்றைய அமர்வில் சாட்சியமளித்த 31 பேர் குருக்கள்மடம் படுகொலை தொடர்பிலேயே தமது சாட்சிகளைப் பதிவு செய்தனர்.

இதன் போது காத்தான்குடியைச்சேர்ந்தமுஹமதுகனீபா என்பவர் சாட்சியமளிக்கையில்;

கல்முனையிலிருந்து ஊருக்குத் (காத்தான்குடி) திரும்பிக் கொண்டிருந்த எனது சகோதரர்கள் இருவர் குருக் கள் மடம் பகுதியில் வைத்து எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளாலேயே கடத்தப்பட்டனர்.

கஞ்சிக்குடிச்சாறிலிருந்து வந்திருந்த எல்.ரீ.ரீ.ஈயினரே அவர்களைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றனர். அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் குருக்கள் மடம் கடற்கரையி லேயே புதைத்தனர். அவர்க ளது உடல்களை தோண்டி எடுத்து எமது மதக் கடமைகளை நிறைவேற்றத் தர வேண்டும்.

எமது உறவினர்களைக் கொலை செய்த விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இருவரும் இன்று சுதந்திரமாக உலாவித் திரிகின்றனர். கொலை செய்யப்பட்ட எமது உறவுகளின் படு கொலைக்கு நீதி வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தார். (ற-5)

### போக்குவரத்து

வற்றை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:-

"போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில், மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகிறது. 13ஆவது திருத்தம் அவ சர அவசரமாக கொண்டு வரப்பட்டது. 13ஆவது திருத்தம் குறித்து அப்போது முழுமையாக ஆராயப்படவும் இல்லை. வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. எனினும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும்தான் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்குவதில்லை என்று அரசு திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளது. பொலிஸ் அதிகாரத்தில் நிர்வாக முகாமைத்துவத்துக்குத் தேவையான குறிப்பாகப் போக்குவரத்து பொலிஸ்துறை உள்ளிட்டவற்றை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

அரசியலமைப்பு என்பது கல்வெட்டல்ல. இந்தியா 157 தடவைகள் தனது அரசியலமைப்பில் திருத்தம் செய்துள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பும் 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. நாட்டின்நிலைமையை கருத்திற்கொண்டும், மக்களின் தேவைக்கேற்ப அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு வரையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை இருக்கவில்லை. போருக்குப் பின்னர், வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரங்களை ஓரளவு கொடுக்க முடியுமா என்பது பற்றி ஆராயப்படுகிறது.

ஆயினும் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பிரதி காவல் துறைமா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் சிலவற்றை வழங்குவது தொடர்பாக அரசு சிந்தித்து வருகிறது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### மோடி

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண் டும் என வலியுறுத்தியுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் ஜீஎல்.பீரிஸ், அதிலுள்ள பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனக் கூறி யுள்ளமையானது அடுத்த வருட ஜெனீவாக் கூட்டத் தொடரில் இந்தியாவின் ஆதரவு கிடைக்கப்பெறாமல் போகும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது" எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போதுள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்திய பா.ஜ.க. அரசு நன்கு அறிந்திருக்க வாய்ப்புகள் உள்ளது. ஆனால், இலங்கையிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அது அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் முக்கிய பிரச்சினைகளில் அதன் தலையீடு நிச்சயமாக இருந்துகொண்டே இருக்கும். மோடி அரசு காங்கிரஸ் அரசைப்போல பலவீனமானதல்ல. அப்படி இருந்தாலும் காங்கிரஸ் அரசும் இங்குள்ள பிரச்சினைகள் குறித்து அழுத் தம் கொடுத்தே வந்தது. மோடி பலம் மிக்க ஒருவர் என்றே அவரை இந்தியர்கள் பிரதமராகத் தெரிவுசெய்துள்ளனர். ஆகவே, காங்கிரஸ் அரசிடம் வாக்குறுதிகளைக் கொடுத்து விட்டு ஏமாற்றியதைப் போல மோடி அரசிடமும் செய்துவிட லாம் என இலங்கை அரசு நினைத்தேனும் பார்க்கக் கூடாது.

பொலிஸ் அதிகாரங்களை வழங்கமுடியாது என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருப்பதற்கு இந்திய அரசு உடனடியாகப் பதில் எதனையும் வழங்காது. ஆனால், இதன் பின்விளைவாக அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜெனீவாக் கூட்டத் தொடரில் இந் தியா இலங்கைக்கு ஆதரவு வழங்காமல் போகும் வாய்ப்புள்ளது. இலங்கை அரசு, பா.ஜ.கவை எளிதாக எடை போடாது சற்று அவதான மாகவே செயற்பட வேண்டும் - என்றார். (உ-சி)

### காலாவதியான

"யாழ்.மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனை மற்றும் நிறைகுறைந்த பொருள் விற்பனை, காலாவதியான மருந்து மற்றும் தின் பண்டங்கள் விற்பனை என்பன அதிகரித்துச் செல்கின்றன. இது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதையும் மீறி வர்த்தகர்கள் இவ்வாறான முறைகேடான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

யாழ். மாவட்டத்தின் பெரும்பாலான வைத்தியசாலைகளுக்கு முன்பாகவுள்ள கடைகளிலேயே இவ்வாறான காலாவதியான பொருள்கள் விற்பனை இடம்பெற்று வருகின்றது. கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 119 வர்த்தகர்களிடம் 5 லட்சம் ரூபா வரையில் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைகேடான வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது"- என்று தெரிவித்தார். (ற-5)

### ஜெனிவாக்

விளக்கமளிக்கவுள்ளார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ள நவநீதம் பிள்ளை, சமர்ப்பிக்கும் கடைசி அறிக்கையாக இது இருக்கும்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கையில்:-

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கான ஐ.நா. குழு பற்றிய அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அறிவிப்பை அடுத்து, இலங்கை நிலை குறித்து பேரவையில் விவாதங்கள் எழலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, எதிர்வரும் 11ஆம் திகதி காலை முதல் மதியம் வரை நடைபெறவுள்ள, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு என்ற தலைப்பிலான குழு விவாதத்திலும் நவநீதம்பிள்ளை ஆரம்பித்து வைப்பாளராகப் பங்கேற்பார். அந்த விவாதத்திலும் இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்படும் என்றும் கூறப்படுகின்றது. (ர)

### போதையில்

ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.யாழ்.பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த வழக் குகளில்; குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. சிலருக்கு அவர்களது சாரதி அனுமதிப்பத்திரம் ஒருமாத காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

அதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி வேப்ப மரக்குற்றிகளைக் கொண்டு சென்ற ஒருவருக்குநீதிமன்று20ஆயிரம்ரூபா அபராதம் விதித்தது. (ற-4)

### 'ஜெ' யின்

தூரமானதாகும். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு விரைவில் மறுப்பு வெளியிடும் என்று தெரிவித்துள்ளார் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் அமைச்சில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"தமது அரசியல் வெற்றிக்காக ஜெயலலிதா நீண்ட காலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்.

அண்மையில் அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை நடந்தது என்றும், தமிழ் ஈழம் ஒன்றை அமைக்க ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா பிரேரணை முன்வைக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். இது இலங்கையின் இறைமையை மீறும் செயலாகும். மாநில அரசுகளின் ஆதரவு தேவைப்படாத தனிப்பலம் கொண்ட அரசு ஒன்றை நரேந்திர மோடி அமைத்துள்ளார். அதனால் இலங்கை அரசியல் நிலையும் ஸ்திரம் அடைந்துள்ளது. ஜெயலலிதா ஆதரவு வழங்கினாலும் வழங்காவிட்டாலும் மத்திய அரசை அது எவ்விதத்திலும் பாதிக்காது. இது இலங்கைக்கு நன்மையளிப்பதாகவே உள்ளது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 6மணிக்கு இடம்பெறும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 5மணிக்கு இடம்பெறும் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக் கூடைப்பந்தாட்டத் திடலில் பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதவுள்ளது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியைஎதிர்த்துயாழ்.இந்து மகளிர்கல்லூரி(வெள்ளை) அணி மோதவுள்ளது. யாழ்.இந்து மகளிர் கல்லூரிக் கூடைப்பந்தாட்டத் திடலில் பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் 13 வயதுப்பிரிவுப் பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (கு-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சக்திவேல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (கு-23-108)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து மடத்தடி வைகறை 'ஏ' விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (கு-23)

* * *

யாழ்ப்பாணம் ஜூன் 7
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் சிவகுருநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

# 17 வயது பெண்கள் வலைப்பந்து சம்பியனானது அராலி சரஸ்வதி

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடமாகாணப் பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில்அராலி சரஸ்வதி மகா வித்தியாலயஅணி 24:13என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணியை எதிர்த்துபுனிதஜோசப்வாஸ்மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 27:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (கு-23-422-108-433)




அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி



யாழ்ப்பாண பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக பெண்களுக்கான எல்லே போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி 06:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. (கு-23)

## காங்கேசன் ஐக்கியம் வெற்றி



யாழ்ப்பாணம், ஜூன் 7
மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (கு-23)

## மன்னார் பிறிமியர் லீக் போட்டி இன்று ஆரம்பம்

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகம் 4 ஆவது வருடமாக நடத்தும் மன்னார் பிறிமியர் லீக் 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை மன்னார்பொது விளையாட்டுமைதானத்தில் நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்ட அணிக்கும் யாழ். மாவட்ட அணிக்குமிடையிலான சிறப்புப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியின்போது வீரர்களினால் அடிக்கப்படும் ஆறு ஓட்டங்களை எல்லைக்கோட்டுக்கு வெளியில் இருந்து பிடிக்கும் பார்வையாளர்களுக்குப் பணப்பரிசு வழங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து 8 ஆம் திகதி நடப்புச் சம்பியன் சென். அன்ரனிஸ் அணிக்கும் இந்து முன்னணி அணிக்குமிடையிலான போட்டிகளுடன் லீக் போட்டிகள் ஆரம்பமாகின்றன. மொத்தமாக 10 அணிகள் மோதும் இப்போட்டி வருகின்ற ஜூலை மாதம் 6 ஆம் திகதி முடிவடைகின்றது. (கு- 23)

## உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.



கடந்த புதன்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில்ஞானமுருகன்விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் திருக்குமாரன் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் திருக்குமாரன் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு-23)

# சண்டிலிப்பாய் இந்து அணி மாகாண மட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம் ஜூன் 7
வடமாகாண பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 28:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வடமராட்சி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் முருங்கன் மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் வடமராட்சி இந்துக் கல்லூரி அணி 29:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (கு-23-108-422)



சம்பியன் வென்ற அணியினர்

# இறுதிப் போட்டியில் ஷரபோவா, சிமோனா

பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் பிரிவில் மரியா ஷரபோவா, சிமோனா ஹலெப் ஆகியோர் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, கனடாவின் வீராங்கனை ஜுஜீன் பௌச்சார்ட் உடன் மோதி 4:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் செற்றில் தோல்வியடைந்த போதும் அடுத்த இரண்டு சுற்றுக்களிலும் 7:5, 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மற்றைய அரை இறுதிப் போட்டியில் ருமேனியா வீராங்கனை சிமோனா ஹலெப், ஜேர்மனி வீராங்கனை அன்றியா பெட்கோவிக்கை 6:2 , 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு செற்களிலும் வெற்றி பெற்றார். (த)



மரியா ஷரபோவா

சிமோனா ஹலெப்

# கவாஸ்கரின் சம்பளம்



கவாஸ்கர்

சூதாட்ட விவகாரம் பூதாகாரமாக உருவெடுத்ததன் காரணமாக இந்தியக் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கவாஸ்கருக்கு ஐ.பி.எல். ஊதியமாக ரூபா 21 லட்சம் வழங்கப்படுகிறது.

ஆறாவது ஐ.பி.எல். தொடரில் ஏற்பட்ட சூதாட்டம் காரணமாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்த ஸ்ரீனிவாசன் பதவியில் இருந்து விலகினார். இந்நிலையில் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி தலை வராக கவாஸ்கர் செயல்பட்டார். இதற்காக அவருக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டுமெனவும் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இதன்படி, ஐ.பி.எல். போட்டிகளின் முதற்கட்ட தொடருக்காக, 24 நாள்கள் கவாஸ்கர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்தார். நாள் ஒன்றுக்கு ரூபா 90 ஆயிரம் என்ற கணக்கில் அவருக்கு ரூ. 21 லட்சம் ஊதியமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (த)

# காயத்தால் அவதிப்படும் ரொனால்டோ

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 12ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில், நட்சத்திர ஆட்டக்காரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ காயத்தில் சிக்கியுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியில் போர்த்துக்கல் அணி தனது தொடக்க ஆட்டத்தில் 16ஆம் திகதி ஜேர்மனியை சந்திக்கிறது. இந்நிலையில் இந்த அணியின் சிறந்த ஆட்டக்காரரான ரொனால்டோ, தொடையிலும், இடது கால் முட்டியிலும் வலியால் அவதிப்படுவதாக போர்த்துக்கல் உதைபந்தாட்டச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அதனால் இவர் உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இருப்பினும் அவரது உடல்தகுதி குறித்து கவலைப்படத் தேவையில்லை, உலகக்கிண்ண போட்டிக்குள் உடல்தகுதியை எட்டி விடுவார் என்று சக வீரர் நானி நம்பிக்கை தெரிவித்துள்ளார். (த)



ரொனால்டோ

# பங்களாதேஷ் அணி தயார்




பங்களாதேஷ் அணியில் வேகப் பந்து வீச்சாளர் தாஸ்கின் அகமது, மிதுன் அலி ஆகிய புதுமுகங்கள் அந்த அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வேகப் பந்து வீச்சாளர் ருபெல் ஹுசைனுக்கு இடமில்லை.

பங்களாதேஷ் அணி வீரர்கள்:- முஷ்பிகுர் ரஹிம் (அணித் தலைவர்), தமிம் இக்பால், அனமுல் ஹக், ஷம்சூர் ரகுமான், மொமினுல் ஹக், ஷகிப் அல் ஹசன், நசிர் ஹுசைன், மக்முதுல்லா, மிதுன் அலி, அப்துர் ரசாக், மோர்தாசா, சோஹக் காஜி, ஜியார் ரகுமான், அல் அமின் ஹுசைன், தாஸ்கின் அகமது. (த)

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதும் ஒரு நாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்ட நிலையில், பங்களாதேஷ் அணியும் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்திய அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்து 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 15,17,19 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள . இந்திய அணி சுரேஷ் ரெய்னா தலைமையில் களமிறங்கவுள்ளது.

# முதலிடத்தில் கோஹ்லி



கோஹ்லி

ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் விராட் கோஹ்லி முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை டுபாயில் வெளியிட்டது. இதில் அணிகளுக்கான தரவரிசையில், இந்திய அணி (112 புள்ளி) 2ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றிய இலங்கை அணி (112), தசம புள்ளிகள் வித்தியாசத்தில், 2ஆவது இடத்துக்கு முன்னேறியது. ஆஸ்திரேலிய அணி 115 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் விராட் கோஹ்லி முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டார். இந்திய அணித்தலைவர் டோனி 6ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

மற்றொரு வீரர் ஷிகர் தவான் 8ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். ரோகித் சர்மா 20ஆவது இடத்துக்கு முன்னேறினார். இலங்கை வீரர் டில்ஷான் 9ஆவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்துக்கு முன்னேறினார். தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ், ஆஸ்திரேலியாவின் ஜோர்ஜ் பெய்லி முறையே 2 ஆவது மற்றும் 3ஆவது இடங்களில் உள்ளனர். (த)

# மஹேல - குக் வாக்குவாதம்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற 5ஆவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து வீரர் ஜோஸ் பட்லரை ஆட்டமிழப்புச் செய்த விதம் தொடர்பில் மஹேல ஜெயவர்த்தனவுக்கும் இங்கிலாந்து அணித் தலைவர் குக்கிற்கும் இடையில் வாக்குவாதமேற்பட்டுள்ளது.

இது குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் அலிஸ்டர் குக் கூறுகையில் -

இந்த ரன் அவுட் மூலம் இலங்கை அணி கட்டுப்பாட்டுக் கோட்டை மீறிவிட்டது. டெஸ்ட் போட்டிகளின்போது இதனால் சற்று சலசலப்பான சூழ்நிலைகள் ஏற்படும். இது தவிர்க்க முடியாததே. இதற்குப் பதிலடியாக கிரிக்கெட் ஆட்டம் தான் இருக்கவேண்டும். பேசிய வார்த்தைகள் திறமையான ஆட்டமாக மாறவேண்டும். மீண்டும் இதனைச் செய்வேன் என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறுகிறார் என்றால் ஒரு தலைவராக தனது தலைமையிலான அணி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் அவர் கவனிப்பது அவசியம்-என்றார்.

இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறுகையில்,

'அவரது ஓடும் வேகத்தை நிறுத்த என்னதான் செய்வது இதைத் தவிர? அதனால்தான் இப்படி ரன் அவுட் செய்ய முடிவெடுத்தோம் என்றார். ஜெயவர்த்தன கூறுகையில்,

முதல் எச்சரிக்கைக்கு முன்பே கூட இருமுறை அவரை எச்சரித்தோம், பட்லரும், ஜோர்டானும் பந்து வீசும் முன்பாக கிரீஸை விட்டு கொஞ்சம் அதிகமாகவே முன்னேறுகின்றனர் என்று கூறினோம். மீண்டும் மீண்டும் அவர்கள் இதனைச் செய்யவே நாங்கள் ரன் அவுட் செய்ய முடிவெடுத்தோம். வேறு வழியில்லை. நடுவர்களிடமும் எச்சரித்தோம், ஆனால் அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் அவர்கள் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. எனவே நாங்கள் சரியான முடிவை எடுக்கத் தள்ளப்பட்டோம். நாங்கள் எப்போதும் சரியான உணர்வுடனேயே ஆடி வருகிறோம், ஆனால் எதிரணியினர் விதிமுறைகளை மீறும்போது நாங்கள் இப்படிச் செய்ய நேரிடுகிறது. இது துரதிர்ஷ்டவசமானதே என ஜெயவர்த்தன தெரிவித்தார். (த)



# கோஹ்லியுடன் ஆடியமை மறக்க முடியாத அனுபவம்




ஐ.பி.எல். போட்டியில் அடித்த சதத்தை விட டெஸ்ட் போட்டியில் குவித்த 35 ஓட்டங்களையே சிறந்ததாகக் கருதுகிறேன் என்று சஹா கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டியில் 115 ஓட்டங்கள் விளாசி பஞ்சாப் அணியின் இளம் வீரர் விருத்திமான் சஹா அணியை வெற்றி வாய்ப்புக்கு அருகில் கொண்டு சென்றார்.

ஐ.பி.எல் போட்டியில் அடித்த சதத்தை விட டெஸ்ட் போட்டியில் கொஹ்லியுடன் இணைந்து விளையாடியதே சிறந்ததாக உள்ளது என்று கூறிய சஹா இது பற்றி மேலும் கூறுகையில், ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் சதம் அடித்தது பெருமை அளிக்கிறது.

ஆனாலும் இந்தச் சதத்தை விட 2012 ஆம் ஆண்டு அடிலெய்டில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் எடுத்த 35 ஓட்டங்களே சிறந்ததாக மதிப்பிடுகிறேன்.

அந்த டெஸ்டில் 6ஆவது இலக்குக்கு விராட் கோஹ்லியுடன் இணைந்து 100 ஓட்டங்களுக்கு மேலாகத் திரட்டியது என்றும் மறக்க முடியாதது. மேலும் அவரது முதலாவது டெஸ்ட் சதத்துக்கு எனது ஒத்துழைப்பை அளித்தேன்.

இது எனது 2ஆவது டெஸ்ட் தான். இருப்பினும் 35 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தாலும், இந்தப் போட்டி மூலம் உயர்ந்த நிலை ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வந்துள்ளது என்று கூறியுள்ளார். (த)



# யுவராஜின் தந்தைக்கும் புற்றுநோய்

இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் புற்றுநோயில் இருந்து மீண்டு வந்த நிலையில், அவரது தந்தை தற்போது புற்றுநோயால் அவதிப்படுகிறார்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்தியா உலகக் கிண்ணம் பெற காரணமாக இருந்த யுவராஜ் சில நாள்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

பின் முழுவதும் குணமடைந்து 2012 இல் மீண்டும் இந்திய அணியில் இடம் பெற்றார்.இந்நிலையில் தற்போது இவரது தந்தை யோக்ராஜ் சிங் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

யுவராஜின் ஆலோசனைப்படி அமெரிக்கா சென்ற யோக்ராஜ் சிங்குக்கு அறுவைச் சிகிச்சை முலம் குரல் வளையில் உள்ள புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டது.

மேலும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும், முழுமையாகச் சரியாகும் வரை பேச வேண்டாம் என மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் அவரது மனைவி சத்வீர் கூறியுள்ளார். (த)

# சேவாக்கை புகழும் டிராவிட்




இந்திய அணியில் நிறைய உற்சாகங்களைக் கொண்டு வந்தவர் வீரேந்திர சேவாக் என்று ராகுல் டிராவிட் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஈ.எஸ்.பி.என்.கிரிக் இன்போவின் மொடர்ன் மாஸ்டர்ஸ் என்ற புதிய காணொளியில் பேசிய டிராவிட், சேவாக் பற்றி நினைத்தால், அவர் இந்திய அணிக்குள் கொண்டு வந்த மகிழ்ச்சிகளையே நான் குறிப்பிடுவேன், அவருடன் விளையாடுவது பெரும் மகிழ்ச்சி தரும் நிகழ்வாகும், அதே போல் ரசிகர்களிடத்தில் அவர் ஏற்படுத்திய உற்சாகமும் குறிப்பிடத்தகுந்தது.

என்னைப் பொறுத்த வரையில் ஆரம்ப வீரர் ஆடும் விதங்களைப் பல வகையில் மாற்றி அமைத்தவர் சேவாக், ஆரம்ப வீரர் எப்படி ஆடவேண்டும் என்ற பார்வையை மாற்றியவர்.

மட்டையை அவர் உயர்த்திப் பிடித்து ஆடும் விதம், நேரான, அசையாத தலை, மட்டை செல்லும் விதம் ஆகியவை பந்து மட்டையின் நடுப்பகுதியில் படுவதைத் தீர்மானித்தது.

அவர் தடுத்தாடும்போது கூட முழு மட்டையும் பந்தின் மீது இறங்கும். அரைகுறையாக மட்டையைக் கொண்டு செல்ல மாட்டார். அவர் பந்து செல்லும் திசைக்குச் சரியாகச் செல்லாவிட்டாலும் மட்டையைச் சரியாக பந்து செல்லும் திசைக்கு எடுத்து சென்று ஆடுவார்.

சில ஆடுகளத்தில் 'பந்தைப் பார் அடி' என்ற உத்தி எடுபடாமல் போனது. ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அவர் ஒரு சிறந்த டெஸ்ட் வீரர் என்பதில் ஐயமில்லை என்று புகழ்ந்து தள்ளியுள்ளார். (த)

# எனக்கு ஏமாற்றமே

தென்னாபிரிக்க அணியின் டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பு தனக்குக் கிடைக்கவில்லை என்பது பெரிய ஏமாற்றமாக உள்ளது என்று ஏ.பி.டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

கிரேம் ஸ்மித் ஓய்வு அறிவித்ததையடுத்து. ஹஷிம் அம்லா டெஸ்ட் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அம்லா, டிவில்லியர்ஸ் இடையே டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பிற்கு கடும் போட்டி நிலவி வந்தது.

இந்நிலையில் தனக்கு அணித் தலைவர் பொறுப்பு வழங்கப்படாமை குறித்து டிவில்லியர்ஸ் கூறியதாவது:

நான் டெஸ்ட் அணித் தலைவர் இல்லை என்பது எனக்குப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது.எல்லோருக்கும் கனவுகளும் நம்பிக்கைகளும் இருக்கும் அது நிறைவேறும் என்ற ஆசையும் இருக்கும். நான் சூழ்நிலையை புரிந்து கொள்கிறேன். ஆனால் இந்த ஏமாற்றம் எனக்கும் அம்லாவுக்கும் இடையே வராமல் நான் பார்த்துக் கொள்வேன்.

இது எனது ஆட்டத்தையும், அணியில் எனது பொறுப்பையும் பாதித்தால் அது முட்டாள்தனமானது.அம்லாவுக்கு எனது வாழ்த்துக்கள், எனது முழு ஒத்துழைப்பு அவருக்கு எப்போதும் உண்டு என்றார் டிவில்லியர்ஸ்.

ஹசிம் அம்லாவை அணித் தலைவராக்க மூத்த வீரர்கள் ஆதரவு பெருமளவு இருந்ததாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, டேல் ஸ்டெய்ன், மோர்னி மோர்கல், டு பிளசி, டுமினி ஆகியோர் அம்லா அணித் தலைவராவதை விரும்பியதாகத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஓய்வு பெற்ற ஸ்மித், மற்றும் ஜக் கலீஸ் ஆகியோரும் அம்லாவை அணித் தலைவராக்க விரும்பியதாகவும் தெரிகிறது. (த)



**தொண்டமானாறு தனு வெளியீட்டகம்**

எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் தரம்-5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சையின் மூன்றாவது பரீட்சை 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணிக்கு வழமை போல நடைபெறும்.

*இரண்டாவது பரீட்சையில் பரிசில்களைப்பெற்ற மாணவர்விபரம் 17 ஆம் பக்கத்தில்.

உதயன்
0215671111

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்
*A/L 2015/2016*
கலை வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| B.St | - | B.S.பசில் |
| Acc | - | S.தவா |
| Eco | - | P.பிரதாப் |
| Che | - | M.A.நிரோஜன் |
| Bio | - | R.குகானந்தன் |
| Phy | - | S.சசி |
| Tamil | - | S.சிவா |
| Geo | - | S.ஜீன்சியா |
| Poli-Sci | - | P.லிகோறி |
| Log | - | S.றொகேசியன் |

➤Gra3-O/L வரை
➤Eng.Med 6 to 11 } நடைபெறுகின்றது.

**தேசிய ஆங்கில டிப்ளோமா**



அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் சுயமாக ஆங்கிலம் பேசும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இப்பயிற்சிநெறியில் தொழில் புரிவோர்,பாடசாலை மாணவர்கள்,வீட்டுப்பெண்கள்,பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 12 வயதிற்கு மேற்பட்ட எவரும் இணைந்து பயிற்சிபெறமுடியும்!

11.06.2014 இற்குமுன் பதிவுசெய்யும் அனைவருக்கும் 20 புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுவதுடன் பயிற்சிக்கட்டணத்தில் 50% கழிவு வழங்கப்படும்

பயிற்சியில் இணைபவர்கள் எவரும் தாம் விரும்பியநாட்களில், விரும்பிய நேரத்தில் வகுப்புகளுக்கு சமூகமளிக்கமுடியும்!

வகுப்புகளுக்குவர நேரமற்றோர் வீட்டிலிருந்தபடியே 20 புத்தகங்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்து அனுப்பினால் போதுமானது!

கிளிநொச்சி,முல்லை,வவுனியா,மன்னார் மாவட்ட மாணவர்கள் தபால்மூலம் இப்பயிற்சியை தொடரமுடியும்.

பயிற்சிநெறிமுடிவில் "Diploma in English" Certificate வழங்கப்படும்.

SAAMSON LANGUAGE SCHOOL
171, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.